ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1890/31 - 2014 නොවැම්බර් මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.11.27
*1890/31 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வட மாகாண மாகாண சபை**

*2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வட மாகாண மாகாண சபையின் நிதி நியதிச் சட்டம்*

வட மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி, திட்டமிடல் அமைச்சருமாகிய கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் ஆகிய நான், வட மாகாண மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் 1 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வட மாகாண மாகாண சபையின் நிதி நியதிச் சட்டத்தினை முழுமையாக பொதுமக்களின் தகவலுக்காக இத்தால் வெளியிடுகின்றேன். இந்நியதிச் சட்டம், 2014, ஓகத்து மாதம் 05 ஆந் திகதியன்று வட மாகாண மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது என்பதும் இதற்கான கௌரவ ஆளுநரின் சம்மதம் 2014, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி பெறப்பட்டுள்ளது என்பதும் 2014, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதியில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதும் இத்தால் அறியத்தரப்படுகிறது.

க. வி. விக்னேஸ்வரன்,
முதலமைச்சரும் நிதி மற்றும்
திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, வீதி அபிவிருத்தி,
மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், நீர்வழங்கல், கூட்டுறவு
அபிவிருத்தி, சமூக சேவைகள், புனர்வாழ்வளித்தல், மகளிர்
விவகாரம், தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு,
சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், உணவு வழங்கலும்
விநியோகமும் அமைச்சரும்,
வட மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் செயலகம்,
இல. 26, சோமசுந்தரம் வீதி,
யாழ்ப்பாணம்,
2014, நவெம்பர் 19.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**வட மாகாணத்தின் நிதி நியதிச் சட்டம்**

*1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்திற்கு அமைவாக, வரிகளையும் கட்டணங்களையும் விதிப்பதற்கும் சேகரிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் அவற்றோடு உறவுபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு நியதிச் சட்டம்*

இந்நியதிச் சட்டம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனவு வரிச் சட்டத்தினதும், திருத்தப்பட்டவாறான 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தினதும், திருத்தப்பட்டவாறான 1912 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மதுவரிக் கட்டளைச் சட்டத்தினதும், திருத்தப்பட்டவாறான 1957 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பரிசுப் போட்டி கட்டளைச் சட்டத்தினதும், திருத்தப்பட்டவாறான 1947 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மாநகர கட்டளைச் சட்டத்தினதும் திருத்தப்பட்டவாறான 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தினதும், திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தினதும், குறித்த சில ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவற்றதாகும். இவ்விடயம் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின் தொடர்புடைய பொருத்தமான ஏற்பாடுகளின்பால் கவனத்திற்கு உட்படுத்தப்படுகிறது.

கடந்த 3 தசாப்த காலத்தில் இயற்கை அனர்த்தங்களாலும் மனிதச் செயற்பாட்டு அழிவுகளாலும் வட மாகாண மக்கள் துன்பப்பட்டிருக்கிறார்கள் என்ற வகையிலும்,

வட மாகாணத்தின் சிவில் நிர்வாகம் செயற்றிறன் அற்றும் வட மாகாண மக்களுக்கான ஆகக்குறைந்த சேவை வழங்குதல் மற்றும் பரிபாலனம் செய்தல் பாரதூரமாக பாதிக்கப்பட்டும் தடைப்பட்டும் இருந்தமையாலும்,

கடந்த காலத்தில் அனுபவித்த துன்பங்கள் மற்றும் அழிவுகளிலிருந்து வட மாகாண மக்கள் துயராற உதவும் நோக்குடன் அவர்களின் அத்தியாவசிய தேவைகளை வெளிப்படுத்துவது வட மாகாண சபையின் பிரதான கடமை என்றவகையிலும்,

வட மாகாண மக்கள் திருப்திகரமான வாழ்க்கைத்தரத்தை பெறும் வகையிலான அடிப்படை உட்கட்டுமான வசதிகளை அபிவிருத்தி செய்வதும் பரிபாலனம் செய்வதும் மற்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதும் மிக இன்றியமையாதது ஆகையாலும்,

அத்தகைய உட்கட்டுமான அபிவிருத்தி மற்றும் பரிபாலனம் அத்தியாவசிய சேவைகளை வழங்குதல் போன்ற கருமமாற்றுதல்கள் மாகாண நிர்வாகத்திற்குப் பருமட்டான அளவிலான நிதியினை தேவைப்படுத்துவதாலும்,

வட மாகாண சபை வரிகள், தீர்வைகள் மற்றும் கட்டணங்களை குறிக்கப்பட்ட நோக்கத்திற்காக விதிப்பதற்கான அதிகாரத்தை பெற்றிருக்கும் அதேவேளை அநாவசியமானதும் அநீதியானதுமான வரிவிதிப்புக்கள் வட மாகாண மக்கள் மீது பெரும் சுமையை கொண்டுவரும் என்பதில் மிக ஆழமான கரிசனை கொண்டிருப்பதுடன்,

வட மாகாண சபை அதன் மக்களுக்கு அத்தியாயவசிய சேவைகளை வழங்குவதற்கான சில வருமானங்களை திரட்டுவதற்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனாலும்,

வட மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*குறுந்தலைப்பும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

1. (1) இந்நியதிச் சட்டம் 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வட மாகாணத்தின் நிதி நியதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். அத்துடன் அதன் ஏற்பாடுகளும் பாகங்களும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதியில் அல்லது நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(2) அமைச்சர் இந் நியதிச் சட்டத்தின் வெவ்வேறு பாகங்களையும் பகுதிகளையும் நடைமுறைக்கு கொண்டு வருதற்கான வெவ்வேறு திகதிகளை நியமிக்கலாம்.

**பாகம் அ**

அத்தியாயம் I

***நிர்வாகம்***

*வட மாகாண வருமானத் திணைக்களத்தை ஸ்தாபித்தல்.*

2. (1) இந்நியதிச் சட்டத்தின் நோக்கத்திற்கென ஒரு திணைக்களம் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். இது வட மாகாண வருமானத் திணைக்களம் என அறியப்படும். (இதனகத்துப்பின்னர் வருமானத் திணைக்களம் எனக் குறிப்பிடப்படும்) இது இந் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை வினைத்திறனுடனும் அக்கறையுடனும் செயற்படுத்துவதாக இருக்கும்.

(2) இவ்வருமானத் திணைக்களத்திற்கு ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் அவர் வட மாகாண அரசிறை ஆணையாளர் (இதனகத்துப்பின்னர் அரசிறை ஆணையாளர் என குறிப்பிடப்படுவார்) என அறியப்படுவார். அவர் வருமானத் திணைக்களத்தின் தலைவராகவும் இருப்பார்.

(3) வருமானத் திணைக்களம் இந்நியதிச் சட்ட பிரமாணங்கள் மற்றும் வேறு ஏதாவது அதன் கீழான நியதிச் சட்ட நடைமுறைகளுக்குரிய முறையானதும் வினைத்திறன் மிக்கதுமான நிதி நிர்வாகத்துக்கு வட மாகாண சபையின் அமைச்சரவை ஊடாக வட மாகாண சபைக்கு பொறுப்புக்கூறுவதாக இருத்தல் வேண்டும்.

(4) நியதிச் சட்டத்தின் வினைத்திறனான அமுலாக்கத்தின் தேவைக்கு அமைய ஒரு பிரதி வருமான ஆணையாளர் மற்றும் சிரேஷ்ட வரிமதிப்பாளர் அல்லது வரிமதிப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

(5) இந்நியதிச் சட்டத்தின் மூலம் ஆணையாளருக்கு வழங்கப்படுகின்ற அல்லது விதிக்கப்படுகின்ற அல்லது பணிக்கப்படுகின்ற ஏதாவது அதிகாரம் அல்லது கடமை அல்லது தொழிற்பாட்டினை அத்தகைய ஆணையாளர் வரிமதிப்பாளர் ஒருவருக்கு செயலாற்றுவதற்கு, நிறைவேற்றுவதற்கு அல்லது தொழிற்படுவதற்கு அதிகாரம் அளிக்க முடியும்.

(6) இந்நியதிச் சட்டத்தின் ஏதாவது ஒரு பிரமாணத்தின் மூலம் ஆணையாளர் ஒருவர் தமக்கு விதிக்கப்பட்ட அல்லது உறுதிப்படுத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட அதிகாரம் அல்லது தொழிற்பாட்டினை ஒரு வரிமதிப்பீட்டாளர் செயற்படுத்தும் பொழுது, நிறைவேற்றும் பொழுது அல்லது செயலாற்றப் பணிக்கும் போது அது அத்தகைய அனைத்து நோக்கங்களுக்குமான செயலாற்றுவதற்கு, நிறைவேற்றுவதற்கு அல்லது செயலாற்ற பணிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டதாக கருதப்படும். அத்தகைய அதிகாரம் அதனோடு தொடர்புடைய வேறுபாடுகள் நிரூபிக்கப்படும் வரை இருக்கும்.

(7) இந்நியதிச் சட்டத்தின் மூலம் வரிமதிப்பாளர் ஒருவருக்கு விதிக்கப்பட்ட அல்லது அவருக்கென உறுதிப்படுத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதாவது அதிகாரம், கடமை அல்லது தொழிற்பாட்டினை ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளர் செயற்படுத்த, நிறைவேற்ற அல்லது நிறைவேற்ற பணிக்க முடியும்.

## பாகம் ஆ

## அத்தியாயம் II

## மொத்த விற்பனை வரவு வரியினை விதித்தல்

*மொத்த விற்பனை வரவு வரியினை விதித்தல்.*

3. (1) பாராளுமன்றத்தால் ஆக்கப்படும் சட்டத்தின் மூலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லைகளுக்கும், விலக்களிப்புகளுக்கும் இந்நியதிச் சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் அமைவாக ஒவ்வொரு காலாண்டிற்காகவும் மாகாணத்தில் வணிகம் எதனையும் கொண்டு நடாத்துகின்றவரான ஆள் ஒவ்வொருவரிடமிருந்தும் அந்த வணிகத்திலிருந்து அந்த ஆளினால் அக்காலாண்டில் பெறப்பட்ட மொத்த விற்பனை தொடர்பில் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் காலத்திற்குக் காலம் சட்டத்தினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்திலான வரியொன்று இறுத்தற்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் ''மொத்த விற்பனை வரவு வரி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக ''வணிகம்'' என்பது ஏதேனும் வியாபாரப் பொருளை காலத்திற்கு காலம் சட்டத்தினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மொத்த விற்பனை மூலம் அல்லது சில்லறை விற்பனை மூலம் விற்றல் என்று பொருளாகும். ஆயினும், உற்பத்தியாளர் ஒருவரினால் செய்யப்படும் விற்பனை ஒன்றை உள்ளடக்காது.

*ஆளொருவர் மொத்த விற்பனை வரி இறுத்தற்படற் பாலராகும் சூழ்நிலை.*

4. (1) ஆள் ஒருவர் மாகாணத்தில் தம்மால் கொண்டு நடாத்தப்படுவதான ஏதேனும் வணிகம் தொடர்பில் ஒவ்வொரு காலாண்டிற்காகவும் மொத்த விற்பனை வரவு வரி இறுத்தற்படற்பாலராதல் வேண்டும்.

(2) ஆள் ஒருவர் தம்மால் கொண்டு நடாத்தப்படுவதற்கான ஏதேனும் வணிகம் தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி இறுத்தற்படற்பாலதாக இருக்குமிடத்தும், அந்தத் தொழிலின் சொத்தாண்மையில் மாற்றம் ஏற்படுமிடத்தும் உட்பிரிவு (1) இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் முன்னைய சொந்தக்காரரிடமிருந்து வரியை அறவிட முடியாதவிடத்து அந்த வணிகத்தின் புதிய சொந்தக்காரரானவர் சொத்தாண்மை மாறுவதற்கு முன்னர் அந்த வணிகத்திற்கு அவரே சொந்தக்காரராக இருந்தார் போன்று மொத்த விற்பனை வரவு வரி இறுத்தற்படற்பாலராதல் வேண்டும்.

அத்தியாயம் III

**விலக்களிப்புகள்**

மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து விலக்களித்தல்.

5. (1) அமைச்சரானவர், மாகாணத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமானதென அவர் அபிப்பிராயப்படின் எவரேனுமாளினால் கொண்டு நடாத்தப்படுவதான ஏதேனும் வணிகத்தை அல்லது குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வணிகத்தை வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் மொத்த விற்பனை வரவு வரியில் இருந்து விலக்களிக்கலாம்.

(2) உட்பிரிவு (1) இன் கீழான கட்டளை ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியன்று அல்லது அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று வலுவிற்கு வருதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதி ஒன்றினுள் அல்லது அத்தகைய காலப்பகுதியினுள் மாகாண சபைக் கூட்டமெதுவும் நடைபெறாவிடின், அத்தகைய காலப்பகுதி முடிவடைந்த பின்னர் நடைபெறும் முதலாவது மாகாண சபைக் கூட்டத்தில் அத்தகைய கட்டளை அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என்ற பிரேரணை ஒன்றின் மூலம் மாகாண சபையின் முன்னர் கொணரப்படுதலும் வேண்டும்.

(3) மாகாண சபை அங்கீகரிக்க மறுக்கும் ஏதேனும் கட்டளை அத்தகைய கட்டளையின் செல்லுபடியாகும் தன்மைக்குப் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளை எத்திகதியன்று ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

அத்தியாயம் IV

**மொத்த விற்பனை வரவு**

மொத்த விற்பனை வரவு.

6. (1) இந்நியதிச் சட்டத்தின் நோக்கத்துக்காக, "மொத்த விற்பனை வரவு" என்பது, ஏதேனும் வணிகம் தொடர்பாக, அந்த வணிகம் ஏதேனும் பொருளை விற்பதன் மூலம் செய்து கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மூலமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்படற்பாலதான மொத்தத் தொகை எனப் பொருள்படும்.

(2) உட்பிரிவு (1) இன் நோக்கங்களிற்காக, வணிகத்தின் "மொத்த விற்பனை வரவு" என்பது, மூலதன இருப்புக்களை விற்றதனால் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான தொகையை உள்ளடக்காது இருத்தல் வேண்டும்.

(3) ஏதேனும் காலாண்டில் பெறப்படற்பாலதான தொகை மீது வரி செலுத்தப்பட்டுள்ளதாயின் அத்தொகை உள்ளவாறு பெறப்பட்ட காலாண்டில் அதன் மீதான வரி செலுத்தப்படவேண்டிய அவசியமில்லை.

(4) காலாண்டு ஒன்றிற்காக ஒரு வணிகத்தின் மொத்த விற்பனை வரவை நிச்சயிப்பதில், அக்காலாண்டின் போது அறவிடமுடியாக்கடன் ஒன்றாக வந்துள்ளதாய் அவ்வணிகத்தினால் இறுக்கப்பட்ட ஏதேனும் அறவிடமுடியாக்கடனிற்குச் சமனானதும், முன்னைய ஒரு காலாண்டிற்கு அவ்வணிகத்தின் விற்பனை வரவில் உள்ளடக்கப்பட்டுள்ளதும், மொத்த விற்பனை வரவு வரி செலுத்தப்பட்டுள்ளதுமான தொகை கழிக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், அறவிடமுடியாக்கடன் ஒன்று தொடர்பில் இவ் உட்பிரிவின் கீழ் முன்னர் கழிக்கப்பட்ட ஒரு தொகையின் கணக்கால் அவ் வணிகத்தினால் ஏதேனும் காலாண்டில் பெறப்படும் ஏதேனும் பணத்தொகை அப்பணத்தொகை எக்காலாண்டில் பெறப்படுகின்றதோ அக்காலாண்டிற்கு அவ் வணிகத்தின் மொத்த விற்பனை வரவில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

அத்தியாயம் V

**வரி வீதம்**

மொத்த விற்பனை வரவு வரி வீதம்.

7. (1) ஏதேனும் வணிகம் தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி வீதமானது அத்தகைய வணிகத்தின் தன்மையினைத் தொடர்புபடுத்தி பார்ப்பதன் மூலம் தீர்மானிக்கப்படலாம் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய வரியின் வெவ்வேறு வணிகங்களில் வெவ்வேறு வகுப்புகள் அல்லது விவரணங்கள் தொடர்பாக சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படலாம்.

(2) ஏதேனும் வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த வணிகம் தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி வீதமானது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் காலத்திற்குக்காலம் அமைச்சரினால் வேறுபடுத்தப்படலாம்.

(3) உட்பிரிவு (1) இன் கீழான ஒவ்வொரு தீர்மானமும் அத்துடன் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதான ஒவ்வொரு கட்டளையும், அது வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதியன்று அல்லது அத்தகைய தீர்மானத்தில் அல்லது கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியில் வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன், கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதக் காலப்பகுதிக்குள்ளாக அல்லது அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக மாகாண சபைக் கூட்டம் எதுவும் நடைபெறவில்லையாயின், அத்தகைய தீர்மானம் அல்லது கட்டளை அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என்ற பிரேரணை ஒன்றின் மூலம் அத்தகைய காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் நடைபெறும் மாகாண சபையின் முதலாவது கூட்டத்தில் மாகாண சபையின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அப்பிரேரணை எந்தத் தீர்மானம் அல்லது கட்டளை பற்றியதாக உள்ளதோ அந்தத் தீர்மானத்தின் அல்லது கட்டளையின் உள்ளடக்கம் அத்தகைய பிரேரணைக்கான அட்டவணையில் தரப்படுதல் வேண்டும்.

(4) மாகாண சபை அங்கீகரிக்க மறுப்பதான (1) ஆம் உட்பிரிவின் கீழான தீர்மானம் எதுவும், அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை எதுவும், அதன் கீழ் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாந்தன்மைக்கு பங்கம் இன்றி, அத்தகைய மறுப்புத் திகதியிலிருந்து ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும், அத்தகைய ஏதேனும் தீர்மானம் அல்லது கட்டளை ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படும் திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

8. அமைச்சரானவர், பொது நலனைக்கருத்திற் கொண்டு வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான ஏதேனும் பொருளை இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக விலக்கப்பட்ட பொருள் ஒன்றாக வெளிப்படுத்தலாம். வெவ்வேறான வகுப்புகளை அல்லது விபரங்களைச் சேர்ந்த வணிகங்கள் தொடர்பில் வெவ்வேறு பொருட்கள் விலக்கப்பட்ட பொருட்களாக வெளிப்படுத்தப்படலாம். *விலக்கப்பட்ட பொருட்கள்.*

9. பொருள் அல்லது சேவை வழங்கல் ஒன்று 8 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் வகுப்பை அல்லது விவரணத்தை சேர்ந்த வணிகம் தொடர்பில் விலக்களிக்கப்படற்பாலதான பொருளொன்றாக அல்லது சேவை வழங்கல் ஒன்றாக வெளிப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய பொருளின் விற்பனையினால் அல்லது அத்தகைய சேவை வழங்கல் வணிகத்தினால் தேறிய பெறப்பட்ட பணத்தொகை தொடர்பில் மொத்த வீற்பனை வரவு வரியேதும் செலுத்தப்படற்பாலதாதலாகாது. *விலக்கப்பட்ட பொருள் மீது மொத்த விற்பனை வரவுவரி கிடையாது.*

## அத்தியாயம் VI

## ***விவரத்திரட்டுகள்***

10. (1) வரிமதிப்பீட்டாளர் ஒருவர் தனது தீர்மானத்தின் மூலம் வீற்பனை புரள்வு வரியினை விதிக்கப்படுவதற்கு உரியவர் எனக் கணிக்குமிடத்து அத்தகைய ஆள் ஒருவருக்கு அவ் வரிமதிப்பீட்டாளரினால் குறிக்கப்படும் காலத்திற்குள் அத்தகைய வரி தொடர்பான விபரங்களை வழங்குமாறு எழுத்துருவிலான அறிவித்தல் ஒன்றை வழங்க முடியும். *விவரத்திரட்டுகளும், தகவலும்.*

(2) வரிமதிப்பீட்டாளர் ஒருவர் எழுத்திலான அறிவித்தல் மூலம் வரிமதிப்பீட்டாளரின் தீர்ப்பின்படி மொத்த விற்பனை வரவு வரி இறுத்தற்படற்பாலதாகவுள்ள ஒருவரை, மேற்குறிப்பிட்ட 1 ஆம் உப பிரிவில் குறிக்கப்பட்ட காலத்திற்குள்ளாக வரி மதிப்பீட்டாளருக்கு தேவைப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்டதான விபரத்திரட்டினைக் கொடுத்துதவுமாறு பணிக்கலாம்.

(3) எவரேனும் ஆளினால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வணிகத்திலிருந்து பெறப்பட்ட மொத்த விற்பனை வரவு தொடர்பிலான முழுத் தகவல்களையும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக, வரிமதிப்பீட்டாளர் அத்தகைய ஆளை,

(அ) அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்படக் கூடியவாறானவையும் அவரது உடைமையில் உள்ளவையுமான 26 (5) ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவையும், அத்தகைய எவையேனும் புத்தகங்களை, கணக்குகளை, வியாபாரப் பட்டியல்களை, இருப்பு பட்டியல்களை, இடாப்புகளை, உறுதிச் சீட்டுக்களை, காசோலைகளை, பணம் செலுத்தும் துண்டுகளை, கணக்காய்வாளர் அறிக்கைகளை அல்லது வேறு ஆவணங்களை பரிசோதனைக்கென முன்வைக்குமாறும் அல்லது வரிமதிப்பீட்டாளருக்கு அனுப்புமாறும் ;

(ஆ) அந்த வணிகம் தொடர்பில் மொத்த விற்பனை வரவு பற்றி விசாரணை செய்யப்படும் நோக்கத்திற்கென அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடத்திலும் அத்தகைய நேரத்திலும், அத்தகைய திகதியிலும் நேரில் அல்லது அதிகாரம் பெற்றவரான பிரதிநிதி ஒருவர் மூலம் வருகை தருமாறும் தேவைப்படுத்தி அத்தகைய ஆளிற்கு எழுத்தில் அறிவித்தல் ஒன்றினை வழங்கலாம்.

(4) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக , ஆணையாளர் எழுத்துமூல அறிவித்தலினால் எவரேனும் ஆளிற்கு அத்தகைய ஆளை,

(அ) அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவையும் அவரது உடைமையிலுள்ளவையுமானவையும், 26 (5) ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவையும், அத்தகைய எவையேனும் புத்தகங்களை, கணக்குகளை, வியாபாரப்பட்டியல்களை, இடாப்புக்களை, உறுதிச்சீட்டுக்களை, காசோலைகளை, பணம் செலுத்தும் துண்டுகளை, கணக்காய்வாளர் அறிக்கைகளை அல்லது வேறு ஆவணங்களை முன்வைக்குமாறும் அல்லது அத்தகைய ஆணையாளருக்கு அனுப்புமாறும் ;

(ஆ) அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் கருமம் பற்றி அல்லது கருமங்களைப் பற்றி விசாரணை செய்யப்படுவதற்காக, அறிவித்தலில் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய இடத்திற்கும் அத்தகைய நடத்தும் திகதியிலும் அத்தகைய நேரத்திலும் நேரில் அல்லது அதிகாரம் பெற்றவரான பிரதிநிதி ஒருவர் மூலம் வருகை தருமாறும் ,

தேரவைப்படுத்தி எழுத்தில் அறிவித்தல் ஒன்றினை வழங்கலாம்.

(5) உட்பிரிவு (4) இன் கீழ் வழங்கப்பட்டதான அறிவித்தல் ஒன்றிற்கு இணங்கியொழுகி வருகை தந்துள்ளவரான ஆளொருவரிற்கு அவ்வாறு வருகை தருவதில் அவரால் நியாயமாகக் கூறப்பட்ட செலவு ஆணையாளரால் அனுமதிக்கப்படலாம்.

பிரதி ஆணையாளர் ஒருவர் அல்லது ஆணையாளர் ஒருவரின் அங்கீகாரத்துடன் வரி மதிப்பீட்டாளர் ஒருவர் இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பிடித்து வைத்திருத்தல் அவசியமான வரையில், எவையேனும் புத்தகங்களை, கணக்குகளை, வியாபாரப் பட்டியல்களை, கையிருப்புப் பட்டியல்களை, இடாப்புகளை உறுதிச் சீட்டுக்களை, காசோலைகளை, பணம் செலுத்தும் துண்டுகளை, கணக்காய்வாளர் அறிக்கைகளை அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ள அல்லது முன்வைக்கப்பட்ட அல்லது அவருக்கு அனுப்பிக் கிடைத்த அல்லது வேறு வகையில் உடைமையில் கிடைத்த வேறு ஆவணங்களை தமது கட்டுக்காவலில் அவ்வாறு பிடித்து வைத்திருக்கலாம்.

(6) வரிமதிப்பீட்டாளர் ஒருவர் தாம் அவசியமானதெனக் கருதும் அத்தனை தடவைகளும் எவரேனும் ஆளிற்கு அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதான காலத்திற்குள்ளாக,

(அ) முழுமையான அல்லது மேலதிக விபரத்திரட்டுகளை; அல்லது

(ஆ) வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியினை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதாக உள்ள அல்லது தொடர்புடையதாக உள்ள ஏதேனும் கருமம் தொடர்பான முழுமையான அல்லது மேலதிக தகவல்களை கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தும் எழுத்திலான அறிவித்தலை வழங்கலாம்.

(7) எவரேனும் ஆளினால் அல்லது எவரேனும் ஆள் சார்பில் இந்நியதிச் சட்டத்தின் கீழ் கொடுத்துதவப்பட்டதாகக் கொள்ளப்படுவதான ஒரு விபரத்திரட்டு, கூற்று அல்லது படிவம் எல்லா நோக்கங்களுக்குமாக எதிர்மறுப்பு விடயத்திற்கு ஏற்ப நிரூபிக்கப்பட்டாலன்றி அந்த ஆளினால் அல்லது அவரின் அதிகாரத்தின் பேரில் கொடுத்துதவப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் விபரத்திரட்டில், கூற்றில் அல்லது படிவத்தில் ஒப்பமிடும் எவரேனும் ஆள் அதனுள் அடங்கியுள்ள கருமங்கள் எல்லாவற்றையும் அறிந்து கொண்டவராகவே கருதப்படுதல் வேண்டும்.

(8) எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வரிமதிப்பீட்டாளர் ஒருவரினால் அவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து ஆணையாளர் எழுத்திலான அறிவித்தல் ஒன்றின் மூலம் :-

(அ) பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு தண்டத்தை அத்தகைய ஆள் மீது சுமத்தலாம் ; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆள்;

(i) அத்தகைய தண்டத்தை செலுத்துமாறும் ; அத்துடன்

(ii) வரி மதிப்பீட்டாளரினால் அவரிற்கு கொடுக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விபரத்திரட்டை, ஆணையாளரின் அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் கொடுத்து உதவுமாறும், தேவைப்படுத்தலாம்.

*(9)* எவரேனும் ஆள் விபரத்திரட்டு ஒன்றை கொடுத்துதவுவதற்குத் தவறியுள்ளமை தனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளின் காரணமானது என்றும் தண்டம் சுமத்தப்பட்ட பின்னர் தாம் அத்தகைய விபரத்திரட்டை கொடுத்து உதவியுள்ளாரெனவும் ஆணையாளரின் திருப்திக்கு அத்தகைய ஆள் நிரூபிப்பார் ஆயின், ஆணையாளர் இப்பிரிவின் கீழ் அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தண்டத்தை குறைக்கலாம் அல்லது விட்டுவிடலாம்.

*(10)* உட்பிரிவு *(8)* இன் கீழ் எவரேனும் ஆள் மீது தண்டம் ஒன்று சுமத்தப்படுமிடத்து அவ்வறிவித்தல் தொடர்பாக *32* ஆம் பிரிவின் கீழான தவறொன்றுக்கான குற்ற வழக்கொன்றுக்கு அவர் ஆளாதலாகாது.

*(11)* பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் ஆவணங்கள் என்று குறிப்பிடும் போது அவை *26 (5)* ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட சகல ஆவணங்களையும், மின்னணு சாதனங்களையும் உள்ளடக்கும்.

அத்தியாயம் VII

### *வரிமதிப்பீடுகள்*

*11. (1)* எவரேனும் ஆள் *10* ஆம் பிரிவின்படி மொத்த விற்பனை வரி செலுத்தப்படற்பாலதாக ஏதாவது ஒரு காலாண்டுக்கு விபரத் திரட்டொன்றை சமர்ப்பித்து அத்தகைய விபரத்திரட்டினை வரி மதிப்பீட்டாளர் சரியென ஏற்கும் பட்சத்தில் வரிமதிப்பீட்டாளர் அத்தகைய வணிகத்திற்குரிய மொத்த விற்பனை வரியினை கணிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அவ் ஆள் வரி மதிப்பீட்டாளரால் குறிக்கப்படும் காலத்தில் அக்காலாண்டுக்குரிய அத்தகைய வரியினை செலுத்துமாறும் மதிப்பீட்டாளர் எழுத்துமூலமான அறிவிப்பொன்றினை வழங்குதலும் வேண்டும்.

வரிமதிப்பீடு செய்வதற்கு வரி மதிப்பீட்டாளருக்கு உள்ள தத்துவம்.

*(2)* அவ்வாறு *1* ஆம் உப பிரிவின்படி கணிக்கப்பட்ட ஆளொருவருக்குரிய காலாண்டுக்கான வரி மதிப்பீட்டுத் தொகை *12* ஆம் பிரிவிற்கு அமைவாக அவ் ஆளினால் செலுத்தப்படக்கூடிய அக்காலாண்டுக்குரிய மொத்த விற்பனை வரித் தொகையாக கருதப்பட வேண்டும்.

*(3)* மொத்த விற்பனை வரவு வரி இறுத்தப்படற்பாலராயிருந்து ஏதேனும் காலாண்டு தொடர்பில் *10* ஆம் பிரிவின் கீழ் விபரத்திரட்டு குறித்த அவ் ஆளுக்குரிய வணிகத்துக்கான மிகச் சரியான விற்பனை வரவினைப் பிரதிபலிக்கவில்லை எனக் கருதி வரி மதிப்பீட்டாளர் அத்தகைய விபரத்திரட்டினை ஏற்காதவிடத்து அவ் ஆளுக்குரிய மொத்த விற்பனைவரியினை வரிமதிப்பீட்டானது மதிப்பீடு செய்து வரி மதிப்பீட்டாளரின் தீர்ப்பின்படி அத்தகைய ஆளினால் செலுத்தப்படக்கூடிய மொத்த விற்பனை வரியினை மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்குள் செலுத்தப்பட வேண்டுமென எழுத்து மூலமான அறிவித்தலொன்றை வரி மதிப்பீட்டாளர் வழங்குதல் வேண்டும்.

வரிமதிப்பீட்டாளர் விபரத்திரட் டொன்றினை ஏற் றுக்கொள்ளாமைக் கான காரணங் களைக் கொடுத்தல்.

*(4)* *10* ஆம் பிரிவின் பிரகாரம் வரி மதிப்பீட்டாளர் ஒருவர் விபரத் திரட்டினை ஏற்றுக்கொள்ளாது வரி மதிப்பீடு ஒன்றினையோ அல்லது மேலதிக வரி மதிப்பீட்டினையோ *3* ஆம் உப பிரிவின் பிரகாரம் மேற்கொண்டு பதிவு தபால் மூலமாக அத்தகைய ஆளுடன் விபரத் திரட்டினை ஏற்றுக்கொள்ளாததற்கான அத்தகைய காரணத்தினை அறிவித்தலும் வேண்டும்.

*(5)* *10* ஆம் பிரிவின் கீழ் மொத்த விற்பனை வரி செலுத்தப்படற்பாலதான எவரேனும் ஆள் அத்தகைய வரியினை செலுத்தத் தவறுமிடத்து வரி மதிப்பீட்டாளர் அத்தகைய ஆளுக்குரிய வரி மதிப்பீட்டினை மேற்கொண்டு வரி மதிப்பீட்டாளரின் தீர்ப்பின்படி அத்தகைய ஆளினால் செலுத்தப்படவேண்டிய குறித்த காலாண்டுக்குரிய வரி மதிப்பீட்டுத் தொகையினை வரி மதிப்பீட்டாளரினால் குறிக்கப்படும் காலத்தினுள் செலுத்துமாறு அத்தகைய ஆளுக்கு எழுத்துமூலமான அறிவித்தலை வழங்க வேண்டும்.

*(6)* எவரேனும் ஆளின் பேரில் ஒரு காலாண்டுக்கென *(5)* ஆம் உப பிரிவின்படி மதிப்பிடப்பட்ட அத்தகைய தொகையானது *12* ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அத்தகைய ஆளினால் செலுத்தப்படவேண்டிய அக்காலாண்டுக்குரிய மொத்த விற்பனை வரியாக கொள்ளுதல் வேண்டும்.

அத்தியாயம் VIII

***வரிக் கொடுப்பனவு***

*மொத்த விற்பனை வரவு வரிக் கொடுப்பனவு.*

*12. (1)* எவரேனும் ஆள் 11 ஆம் பிரிவின்படி வரி மதிப்பீட்டாளரினால் அவ்வாளுக்குரிய வணிகம் தொடர்பாக குறித்த காலாண்டுக்குரிய வரித்தொகை ஒன்றை செலுத்தக் கோரும் அறிவித்தலில் உள்ளபடியான தொகையினை அவ் ஆள் மூன்று மாதங்களுக்குள் செலுத்துதல் வேண்டும்.

(2) எவரேனும் ஆள் (1) ஆம் உபபிரிவின்படியான வரித்தொகையினை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தத் தவறுமிடத்து அத்தகைய செலுத்தப்படாத வரி தவணை தவறியதாக கருதப்படவேண்டும். என்பதுடன் அவ்வரியை யாரொருவர் செலுத்தவேண்டுமோ, அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர்களால் இவ்வரி செலுத்தப்பட வேண்டுமோ அல்லது கூட்டு வியாபாரம் செய்பவர்களாயின் அதில் பங்காளிகளாக இருக்கும் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் கீழ் உரிய தவணைக்குள் வரி செலுத்தத் தவறியவர்களென்று கருதப்படுவர்.

*13. (1)* மொத்த விற்பனவு வரவு வரியை செலுத்தத் தவறுகின்றவிடத்து, அவ் மொத்த விற்பனவு வரவு வரி இறுத்தப்படற்பாலரானவர் செலுத்த வேண்டிய வரியையும், தண்டப்பணமாக பின்வரும் தொகைகளையும் செலுத்த வேண்டும்.

(அ) அவரிடமிருந்து வருமதியாக உள்ளதான மொத்த விற்பனவு வரித்தொகையில் நூற்றுக்கு பத்து வீதத்திற்கு சமனான தொகையும் ;

(ஆ) நிலுவையாக இருக்கும் வரி குறித்த மாதத்தின் தொடர்ச்சியாக வரும் அடுத்த மாதத்தின் பதினைந்தாம் திகதிக்குள் செலுத்தப்படாதுவிடின், தொடந்துவரும் ஒவ்வொரு மாதமும் பதினைந்தாம் திகதி வரைக்குமான காலத்திற்கு அல்லது நிலுவையாக இருக்கும் மாதத்தின் பகுதிக்கு நிலுவையாக இருக்கும் தொகைக்கு நூற்றுக்கு இரண்டு வீதப்படி தண்டப்பணம் அறவிடப்படும்.

இந்த உட்பிரிவின் பிரகாரம் அறவிடப்படக்கூடிய ஆகக்கூடிய தண்டப்பணம் ஆனது செலுத்தப்பட வேண்டிய முழு வரித்தொகையிலும் நூற்றுக்கு ஐம்பது வீதத்தை மீறலாகாது.

விசேட சந்தர்ப்பங்கள் காரணமாக குறித்த நிலுவைகள் ஏற்பட்டுள்ளன என்று ஆணையாளர் திருப்தியடைவாராகில் குறித்த தொகையை தள்ளுபடி செய்தல் அல்லது குறைத்து விடுதல் நீதியானதும் நியாயமானதுமாக கருதப்படும்.

(2) 79 ஆம் பிரிவின்படி மேன்முறையீடு ஒன்றில் வழங்கப்பட்ட இறுதி தீர்மானத்தின்படி உட்பிரிவு (1) இன் கீழ் செலுத்தப்படாத வரியுடன் ஏதேனும் சேர்க்கப்பட்ட தொகைகள் கழிக்கப்பட்டால் அவ்வாறு கழிக்கப்பட்ட வரியின் அடிப்படையிலேயே அத்தொகையோ அல்லது தொகைகளோ கணிப்பிடப்படுதல் வேண்டும்.

*மேலதிக வரி மதிப் பீடுகள்.*

*14.* வரி மதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி ஏதேனும் காலாண்டு தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி இறுத்தற்படற்பாலராயிருந்து அந்தக் காலாண்டுக்கான மொத்த விற்பனை வரியாக செலுத்தப்பட்டதான தொகை அந்தக் காலாண்டுக்கென அந்த ஆளினால் செலுத்தப்படற்பாலதான முறையான தொகையைவிட குறைவானதாக இருக்குமிடத்து வரி மதிப்பீட்டாளரானவர் அத்தகைய காலாண்டிலிருந்து இரண்டு வருடங்களுக்குள் எவ்வேளையிலும் வரி மதிப்பீட்டாளரின் தீர்மானத்தின்படி அத்தகைய ஆளினால் செலுத்தப்படவேண்டியதான தொகையினை வரிமதிப்பீடு செய்தல் வேண்டும் என்பதுடன் எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய வரிமதிப்பீடு பற்றிய அறிவித்தலையும் மேலதிகமாக விதிக்கப்படும் மதிப்பீட்டுக்கான காரணத்தையும் எழுத்துமூலமாக அறிவித்தல் வேண்டும்.

*மதிப்பீட்டாளரின் மேலதிக மதிப் பீடு தவறிய தவணை வரியாகக் கருதப்படல்.*

*15.* ஏதேனும் காலாண்டிற்கென எவரேனும் ஆள் தொடர்பில் 14 ஆம் பிரிவின் கீழ் வரிமதிப்பீடொன்று செய்யப்படுமிடத்து, அவ்வாறு வரிமதிப்பீடு செய்யப்பட்டதான தொகைக்கும் அந்தக் காலாண்டுக்கான மொத்த விற்பனவு வரியாக அந்த ஆளால் செலுத்தப்பட்டதான தொகைக்கும் இடையில் உள்ள வித்தியாசம் அந்தக் காலாண்டுக்காக தவணை தவறியதாக உள்ள மொத்த விற்பனவு வரவு வரியாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய ஆள் 12 ஆம் பிரிவின் கீழ் அந்தக் காலாண்டிற்கென எத்திகதியிலிருந்து அந்த வரியினைச் செலுத்தியிருக்க வேண்டுமோ அத்திகதியிலிருந்து அந்தத் தொகை தொடர்பில் 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான தண்டத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

அத்தியாயம் IX

## வரிமதிப்பீடுகளின் இறுதியான தன்மையும் செம்மையற்ற விவரத்திரட்டுக்களுக்கான தண்டமும்

*வரி மதிப்பீடுகள் அல்லது திருத்தப் பட்ட வரி மதிப்பீடு கள் இறுதியான வையாக இருத்தல்.*

16. மொத்த விற்பனை வரவு வரி தொடர்பாக வரிமதிப்பீடொன்றுக்கெதிராக இந் நியதிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட காலத்துள் செல்லுபடியான மேன்முறையீடு எதுவும் குறிப்பிடப்படாதவிடத்து, அல்லது அத்தகைய வரித்தொகையினை 77 (5) ஆம் பிரிவின் கீழ் உடன்பாட்டுக் கொண்டுள்ளவிடத்து, அல்லது மேன்முறையீட்டின் மீது தீர்மானிக்கப்பட்டுள்ளவிடத்து, விடயத்திற்கேற்ப மேன்முறையீட்டின் மீது செய்யப்பட்ட அல்லது உடன்பட்டுக் கொள்ளப்பட்ட அல்லது குறைக்கப்பட்ட அல்லது அதிகரிக்கப்பட்ட அல்லது உறுதி செய்யப்பட்ட வரிமதிப்பீடு, அத்தகைய வரித்தொகை தொடர்பாக இந்நியதிச் சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் இறுதியானதுமாக முடிவானதுமாதலும் வேண்டும்.

ஆயின், ஏதேனும் காலாண்டுக்கென மேன் முறையீட்டின் மீது தீர்மானிக்கப்பட்டதான கருமம் எதனையும் திரும்பவும் பரிசீலனைக்கு எடுப்பதை உள்ளடக்காதுவிடின் அந்தக் காலாண்டுக்கென அவ்வரி மதிப்பீடு ஒன்றை அல்லது மேலதிக வரிமதிப்பீடு ஒன்றை செய்வதிலிருந்து வரிமதிப்பீட்டாளர் ஒருவரை இச்சட்டத்திலுள்ள எதுவும் தடுப்பதாகாது.

அத்தியாயம் X

## சிறப்பு விடயங்களும் தண்டங்களும் குற்றங்களும்

*இயலாதவராகவுள்ள ஆளிற்காக யார் செயலாற்றலாம் என்பது.*

17. எவரேனும் ஆளினால் செய்யப்பட வேண்டும் என இந்நியதிச் சட்டத்தினால் அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டதான ஏதேனும் செயல் அல்லது காரியம், அத்தகைய ஆள் இயலாத ஒருவராயின் அவரின் நம்பிக்கைப் பொறுப்பாளரினால் செய்யப்படல் வேண்டும்.

*பங்குடைமை ஒன்றின் சார்பில் முந்திய பங்காளர் செயலாற்றுதல்.*

18. எவரேனும் ஆளினால் செய்யப்பட வேண்டும் என இந்நியதிச் சட்டத்தினால் அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டதான ஏதேனும் செயல் அல்லது காரியம், பங்குடைமையிலுள்ள இருவரின் அல்லது இருவரிற்கு அதிகமானவர்களின் விடயத்தில் அத்தகைய பங்குடைமையின் முந்திய பங்காளரினால் செய்யப்படல் வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயின், பங்குடைமையொன்றின் முந்திய பங்காளர் என்ற தன்மையில் இந்நியதிச் சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ் அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்டுள்ளவரான எவரேனும் ஆள் அத்தகைய பங்குடைமையில் தாம் பங்காளர் ஒருவர் அல்லரென அல்லது இலங்கையிலுள்ள வேறு ஆள் ஒருவரே அதன் முந்திய பங்காளர் என நிரூபித்தாலொழிய அவர் அப்பங்குடைமையின் முந்திய பங்காளராகவே கருதப்படுவார்.

*கம்பனியொன்றின் சார்பில் அல்லது ஆட்கள் யாக்கம் சார்பில் செயற்படு வதற்கான பிரதான அலுவலர்.*

19. (1) கூட்டிணைக்கப்பட்டதாயினும் சரி, கூட்டிணைக்கப்படாததாயினும் சரி ஒவ்வொரு கம்பனியினதும், அல்லது ஆட்கள் கொண்ட யாக்கத்தினதும், செயலாளர், முகாமையாளர், பணிப்பாளர் அல்லது வேறு பிரதான அலுவலர் அத்தகைய கம்பனி அல்லது யாக்கத்தினால் இச்சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ் செய்யப்படவேண்டிய செயற்பாடுகளையும் கருமங்களையும் அல்லது விடயங்களையும் செய்வதற்குப் பொறுப்புடையவராய் இருத்தல் வேண்டும்.

ஆயின், கம்பனி ஒன்றின் சார்பில் அல்லது ஆட்கள் யாக்கமொன்றின் சார்பில் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அறிவித்தல் வழங்கப்பட்டுள்ள எவரேனும் ஆள், அக்கம்பனியுடன் அல்லது ஆட்கள் யாக்கத்துடன் தமக்கு எந்தத் தொடர்பும் இல்லையென அல்லது இலங்கையில் வதியும் வேறு ஆள் ஒருவரே அதன் பிரதான அலுவலர் என நிரூபித்தாலொழிய அந்த ஆளே அதன் பிரதான அலுவலராகக் கருதப்படுவார்.

(2) கூட்டிணைக்கப்பட்டதாயினும் சரி அல்லது கூட்டிணைக்கப்பட்டததாயினும் சரி, கம்பனியொன்றினால் அல்லது ஆட்கள் யாக்கமொன்றினால் இந்நியதிச் சட்டத்தின் கீழ் தவறொன்று புரியப்பட்டுள்ளவிடத்து அத்தவறு புரியப்பட்டுள்ள காலத்தில் அக்கம்பனியின் அல்லது ஆட்கள் யாக்கத்தின் செயலாளராக, முகாமையாளராக, பணிப்பாளராக அல்லது வேறு பிரதான அலுவலராக இருந்த ஆள் ஒவ்வொருவரும் அத்தவறு தமது அறிவுக்கு எட்டாமல் புரியப்பட்டதெனவும், அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்காக எல்லாச் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப அவர் பிரயோகித்திருக்கவேண்டிய அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்திருக்கிறார் எனவும் நிரூபித்தாலன்றி அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

வணிகம் ஒழிவுறும் விடயத்தில் மொத்த விற்பனை வரியினைச் செலுத்துவதற்குள்ள பொறுப்பு.

20. (1) இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அமைய காலாண்டொன்றின் மொத்த விற்பனவு வரவு வரி இறுத்தற்படற்பாலரான ஆள் ஒருவர் எந்த வணிகம் தொடர்பில் அவர் அத்தகைய வரி இறுத்தப்படற்பாலராக உள்ளாரோ, அந்த வணிகத்தின் எதனையும் கொண்டு நடத்தாது ஒழிந்துள்ளாராயினும் எது எவ்வாறாயிருப்பினும் வணிகத்தினை எந்தக் காலப்பகுதியில் கொண்டு நடாத்தினாரோ அந்தக் காலப்பகுதிக்கென அத்தகைய வரியினைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) வணிகம் ஒன்றினைக் கொண்டு நடத்துபவரான எவரேனும் ஆள் அத்தகைய வணிகத்தினை வேறு எவரேனும் ஆளிற்குக் கைமாற்றுமிடத்து, கைமாற்றுகைக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கென அத்தகைய வணிகம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் மொத்த விற்பனவு வரி கைமாற்றுபவரிடமிருந்து அறவிடப்பட முடியாததாக இருந்தால் கைமாற்றம் பெறுபவரின் மீது வரிமதிப்பீடு செய்யப்படாதிருப்பினும் கைமாற்றம் பெறுபவரிடமிருந்து அறவிடப்படலாம் என்பதுடன் மொத்த விற்பனை வரவு வரியினைச் சேகரித்தலும் அல்லது இறுத்தலும் பற்றிய இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

மொத்த விற்பனை வரவு வரி செலுத்துவதற்கு நிறைவேற்றுநருக்குள்ள பொறுப்பு.

21. (1) மொத்த விற்பனை வரவு இறுத்தப்படற்பாலரான எவரேனும் ஆள் இறக்குமிடத்து, அத்தகைய இறந்த ஆளின் இறக்குமிடத்து அத்தகைய இறந்த ஆளின் நிறைவேற்றுநர் அத்தகைய ஆள் இறந்த திகதிக்கு பின்னருள்ள எல்லாக் காலப்பகுதிகள் தொடர்பிலும் அந்த ஆள் உயிருடன் இருந்திருந்தால் அத்தகைய ஆளிடமிருந்து இறுத்தற்ப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆள் உயிருடன் இருந்திருந்தால் இந்நியதிச் சட்டத்தின் கீழ் செய்வதற்கு ஆளாகவிருந்திருக்கும் எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கு அவர் ஆளாதல் வேண்டும் ஆயின்,

(அ) இறந்த ஆளின் ஏதேனும் செயல் அல்லது தவறுகை தொடர்பில் நிறைவேற்றுநருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுதலாகாது ;

(ஆ) அத்தகைய ஆள் இறந்த திகதிக்கு முன்னருள்ள ஒரு காலப்பகுதி தொடர்பிலான வரிமதிப்பீடு அல்லது மேலதிக வரிமதிப்பீடு எதுவும் இறப்பு எக்காலாண்டின்போது சம்பவித்ததோ அக்காலாண்டு முடிவடைந்ததில் இருந்து மூன்று ஆண்டுகளின் பின்னர் செய்யப்படுதல் ஆகாது ;

(இ) இப்பிரிவின் கீழ் இறந்தவரினது நிறைவேற்றுநரிற்குள்ள பொறுப்பானது,

(i) இப்பிரிவின் கீழ் மொத்த விற்பனை வரவு வரிக்கான பொறுப்பு ஏற்படும் என்ற அறிவித்தல் அவருக்கு கொடுக்கப்பட்டதான திகதியில் அவரது உடைமையிலுள்ள அல்லது கட்டுப்பாட்டிலுள்ள இறந்த ஆளின் மரணச் சொத்து ; அத்துடன்

(ii) பயன்பெறுநர் ஒருவருக்குச் சென்றடையக் கூடியதான மரணச்சொத்தின் ஏதேனும் பாகம் என்பவற்றுக்கான பணத்தொகைக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(2) இறந்த ஆள் ஒருவரினது மரணச்சொத்தின் சார்பில் நிறைவேற்றுநர் ஒருவர் அத்தகைய மரணச் சொத்தின் ஒரு பாகமாகவுள்ள ஏதேனும் வணிகத்தைக் கொண்டு நடாத்துமிடத்து, அத்தகைய நிறைவேற்றுநர் அத்தகைய வணிகம் தொடர்பில் அத்தகைய ஆள் உயிரோடு இருந்திருந்தால் அவரிடமிருந்து இறுத்தற்படற்பாலதான மொத்த விற்பனவு வரவு வரி இறுத்தற்பாலராதல் வேண்டும்.

தமக்குச் சொந்தமாயில்லாததான வணிகம் தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி செலுத்துவதற்கு குறித்த சில ஆட்களிற்குள்ள பொறுப்பு.

22. எந்த வணிகம் தொடர்பில் மொத்த விற்பனவு வரவு வரி செலுத்தப்படற்பாலதாகவுள்ளதோ அந்த வணிகம் எவரேனும் வணிகம் ஆளினால் வேறு எவரேனும் ஆளின் சார்பில் அத்தகைய தொடர்பில் வேறு ஆளின் முகவர் என்ற வகையில் கொண்டு நடாத்தப்படுமிடத்து, அந்த வணிகம் தொடர்பில் பின்னர் கூறப்பட்ட ஆளிடமிருந்து இந் நியதிச் சட்டத்தின் கீழ் வரி இறுத்தற்படற்பாலதாகவிருக்கும் அதே முறையிலும், அதே தொகைக்கும் முதற்கூறப்பட்ட ஆள் மொத்த விற்பனை வரவு வரி இறுத்தற்படற்பாலராதல் வேண்டும்.

கூட்டுமுகவர்களும், நம்பிக்கைப் பொறுப்பாளர்களும், நிறைவேற்றுநர்களும்.

23. இரு ஆட்கள் அல்லது இருவரிற்கு அதிகமான ஆட்கள் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் என்ற தன்மையில் அல்லது இறந்த ஆள் ஒருவரினது மரணச் சொத்தின் நிறைவேற்றுநர்கள் என்ற தன்மையில் செயலாற்றுமிடத்து இந்நியதிச் சட்டத்தின் கீழ் அவர்களிடமிருந்து இறுத்தற்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரி கூட்டாகவும் தனித்தனியாகவும் இறுத்தற்படலாம் என்பதுடன் கூட்டாகவும், தனியாகவும் அத்தகைய வரியினைச் செலுத்துவதற்கு ஆளாதலும் வேண்டும்.

*கம்பனியொன்றின் ஒழித்துக் கட்டுதலின் மீது அல்லது ஆட்கள் யாக்கம் ஒன்றின் கலைத்தலின் மீது மொத்த விற்பனை வரவு வரி செலுத்துவதற்கு ஆளாகும் ஆட்கள்.*

24. (1) கம்பனிகள் கட்டளைச் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும் கம்பனியொன்றை ஒடுக்கப்படுமிடத்தும், அத்துடன் அக்கம்பனி செலுத்துவதற்கு ஆளாகும் ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி அறவிடப்பட முடியாததாயிருக்குமிடத்தும், அப்போதும் அத்தகைய வரி எந்தக் காலப்பகுதி தொடர்பில் இறுத்தற்படுகிறதோ, அந்தக் காலப்பகுதியின்போது எந்நேரத்திலும் கம்பனியின் பணிப்பாளராகவிருந்த ஒவ்வோராளும் வரி செலுத்துவதில் தவணை தவறியமை, கம்பனியின் அலுவல்கள் தொடர்பாக அவரைப் பொறுத்தளவில் ஏதேனும் மிகுந்த கவனமின்மை அல்லது கடமை மறுக்கைக்கு ஏற்றிக்கூற முடியாதென்பதனை நிரூபித்தாலன்றி அத்தகைய வரிக்கொடுப்பனவுக்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதல் வேண்டும் என்பதுடன் மொத்த விற்பனவு வரவு வரியின் சேகரிப்பும் அறவீடும் பற்றிய இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) ஆட்கள் யாக்கமொன்று கலைக்கப்படுமிடத்தும் அத்துடன் அவ்யாக்கம் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி அறவிடப்பட முடியாததாக இருக்குமிடத்தும், அப்போது அத்தகைய வரி எக்காலப்பகுதி தொடர்பில் இறுத்தற்படுகிறதோ அக்காலப்பகுதியின் போது அந்த ஆட்கள் யாக்கத்தின் உறுப்பினராகவிருந்த ஒவ்வோராளும், வரி செலுத்துவதில் தவணை தவறியமை கம்பனியின் அலுவல்கள் தொடர்பாக அவரைப் பொறுத்தளவில் ஏதேனும் மிகுந்த கவனமின்மை, பிறழ் செயல் அல்லது கடமை மீறுகைக்கு ஏற்றிக் கூறமுடியாதென்பதனை நிரூபித்தாலன்றி அத்தகைய வரிக் கொடுப்பனவுக்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதல் வேண்டும் என்பதுடன், மொத்த விற்பனை வரவு வரியின் சேகரிப்பும் அறவீடும் பற்றிய இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) எவரேனுமாளினால் செலுத்தப்படற்பாலானதான மொத்த விற்பனை வரவு வரித் தொகைக்கமைய குறைக்கும் அல்லது குறைக்கும் பயனைக் கொண்டதாகவிருக்கும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது கையுதிர்ப்பு உண்மையற்றவை அல்லது புனையப்பட்டவை என்றும் வரிமதிப்பீட்டாளர் அபிப்பிராயப்படுமிடத்து அவர் அத்தகைய ஏதேனும் கொடுக்கல் வாங்கலை அல்லது கையுதிர்ப்பை புறக்கணித்து விடலாம்.

இப்பிரிவில், ''கையுதிர்ப்பு'' என்பது, ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பை மானியக்கொடையை, உடன்பாட்டை, உடன்படிக்கையை அல்லது ஒழுக்கேற்பாட்டை உள்ளடக்கும்.

*வரி மதிப்பீட்டின் செல்லுபடியாகும் தன்மை.*

25. (1) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இருப்பதாகக் கொள்ளப்படுவதான அறிவித்தல் வரிமதிப்பீடு, சான்றிதழ் அல்லது வேறு வழக்கு நடவடிக்கை எதுவும் இந்நியதிச் சட்டத்தின் முன்னத்துக்கும் கருத்துக்கும் இயையவும் அல்லது இதற்கிணங்கவும் பொருளிலும் பயனிலும் இருப்பதாயின், அத்துடன் வரிமதிப்பீடு செய்யப்பட்ட ஆள், அல்லது வரிமதிப்பீடு செய்யப்பட முன்னப்பட்ட ஆள், அல்லது அதனால் பாதிக்கப்பட்ட ஆள் பொதுவான முன்னத்துக்கும் விளக்கத்துக்கும் இணங்க, அதில் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பின், படிவமுறையில் குறைபாடுள்ளது என்பதற்காக நீக்கப்படுதல் அல்லது வெறிதாகவோ வெறிதானதாக்கப்படற்பாலதாகவோ கருதப்படுதல் ஆகாது. அல்லது, அதன்கண் உள்ள பிழை, குறைபாடு அல்லது விட்டுவிடுகை காரணமாகப் பாதிக்கப்படுதல் ஆகாது.

(2) உட்பிரிவு (1) இன் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, அத்தகைய வரிமதிப்பீடு பற்றிய அறிவித்தலானது வரி இறுத்தப்பட முன்னப்பட்டுள்ளவரான ஆளிடம் முறையாகச் சமர்ப்பிக்கப்பட்டதாயும் பொருளிலும் பயனிலும் அவ் உட்பிரிவின் பந்தி (அ) இல் குறிப்பிடப்பட்ட விபரங்களை உள்ளடக்கியதாயும் இருப்பின்,

(அ) வரி இறுத்தற்படற்பாலரான ஆளின் பெயர் அல்லது மேற்பெயர் தொடர்பில், மொத்த விற்பனை வரவுத் தொகை தொடர்பில் அல்லது இறுக்கப்பட்ட மொத்த விற்பனை வரவுத் தொகை தொடர்பில், அதன்கண் உள்ள பிழை ஒன்றின் காரணத்தால் அல்லது ;

(ஆ) வரிமதிப்பீட்டிற்கும் அது பற்றிய அறிவித்தலுக்கும் இடையேயுள்ள ஏதேனும் வேறுபாடு காரணத்தால் வரி மதிப்பீடு எதுவும் பாதிக்கப்படுதலோ அல்லது கேள்விக்குட்படுத்தப்படுதலோ ஆகாது.

*கட்டடங்களில் அல்லது இடங்களில் தேடுதல் செய்வதற்குள்ள தத்துவம்.*

26. (1) ஆணையாளரினால் அதற்கெனச் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்டவரான மாகாண பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் சமாதான அலுவலர் உடனிருக்க, பின்வரும் செயல்கள் எல்லாவற்றையும், அல்லது அவற்றுள் எவற்றையும் செய்யலாம்.

(அ) அவரது அபிப்பிராயப்படி, இந்நியதிச் சட்டத்தின் கீழான வழக்கு நடவடிக்கைகள் எவற்றிற்கும் பயன்படும் அல்லது இயைபானவையாகும் எவையேனும் கணக்குப் புத்தகங்கள், இடாப்புகள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் எந்தக் கட்டடத்தில்

அல்லது இடத்தில் காணப்படக்கூடுமென நம்புவதற்கு அவருக்கு காரணமுண்டோ அந்தக் கட்டடத்தினுள் அல்லது இடத்தினுள் சென்று தேடுதல் செய்யலாம் என்பதுடன், அவ்வாறு காணப்படின் அவற்றை சோதனையும் செய்யலாம் ;

(ஆ) அத்தகைய கணக்குப் புத்தகங்களை இடாப்புக்களை, பதிவேடுகளை அல்லது வேறு ஆவணங்களைக் கைப்பற்றலாம் அல்லது அவற்றின் மீது அடையாளங்காட்டும் குறிகளை இடலாம். அல்லது அவற்றிலிருந்து பொழிப்புக்களையோ அல்லது பிரதிகளையோ எடுக்கலாம் ;

(இ) அவரது அபிப்பிராயப்படி இச்சட்டத்தின் கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைக்குப் பயன்படுவதும் அல்லது இயைபானதும், இப்பிரிவின் கீழான ஏதேனும் தேடுதலின் போது கண்டெடுக்கப்பட்டதுமான வேறேதும் பொருள் பற்றிக் குறிப்பெடுக்கலாம் அல்லது பொருட்பட்டியல் தயாரிக்கலாம் அத்துடன், தேடுதல் பற்றிய 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டகோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இப்பிரிவின் கீழான தேடுதல்களுக்கு அத்துணை அளவுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும். இவ்வுட்பிரிவில் "சமாதான அலுவலர்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் உள்ள அர்த்தத்தையே கொள்ளும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் தத்துவங்களைப் பிரயோகிக்குமாறு எவரேனும் ஆளிற்கு அதிகாரமளிக்க முன்னர் ஆணையாளர் அவ் அலுவலரால் அத்தத்துவங்கள் பிரயோகிக்கப்படுவதை அவசியமாக்குகின்ற சூழ்நிலைகளைப் பதிதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) இன் கீழ் ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் கணக்குப் புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கைப்பற்றுமிடத்து அத்தகைய அலுவலர் தம்மால் கைப்பற்றப்பட்ட புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் குறித்துரைக்கும் குறிப்பறிக்கையொன்றை அந்த ஆளிற்கு வழங்குதல் வேண்டும்.

(4) உட்பிரிவு (1) இன் கீழ் எவரேனும் அலுவலரால் கைப்பற்றப்பட்ட ஏதேனும் கணக்குப் புத்தகம், இடாப்பு பதிவேடு அல்லது வேறு ஆவணம், அத்தகைய புத்தகத்தின், இடாப்பின், பதிவேட்டின் அல்லது வேறு ஆவணத்தின் நுண்ணாய்விற்காக அல்லது அத்தகைய புத்தகம், இடாப்பு பதிவேடு அல்லது வேறு ஆவணம் எந்த ஆளிற்குரியதோ அந்த ஆளிற்கெதிராக சட்ட நடவடிக்கைகள் தொடுப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான காலம் வரை அத்தகைய அலுவலரின் உடைமையில் வைத்திருக்கப்படலாம்.

(5) மேற்குறிப்பிட்ட உப பிரிவுகளில் உள்ள விடயங்கள், ஆவணங்கள், சாதனங்கள் /பதிவுகள் மற்றும் அனைத்து வகையான சேமித்து வைக்கப்பட்ட தரவுகள் மட்டுப்படுத்தப்பட்டதான இலத்திரனியல் காந்தவியல் குறிக்கப்பட்ட இறுவட்டுக்கள் , கணினிமென்பொருட்கள் மற்றும் வன்பொருட்கள் தவிர்ந்த தேக்கிவைக்கப்பட்டவையான எந்த வகையான அல்லது எந்த வடிவத்திலான தகவல்களையும் உள்ளடக்கும்.

வணிக இடங்களில் தேடுதல் செய்வதற் குள்ள தத்துவம்.

27. (1) ஆணையாளர் அல்லது ஆணையாளரால் அதற்கென எழுத்தில் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட மாகாண பகிரங்க சேவையிலுள்ள வேறு எவரேனும் அலுவலர் பின்வரும் செயல்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் செய்யலாம்.

(அ) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதனை நிச்சயிக்கும் நோக்கத்திற்கென, எவரேனும் ஆளினால் ஏதேனும் வணிகம் கொண்டு நடாத்தப்படும் இடத்தினுள் அல்லது கட்டடத்தினுள் சென்று சோதனையிடலாம் ;

(ஆ) ஏதேனும் கணக்குப் புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஏதேனும் ஆவணம் காணப்படக்கூடிய ஏதேனும் கொள்கலன்களைத் திறந்து பரிசோதனை செய்யலாம் என்பதுடன் அதன்கண் காணப்படும் பொருட்களுள் எவற்றினதும் பொருட் பட்டியல் ஒன்றையும் தயாரிக்கலாம் ;

(இ) அத்தகைய இடத்தில் அல்லது கட்டடத்தில் காணப்படும் ஏதேனும் கணக்குப் புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை, அல்லது வேறு ஆவணத்தை பரிசோதனை செய்யலாம் என்பதுடன் அவற்றின் பிரதிகளையும் எடுக்கலாம் அல்லது அவற்றிலிருந்து பொழிப்புக்களையும் எடுக்கலாம் ;

(ஈ) ஏதேனும் கணக்குப் புத்தகத்தை இடாப்பை பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தை உடைமையில் எடுக்கலாம் அல்லது அதன்மீது அடையாளம் காட்டும் குறிகளை இடலாம் ;

(உ) அத்தகைய இடத்தில் அல்லது கட்டடத்தில் காணப்பட்ட காசை எண்ணி உடனடியாக அதனைப் பதிந்து கொள்ளலாம் ;

(ஊ) அவர் அத்தகைய இடத்தில் அல்லது கட்டடத்தில் காணும் எந்த ஆளையும் இந்நியதிச் சட்டத்தின் கீழான கருமங்கள் தொடர்பில் அவரது தத்துவத்தில் உள்ளவாறான அத்தகைய தகவலைக் கொடுக்குமாறு தேவைப்படுத்தலாம்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் ஆணையாளர் அல்லது ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் எவரேனும் ஆளிடமிருந்து ஏதேனும் கணக்குப் புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது ஆவணத்தை தமது உடைமையில் எடுத்துள்ள புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது ஆவணத்தை குறித்துரைக்கும் குறிப்பறிக்கை ஒன்றை அந்த ஆளிற்கு வழங்குதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) இன் ஆணையாளர் அல்லது எவரேனும் அலுவலரால் கைப்பற்றப்பட்ட ஏதேனும் கணக்குப் புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் அத்தகைய புத்தகத்தின், இடாப்பின், பதிவேட்டின் அல்லது வேறு ஆவணத்தின் நுண்ணாய்விற்கு அல்லது அத்தகைய புத்தகம் இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் எந்த ஆளிற்குரியதோ அந்த ஆளிற்கெதிராக சட்ட நடவடிக்கை தொடுப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான காலம் வரை ஆணையாளர் அத்தகைய அலுவலரின் உடைமையில் வைத்திருக்கப்படலாம்.

(4) மேற்குறிப்பிட்ட உப பிரிவுகளில் உள்ள விடங்கள், ஆவணங்கள், சாதனங்கள், பதிவுகள் மற்றும் அனைத்து வகையான சேமித்து வைக்கப்பட்ட தரவுகள் மற்றும் இலத்திரனியல் காந்தவியல் குறுக்கப்பட்ட இறுவட்டுக்கள் கணினி மென்பொருட்கள் மற்றும் வன்பொருட்கள் உட்பட தேக்கி வைக்கப்பட்டவையான இவை மட்டுமன்றி வேறு எந்த வகையான அல்லது எந்த வடிவத்திலான தகவல்களையும் உள்ளடக்கும்.

28. (1) மொத்த விற்பனை வரவு வரி இறுத்தற்படற்பாலரான ஒவ்வோராளும் தமது வணிகத்தைக் கொண்டு நடாத்துவதில் தம்மால் செய்து கொள்ளப்படும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும் பின்வருவனவற்றைத் தருகின்ற உறுதிச்சீட்டொன்றைத் தயாரித்தல் அல்லது தயாரிப்பித்தல் வேண்டும். மொத்த விற்பனை வரவு வரி இறுத் தற்படற்பாலரான ஒவ்வொரு ஆளி னாலும் உறுதிச் சீட்டு தயாரிக்கப் பட்டு வழங்கப் படல் வேண்டும்.

(அ) அத்தகைய கொடுக்கல் வாங்கல் செய்து கொள்ளப்பட்ட திகதி ;

(ஆ) அத்தகைய கொடுக்கல் வாங்கலின் தன்மை ;

(இ) அத்தகைய கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான பணம் ; அத்துடன்

(ஈ) அத்தகைய கொடுக்கல் வாங்கல் எந்த ஆளுடன் செய்து கொள்ளப்பட்டதோ அந்த ஆளின் பெயரும் முகவரியும்.

(2) அத்தகைய உறுதிச்சீட்டின் மூலப்பிரதி அத்தகைய கொடுக்கல் வாங்கல் செய்து கொள்ளப்பட்ட ஆளிற்கு வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உறுதிச்சீட்டின் பிரதி அத்தகைய உறுதிச்சீட்டு எந்த ஆளினால் அல்லது எந்த ஆளின் சார்பில் தயாரிக்கப்பட்டதோ அந்த ஆளினால் அந்தக் காலாண்டு முடிவடைந்த பின்னர் ஐந்து ஆண்டுகள் கொண்டதொரு காலப்பகுதிக்கு வைத்திருக்கப்பட்டு, பேணிக்காக்கப்படுதலும் வேண்டும்.

(3) இப்பிரிவில் எது எவ்வாறு இருப்பினும் ஆணையாளர் வெவ்வேறு வணிகங்களில் கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட வேண்டிய படிவத்தையும் முறையையும் விதித்துரைக்கலாம்.

29. (1) மொத்த விற்பனை வரவு வரி இறுத்தற்படற்பாலரான ஒவ்வோராளும் தமது வணிகத்தைக் கொண்டு நடாத்துவதில் தம்மால் செய்து கொள்ளப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில், ஒவ்வொரு காலாண்டு தொடர்பிலும் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய இடாப்பு ஒன்றினை வைத்திருத்தலும், பராமரித்தலும் வேண்டும். கொடுக்கல் வாங் கல்கள் பற்றிய இடாப்பு.

(2) ஏதேனும் காலாண்டு தொடர்பில் எவரேனும் ஆளினால் வைத்திருக்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய இடாப்பு அக்காலாண்டு முடிவடைந்த பின்னர் ஐந்தாண்டுகளைக் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு அவரால் வைத்திருக்கப்பட்டுப் பேணிக்காக்கப்படுதல் வேண்டும்.

*இரகசியத்தை மீறுதலும் வேறு கருமங்களும் தவறுகளாதல்.*

30. (அ) பிரிவு 102 இன் கீழ் இரகசியத்தைக் கடைப்பிடிப்பதற்கான சத்தியத்தைச் செய்து கொள்ள வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டிருக்கும் ஆள் ஒருவராக இருந்து அத்தகைய சத்தியத்தைச் செய்து கொள்ளாது இந்நியதிச் சட்டத்தின் கீழ் செயலாற்றுகின்ற ; அல்லது

(ஆ) பிரிவு 102 இன் ஏற்பாடுகளிற்கு முரணாகச் செயலாற்றுகின்ற ; அல்லது

(இ) இப்பகுதியின் ஏற்பாடுகளிற்கு முரணாகச் செயலாற்றுவதற்கு வேறெவரெனும் ஆளிற்கு உதவி புரிகின்ற, உடந்தையாய் இருக்கின்ற அல்லது அந்த ஆளைத் தூண்டுகின்ற ஒவவோராளும் .

இந்நியதிச் சட்டத்தின் கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டாயிரம் ரூபாய்க்கு மேற்படாததொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களிற்கு மேற்படாத ஒரு காலத்திற்கு இருவகையில் ஒருவகையான மறியல் தண்டனைக்கு அல்லது குற்றப்பணம், மறியல் தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*மோசடி தொடர்பான தண்டனை ஏற்பாடுகள்.*

31. (அ) இந்நியதிச் சட்டத்தினது இப்பகுதியின் ஏற்பாடுகளிற்கிணங்க கேட்கப்பட்ட அல்லது தகவல்கள் பற்றித் தொகுக்கப்பட்ட வினாவிற்கு அல்லது ஏதேனும் வேண்டுகோளிற்கு வாய்மொழி மூலமாயினும் சரி எழுத்து மூலமாயினும் சரி ஏதேனும் பொய்யான விடை அளிக்கின்றவரும் ; அல்லது

(ஆ) இந்நியதிச் சட்டத்தினது இப்பகுதியின் கீழ் தயாரிக்கப்பட்ட அல்லது கொடுத்துதவப்பட்ட விபரத் திரட்டில் அவர் உள்ளடக்கி இருக்கவேண்டிய விபரங்களை அத்தகைய விபரத் திரட்டில் சேர்க்காது விடுகின்றவரும் ; அல்லது

(இ) இந்நியதிச் சட்டத்தினது இப்பகுதியின் கீழ் ஏதேனும் பொய்யான விபரத்திரட்டைத் தயாரிக்கின்றவரும், அல்லது ஏதேனும் விவரத்திரட்டில் பொய்யான பதிவீட்டைச் செய்கின்றவரும் அதன் மூலம் மொத்த விற்பனை வரவு வரியைத் தட்டிக்கழிக்கின்றவரும் அல்லது தட்டிக்கழிக்க எத்தனிக்கின்றவரும் அல்லது அத்தகைய வரியை தட்டிக்கழிப்பதற்கு அல்லது தட்டிக்கழிக்க எத்தனிப்பதற்கும் வேறு எவரேனும் ஆளிற்கு உதவகின்றவருமான எவரேனும் ஆள்

இந்நியதிச் சட்டத்தின் கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் .

(i) அத்தவறு எந்தக் காலாண்டு தொடர்பில் புரியப்பட்டதோ அந்தக்காலாண்டின் போது, விடயத்திற்கேற்றாற் போன்று அவர் அல்லது அவ்வாறு உதவப்பட்ட வேறு ஆள், இந்நியதிச் சட்டத்தின் கீழ் கொடுப்பதற்கு ஆளாகவுள்ள எந்த வரித் தொகையை அவ்வாறு தட்டிக்கழித்தாரோ அல்லது தட்டிக்கழிக்க எத்தனித்தாரோ அந்த வரித் தொகையின் இருமடங்கிற்குச் சமமானதொரு பணத்தொகையைக் கொண்டுள்ள குற்றப்பணத்திற்கும்; அத்துடன்

(ii) ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு பணத்தொகையைக் கொண்டுள்ள குற்றப்பணத்திற்கும் அல்லது ஆறு மாதங்களிற்கு மேற்படாதவொரு காலத்திற்கு இருவகையிலொரு வகையான மறியல் தண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியல் தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*விபரத்திரட்டு தொடர்பான தண்டனை ஏற்பாடுகள் என்பன.*

32. (அ) பிரிவு 10 இன் அல்லது 28 ஆம் பிரிவின் அல்லது 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ; அல்லது

(ஆ) பிரிவு 10 இன் கீழ் அல்லது 77 ஆம் பிரிவு அல்லது 91 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தல் ஒன்றின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ; அல்லது

(இ) பிரிவு 10 இன் கீழ் அல்லது 77 ஆம் பிரிவின் அல்லது 91 ஆம் பிரிவின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அறிவித்தல் ஒன்றிற்கிணங்க மாகாண அரசிறைத் திணைக்களத்தின் அலுவலர் ஒருவர் முன்னிலையில் தோன்றியும், அவரிடம் அத்தகைய அலுவலரால் சட்டமுறையாகக் கேட்கப்பட்ட ஏதேனும் வினாவிற்கு போதிய காரணமின்றி விடையளிக்கத் தவறுகின்ற ; அல்லது

(ஈ) மொத்த விற்பனை வரவு வரிக்கான அவரது சொந்தப் பொறுப்பை அல்லது வேறு எவரேனுமாயின் பொறுப்பைப் பாதிக்கின்ற ஏதேனும் கருமம் அல்லது காரியம் தொடர்பாக ஏதேனும் செம்மையற்ற தகவலைக் கொடுக்கின்ற ; அல்லது

(உ) ஆணையாளர் அல்லது வேறு எவரேனும் அலுவலர் 26 ஆம் பிரிவின் கீழ் அல்லது 27 ஆம் பிரிவின் கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அவரிற்கு வேண்டுமென்றே முட்டுக்கட்டை விடுகின்ற அல்லது அவரைத் தாமதப்படுகின்ற ; அல்லது

(ஊ) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு முரணாகச் செயலாற்றும்படி வேறு எவரேனும் ஆளிற்கு உதவிபுரிகின்ற, உடந்தையாயிருக்கின்ற அல்லது அந்த ஆளைத் தூண்டுகின்ற ;

ஒவ்வோராளும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவான் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாததொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களிற்கு மேற்படாததொரு காலத்திற்கு இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*தவறுகலை இணக்குதல்.*

33. ஆணையாளர் 30 ஆம் பிரிவின் கீழான அல்லது 31 ஆம் பிரிவின் கீழான அல்லது 32 ஆம் பிரிவின் கீழான ஏதேனும் தவறை இணக்கலாம் என்பதுடன், தீர்ப்பிற்கு முன்னர் அதன்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கலாம் அல்லது இணக்கலாம்.

*குற்ற வழக்குத் தொடுப்புகள் ஆணையாளரது அனுமதியுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.*

34. ஆணையாளரின் தூண்டுதலின் பேரிலன்றி அல்லது அவரது அனுமதியுடனன்றி 30 ஆம் பிரிவின் கீழ் அல்லது 31 ஆம் பிரிவின் கீழ் அல்லது 32 ஆம் பிரிவின் கீழுள்ள தவறொன்று தொடர்பில் குற்ற வழக்குத் தொடுப்பு எதுவும் தொடங்கப்படுதலாகாது.

## பாகம் இ

### அத்தியாயம் XI

### முத்திரைத் தீர்வை விதித்தல்

*தீர்வை விதிக்கப் படற்பாலதான சாதனங்கள்.*

35. பின்வருவளவற்றின் மீது, அதாவது -

(அ) வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள காணிகளதும், மோட்டார் வாகனத்தினதும் கைமாற்றம் தொடர்பிலான சாதனம் ஒவ்வொன்றின் மீதும் ;

(ஆ) இலங்கையில் வடக்கு மாகாணத்தில் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நடவடிக்கைகளில் சமர்ப்பிக்கப்படும் அல்லது கோப்பிடப்படும் ஆவணம் ஒவ்வொன்றின் மீதும்

(இ) வடக்கு மாகாணத்தில் மோட்டார் வாகனம் ஒன்றின் தொடர்பில் வலுவுடையதான கைமாற்றம் ஒவ்வொன்றின் மீதும்.

விதித்துரைக்கப்பட்ட வீதத்தில் முத்திரைத் தீர்வை ஒன்று விதிக்கப்படுதல் வேண்டும். வெவ்வேறு வகுப்புக்களை அல்லது வகுதிகளை சேர்ந்த சாதனங்கள் தொடர்பில் வெவ்வேறான தீர்வை வீதங்கள் விதித்துரைக்கப்படலாம்.

*பல்வேறு தனி வேறான கருமங்கள் தொடர்பிலான சாதனங்கள்.*

36. பல்வேறு தனிவேறான கருமங்களை கொண்ட அல்லது அவை தொடர்பிலான ஏதேனும் சாதனத்திற்கு அத்தகைய கருமங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி சாதனத்தினால் கையாளப்பட்டிருப்பின், இறுத்தற்படற்பாலதாக இருந்திருக்கக்கூடியதான மொத்த முத்திரைத் தீர்வைத் தொகை இறுத்தற்பாலதாதல் வேண்டும்.

### அத்தியாயம் XII

### விலக்களிப்புக்கள்

*விலக்களிப்புக்கள்.*

37. பின்வரும் சாதனங்களும், ஆவணங்களும், முத்திரைத் தீர்வை செலுத்தலிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாதல் வேண்டும்.

(1) குற்றவியல் நடவடிக்கைகளிலான பிணைமுறி

(2) அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கத்திற்காக அல்லது அதன் சார்பில் இன்னொருவரால் செய்யப்படும் காணிகள் அல்லது மோட்டார் வாகனத்தின் உரித்து மாற்றம் அல்லது கைமாற்றம் ;

(3) இந்த விலக்களிப்பில்லாவிடின் அத்தகைய சாதனம் தொடர்பில் அறவிடப்படற்பாலதான தீர்வையைச் செலுத்துவதற்கு அரசாங்கம் ஆளாகும் விடயத்தில் அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் அல்லது அதற்குச் சாதனமாக எழுதி நிறைவேற்றப்பட்டுள்ள சாதனம் ;

(4) சட்ட நடவடிக்கைகளில் கோப்பிடப்படும் பின்வரும் ஆவணங்களும் :-

(அ) நீதிவான் நீதிமன்றங்களிலும், ஆரம்ப நீதிமன்றங்களிலும் கோப்பிடப்படும் எல்லா ஆவணங்களும் அத்துடன் குற்றவியல் நடவடிக்கைகளின் நோக்கங்களிற்காக வேறு ஏதேனும் நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் எல்லா ஆவணங்களும் ;

(ஆ) ஏதேனும் நீதிமன்றத்தில், அத்தகைய நீதிமன்றத்தின் ஏதேனும் நடவடிக்கைகளில் பதவி அதிகாரத்தால் வழக்குத் தொடருதல் அல்லது வழக்கிற்கு உட்படுதல் அல்லது வழக்கில் இடைவருதல் சம்பந்தமாக கோப்பிடப்பட்ட ஆவணங்களும் ;

(இ) ஏதேனும் நீதிமன்றத்தில், அத்தகைய நீதிமன்றத்தின் ஏதாவது நடவடிக்கைகளில் பதவி அதிகாரத்தால் வழக்குத் தொடர அல்லது எதிர்வாதம் கூற அல்லது வழக்கில் இடைவர முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பரம ஏழை ஒருவரால் கோப்பிடப்பட்ட ஆவணங்கள் ;

(ஈ) ஏதேனும் நீதிமன்றதில் கடனிறுக்க வகையற்றவராக வெளிப்படுத்தப்படுவதற்கென விண்ணப்பிக்கும் ஆளொருவரால் அத்தகைய நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் ஆவணங்கள் ;

(உ) ஆட்கொணர்வெழுத்தாணை என்ற தன்மைத்தான கட்டளையொன்றிற்கான விண்ணப்பமொன்றின் நோக்கங்களிற்கென வடக்கு மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தால் கோப்பிடப்படும் ஆவணங்கள் ;

(ஊ) ஏதேனும் நீதிமன்றத்தில் 1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்ட உதவிச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட சட்ட உதவித் திட்டத்தின் நிர்வாகியால் அல்லது அவரால் அக்காரணத்திற்காக முறையே அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் அச்சட்டத்தின் மூலம் அளிக்கப்பட்ட சட்ட உதவியுடன் வழக்குத் தொடர்வதற்காக அல்லது எதிர்வாதம் கூறுவதற்காக அல்லது வழக்கில் இடைவருவதற்காக கோப்பிடப்பட்ட எல்லா ஆவணங்கள் ;

(எ) ஏதேனும் நீதிமன்றத்தில் எவரேனும் ஆளினால் அல்லது அவர் சார்பாக மோட்டார் வாகனத்தினால் ஏற்பட்ட மரணம் அல்லது சேதத்தினால் எழும் நட்டஈட்டைக் கோரிக் கோப்பிடப்பட்ட எல்லா ஆவணங்கள் ;

(ஏ) ஏதேனும் நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட பிரேரணைகள் ;

(ஐ) ஏதேனும் நீதிமன்றத்தினால் விண்ணப்பத்தின் மீதாயினும் சரி அல்லது அதன் சொந்தப் பிரேரணையின் மீதாயினும் சரி வழங்கப்படும் எழுத்தாணைகள்.

(5) விரும்பாவணம், மரணசாதனம் அல்லது விரும்பாவணைப் பின்னிணைப்பு, அது நொத்தாரிசு மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டதாயினும் சரி வேறு வகையினதாயினும் சரி.

அத்தியாயம் XIII

**முத்திரையிடும் நேரமும் முறையும்**

முத்திரைத் தீர்வையைச் செலுத்தும் நேரமும் முறையும்.

38. (1) ஏதேனும் சாதனத்திற்கு இறுத்தற்படற்பாலதான முத்திரைத் தீர்வையானது சாதனம் எழுதி நிறைவேற்றப்படும் முன்னரோ அல்லது நிறைவேற்றப்படும் நேரத்திலோ செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கொடுப்பனவு இந்நியதிச் சட்டத்தில் வேறு வகையாக அனுமதிக்கப்பட்டிருந்தாலன்றி ஒட்டு முத்திரை அல்லது பொறித்திட்ட முத்திரை என்ற வகையாக அத்தகைய சாதனத்தின் மீது சுட்டிக் காட்டப்படுதலும் வேண்டும் அல்லது இதன் 2 ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுப்பனவுச் சான்றிதழாக இருத்தல் வேண்டும்.

(2) அசைவற்ற ஆதனமொன்றின் கைமாற்றம் தொடர்பிலான ஒரு சாதனத்தின் மீது செலுத்தற்பாலதான முத்திரைத் தீர்வை விதித்துரைக்கப்பட்ட வங்கியொன்றிற்குச் செலுத்தப்படலாம். அவ்வங்கிக்குச் செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வைத் தொகை கொடுக்கப்பட்டது என்பதனையும் அவ்வங்கி அத்தகைய தீர்வையின் கொடுப்பனவுத்

திகதியையும் கொண்ட விதித்துரைக்கப்பட்ட படிவத்தாலான சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன் அதன் சார்பில் வங்கியால் வழங்கப்பட்ட கொடுப்பனவுச் சான்றிதழ் அத்தகைய சாதனத்தில் ஒட்டப்பட்டதாக இருத்தல் வேண்டும். தீர்வையைச் செலுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள ஆளின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தால் சாதனம் நிறைவேற்றப்படும் முன்னர் அல்லது நிறைவேற்றப்படும் நேரத்தில் வங்கிக்கு அத்தகைய கொடுப்பனவைச் செய்ய முடியாதவிடத்து அத்தகைய தீர்வையானது அச்சாசனம் நிறைவேற்றப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்களிற்கு மேற்படாத அத்தகைய காலத்தினுள் செலுத்தப்படுதல் வேண்டும். முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவிற்கான சான்றிதழ் ஒட்டப்பட்டதான சாசனம் ஒன்று முறையாக முத்திரையிடப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய சாதனத்திற்கு இறுத்தற்படற்பாலதான முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவைச் சுட்டிக்காட்டுவதற்கு ஒட்டுமுத்திரைகளை அல்லது பொறித்திட்ட முத்திரைகளைப் பயன்படுத்துவது இயலாததாயிருக்குமிடத்து அல்லது உட்பிரிவு (2) இல் ஏற்படுத்தியவாறு வங்கிக்குக் கொடுப்பனவு செய்ய முடியாதிருக்குமிடத்து, ஆணையாளர் அத்தகைய சாசனத்திற்கு இறுத்தற்படற்பாலதான முத்திரைத் தீர்வைக்குச் சமனான ஒரு தொகை அவரிற்குச் செலுத்தப்படுமாயின் செலுத்தப்பட்ட தொகையையும் அத்தகைய தீர்வை செலுத்தப்பட்ட திகதியையும், சாதனத்தின் மீது புறக்குறிப்பிடப்படலாம். அவ்வாறு புறக்குறிப்பிடப்பட்ட சாதனமொன்று உரியமுறையில் முத்திரையிடப்பட்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

39. (1) சாதனமொன்றிற்கு இறுத்தற்படற்பாலதான முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவு, ஒட்டுமுத்திரையின் வாயிலாகச் சுட்டிக்காட்டப்படுமிடத்து அத்தகைய சாதனத்தை எழுதி நிறைவேற்றும் ஆள் அல்லது ஆட்களுள் ஒருவர் அம்முத்திரை மீண்டும் பயன்படுத்தப்படுவதை அனுமதிக்காதவாறு அதன் குறுக்கே அவரது பெயரையும் முதலெழுத்துக்களையும் மையினால் எழுதுவதன்மூலம் அம்முத்திரையை பெறுமதியிழக்கச் செய்தல் வேண்டும்.

*ஒட்டு முத்திரைகளை பெறுமதியிழக்கச் செய்தல்.*

(2) சாதனம் ஒன்று ஐம்பது ரூபாய் பெறுமதியுடைய அல்லது அதற்குக் கூடுதலான பெறுமதியுடைய ஒட்டுமுத்திரை ஒன்றையும் கொண்டிருக்குமிடத்து அத்தகைய முத்திரையானது, (1) ஆம் உட்பிரிவினால் குறிப்பீடு செய்யப்பட்ட எழுதலுடன் மேலதிகமாக, ஒரு கூர்முள்ளினால், தமரூசியினால், கிள்ளியினால் அல்லது இடுக்கியினால் வெட்டிப் பெறுமதியழிக்கப்படுத்தல் வேண்டும்.

(3) உட்பிரிவுகள் (1) இல் அல்லது (2) இல் தரப்பட்டுள்ளமுறையில் பெறுமதியழிக்கப்பட்டில்லாத ஒட்டு முத்திரையைக் கொண்டிருக்கும் ஏதேனும் சாதனம் அம்முத்திரையினது பெறுமதியின் அளவுக்கு முத்திரையிடப்படாததாகக் கருதப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XIV

### *குறித்த சில சாதனங்களுக்கு எவ்வாறு முத்திரையிடப்பட வேண்டும் என்பது*

40. முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதான இரண்டாவது சாதனம் எதுவும் தீர்வை இறுத்தற்படற்பாலதான சாதனமொன்று எந்த முத்திரையிடப்பட்ட கடதாசியின் மீது ஏற்கனவே எழுதப்பட்டுள்ளதோ அந்த முத்திரையிடப்பட்ட கடதாசியில் எழுதப்படுதல் ஆகாது. ஆயினும், ஏதேனும் சாதனத்தினால் உருவாக்கப்பட்ட அல்லது சான்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் உரிமையைக் கைமாற்றும் நோக்கத்துக்கென அல்லது எந்தப் பணத்தின் கொடுப்பனவுக்கு அல்லது பொருளின் ஒப்படைப்புக்கு ஏதேனும் சாதனத்தினால் பிணைப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் பணத்தை அல்லது பொருளைப் பெற்றுக் கொண்டமை பற்றி ஒப்புக் கொள்வதற்கென முறையாக முத்திரையிடப்பட்ட ஏதேனும் புறக்குறிப்பை இப்பிரிவில் உள்ளதெதுவும் தடுத்தலாகாது.

*முத்திரையிடப்பட்ட கடதாசி ஒன்றில் ஒரு சாதனம் மட்டுமே இருத்தல் வேண்டும்.*

41. (1) ஆதனப் பரிமாற்றம் ஒன்றை நிகழ்வுறச் செய்வதற்கு பல்வேறு உரித்துமாற்றச் சாதனங்கள் அல்லது கைமாற்றச் சாதனங்கள் இருக்குமிடத்து முதலாவதாக நிறைவேற்றப்படும் சாதனம் அத்தகைய பரிமாற்றத்திற்கு இறுத்தற்படற்பாலதான முத்திரைத் தீர்வை ஏதேனுமிருப்பின், அம்முத்திரைத் தீர்வையைக் கொண்டு முத்திரையிடப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏனைய எல்லாச் சாதனங்களும் ஐந்து ரூபாய் முத்திரைத் தீர்வையைக் கொண்டு முத்திரையிடப்படுதலும் வேண்டும்.

*பரிமாற்றலை நிகழ்வுறச் செய்யும் சாதனங்கள் எப்படி முத்திரையிடப்படுதல் வேண்டும் என்பது.*

ஆயினும், எவ்விதத்திலும் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் முதலாவது சாதனம் எழுதி நிறைவேற்றப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றின் பின்னர் எழுதி நிறைவேற்றப்படும். அத்தகைய ஏதேனும் அடுத்துள்ள சாதனத்திற்கு ஏற்புடையனவாதல் ஆகாது.

(2) ஏதேனும் அசையாத ஆதனம் வடக்கு மாகாணத்திலும் இலங்கையின் வேறேதேனும் மாகாணத்திலும் அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாகாணங்களிலும் இருக்குமேயானால், அவ்வாதனத்தின் கைமாற்றம் தொடர்பான சாதனம் ஆனது இந்த நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கமைய வடக்கு மாகாணத்திலுள்ள காணி அல்லது காணிகள் தொடர்பாக இறுத்தற்படற்பாலதான முத்திரைத் தீர்வை செலுத்தப்படுமாயின் அல்லது ஏதேனும் ஓர் ஆதனம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆதனங்கள் மீது நியாயாதிக்கம் உடைத்தான வேறேதேனும் மாகாண சபையின் நிதி நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு அமைய இறுத்தற்பாலதான முத்திரைத் தீர்வை செலுத்தப்படுமாயின் வடக்கு மாகாணத்தில் இருக்கும் ஆதனம் அல்லது ஆதனங்களைப் பொறுத்தமட்டில் அந்த சாதனம் முறையாக முத்திரையிடப்பட்டதாக கருதப்படல் வேண்டும்.

சட்ட நடவடிக்கை களிலான ஆவணங்கள்.

*42.* ஏதேனும் சட்ட நடவடிக்கைகளில் கோப்பிடப்பட்டுள்ளதும் முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதான ஒவ்வோர் ஆவணத்தின் மீதும் செலுத்தப்படற்பாலதான உகந்த தீர்வை, அத்தகைய ஆவணங்களின் நிரலில் ஒட்டப்படும் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையில் பெறுமதி ஒழிக்கப்பட்டும் இருப்பின், அத்தகைய ஆவணம் ஒவ்வொன்றும் உரிய முறையில் முத்திரையிடப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

குறித்த சில சாதனங்களில் இணைப் பிரதி களிற்கு முத்திரை யிடுதல்.

*43.* முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதான ஏதேனும் சாதனம் பிரசித்த நொத்தாரிசு ஒருவர் முன்னிலையில் அல்லது பிசுக்கால் ஒருவர் முன்னிலையில் அவரது பதவியினை நிறைவேற்றுகையில் எழுதி நிறைவேற்றப்படுமிடத்து அல்லது ஒப்புக்கொள்ளப்படுமிடத்து அத்தகைய சாதனத்தின் மீது இறுத்தற்படற்பாலதாக பத்து ரூபாய் பெறுமதியான முத்திரைத் தீர்வை, மூலசாதனத்தின் மீது இறுத்தற்படற்பாலதற்குப் பதிலாக அதன் இணைப்பிரதியின் மீதோ அல்லது அடியிதழின் மீதோ இறுத்தற்படற்பாலதாதல் வேண்டும். அத்துடன் மூலசாதனம் பத்து ரூபா முத்திரையொன்றினைக் கொண்டிருத்தலும் வேண்டும் ; அல்லது குறித்த பத்து ரூபாய் பெறுமதியான முத்திரைத் தீர்வையை 38 (2) ஆம் பிரிவின்படி விதித்துரைக்கப்பட்ட வங்கியொன்றுக்கு செலுத்தப்படலாம்.

அத்தியாயம் XV

***முத்திரைத் தீர்வை தொடர்பான ஒத்திணங்கல்***

செலுத்தற்படற் பாலதான முத் திரைத் தீர்வையின் கொடுப்பனவிற்காக ஒத்திணங்குதல்.

*44.* (1) சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட என்பதுடன் வடக்கு மாகாணத்தில் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட எவையேனும் நடவடிக்கைகளில் முன்வைக்கப்பட்ட அல்லது கோப்பிடப்பட்ட ஆவணங்களின் மீது செலுத்தற்படற்பாலதான முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவுக்கென ஆணையாளர் பின்வரும் நிபந்தனைகளின் மீது ஒத்திணங்குவதற்கு அத்தகைய நீதிமன்ற அலுவலர் ஒருவருக்கு அதிகாரமளிக்கலாம். அந்நிபந்தனைகளாவன,

(i) அத்தகைய அலுவலர் அந்த நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நடவடிக்கைகளில் முன்வைக்கப்பட்ட அல்லது கோப்பிடப்பட்ட ஆவணங்களின் பதிவேடுகளைப் பேணுவார் ;

(ii) அத்தகைய அலுவலர் ஆணையாளரால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிகளின் முடிவில் விடயத்துக்கேற்றாற்போல பின்வருவனவற்றின் மீது கொடுபடற்பாலதான முத்திரைத் தீர்வையின் கூட்டு மொத்தத் தொகையை ஆணையாளருக்கு அனுப்பி வைப்பார்.

(அ) அந்த அலுவலர் எந்த நீதிமன்றத்துக்கு நியமிக்கப்படுகின்றாரோ அந்த நீதிமன்றத்தில் தொடரப்பட்ட குடியியல் அல்லது கடலாண்மை நடவடிக்கைகளில் முன்வைக்கப்பட்ட அல்லது கோப்பிடப்பட்ட ஆவணங்கள் ; அல்லது

(ஆ) அத்தகைய காலப்பகுதியின் போது அத்தகைய வேறு ஆளினால் வழங்கப்பட்ட சாதனங்கள்.

(2) சட்டத்தால் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட என்பதுடன் வடக்கு மாகாணத்தில் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள குடியியல் அல்லது கடலாண்மை வழக்கு நடவடிக்கைகளில் சமர்ப்பிக்கப்பட்ட அல்லது கோப்பிடப்பட்ட ஆவணம் ஒன்றின் மீது செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவு இப்பிரிவிற்கிணங்க ஒத்திணங்கப்பட்டுள்ளவிடத்து (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய நீதிமன்றத்தின் அலுவலர் அத்தகைய ஆவணத்தின் மீது செலுத்தற்படற்பாலதான முத்திரைத் தீர்வைத் தொகையையும் அத்தகைய முத்திரைத் தீர்வை இவ்உட்பிரிவின் கீழ் ஒத்திணங்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் புறக்குறிப்பையும் எழுதுங்கால் அவ் ஆவணம் முறையாக முத்திரையிடப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(3) எனினும், முத்திரைத் தீர்வை அறவிடப்படற்பாலதான ஆவணம் ஒன்று மேற்கூறியவாறு ஒத்திணங்கப்பட்டுள்ளவிடத்தும், அவ்வாவணம் அல்லது சாதனம் சம்பந்தமாகச் செலுத்தப்படற்பாலதான முறையான தீர்வையைப் பற்றி ஆணையாளர் நீதித் தீர்ப்பளிக்கலாம்.

அத்தியாயம் XVI

***சட்ட நடவடிக்கைகளில் கோப்பிடப்படும் ஆவணங்கள் தொடர்பாக சிறப்பு ஏற்பாடுகள்***

45. (1) முன்வைக்கப்படும் அல்லது கோப்பிடப்படும் ஆவணங்கள் மீது இறுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையை தீர்மானிப்பதன் பொருட்டு, *வழக்குகளின் பெறுமதி.*

(அ) சட்டத்தினால் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட என்பதுடன், வடக்கு மாகாணத்தில் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நீதிமன்றத்தில் தொடரும் ஏதேனும் வழக்கு நடவடிக்கைக்காக ; அல்லது

(ஆ) வடக்கு மாகாணத்தில் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் மேல் நீதிமன்றத்தில் தொடரும் ஏதேனும் கடலாண்மை வழக்கு நடவடிக்கைக்காக இந்த சட்டத்திலோ அல்லது வேறெந்த சட்டத்திலோ வேறு வகையிலான ஏற்பாடுகள் இல்லையாயின்,

(i) வழக்கில் கோரப்படும் கடன், உரிமைக்கோரிக்கை அல்லது நட்டஈடு ;

(ii) காணி மீதான உரிமை, உரித்து அல்லது அக்கறை ஆயின், அவ்வாறான காணியின் பெறுமதி ;

(iii) இறந்த ஆள் ஒருவரின் மரணசாசன தத்துவப்பத்திரத்திற்கான அல்லது நிர்வாகக் கடிதங்களிற்கான விண்ணப்பங்களாயின் மரணச் சொத்தின் எஞ்சிய பெறுமதி ;

(iv) வேறெந்த வழக்காயின் ரூபா ஐயாயிரம்.

(2) எந்தவொரு நீதிமன்றத்திலும் தொடரப்படும் எந்தவொரு வழக்கு நடவடிக்கைக்காக திறத்தவர் ஒவ்வொருவராலும் கோப்பிடப்படும் ஆவணங்கள் தொடர்பாக முழுமையில் அறவிடப்படற்பாலதான தீர்வையானது முதலாவது பத்து ஆவணங்கள் மீது அறவிடப்படற்பாலதான தீர்வைகளின் கூட்டுத் தொகையை விஞ்சாது இருத்தல் வேண்டும்.

அத்தியாயம் XVII

***முத்திரைத் தீர்வைக்கான பெறுமதி மதிப்பு***

46. (1) ஏதேனும் ஆதனம் சாதனமொன்றின் மூலமாக உரித்துமாற்றப்படுமிடத்து, அத்தகைய சாதனத்திற்கு இறுத்தற்படற்பாலதான முத்திரைத் தீர்வை உரித்துமாற்றப்படும் ஆதனத்தின் பெறுமதியின் மீது கணிக்கப்படுதல் வேண்டும். *முத்திரைத் தீர்வைக்கான பெறுமதி மதிப்பு.*

(2) பிரதி பயனொன்றிற்காக கைமாற்றப்படும ஏதேனும் ஆதனம் ஏதேனும் ஈட்டிற்கு வில்லங்கத்திற்கு அல்லது அக்கறை ஒதுக்கலுக்கு அமைவதாயிருக்குமிடத்து கைமாற்றற் சாதனத்திற்கு இறுத்தற்படற்பாலதான முத்திரைத் தீர்வையானது, ஈட்டிற்கு, வில்லங்கத்திற்கு அல்லது ஒதுக்கலிற்கான கழிப்பனவு எதுவுமின்றி கைமாற்றப்பட்ட ஆதனத்தின் பெறுமதியின் மீது கணிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் ஆதனம், கொடை அளிப்பவருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்குச் சாதகமாக ஏதேனும் ஒதுக்கலுக்கமைய நன்கொடையாக அளிக்கப்படுமிடத்து, நன்கொடைச்சாசனத்திற்கு இறுத்தற்படற்பாலதான முத்திரைத் தீர்வையானது, அவ் ஆதனம் அவ் ஒதுக்கல் இன்றியே கொடை பெறுநரிற்கு நன்கொடையாக அளிக்கப்பட்டிருந்தது என்றாற் போன்று நன்கொடையாக அளிக்கப்பட்ட ஆதனத்தின் பெறுமதியின் மீது கணிக்கப்படுதல் வேண்டும்.

47. இலங்கை நாணயம் தவிர்ந்த வேறு ஏதேனும் நாணயத்தில் ஏதேனும் சாதனம் தொடர்பில் இறுத்தற்படற்பாலதான முத்திரைத் தீர்வை கூறப்பட்டவிடத்து, சாசனத் திகதியிலே நிலவும் நடப்பு நாணய மாற்று வீதத்திற்கிணங்க இலங்கை நாணயப் பெறுமதியில் அத்தீர்வை கணக்கிடப்படுதல் வேண்டும். *இலங்கை நாணயத் திலேயே முத் திரைத் தீர்வை.*

48. ஏதேனும் அசைவற்ற ஆதனம் அல்லது அதன் ஏதேனும் பாகம் துண்டுகளாக ஒரே ஆளுக்குப் பல்வேறு சாதனங்கள் மூலம் உரித்து மாற்றப்படுகின்றவிடத்தும், அல்லது கைமாற்றப்படுகின்றவிடத்தும், அத்துடன் அத்தகைய சாதனங்களின் மூலம் உரித்து மாற்றப்பட்ட அல்லது கைமாற்றப்பட்ட மொத்த இடப்பரப்பு தனியொரு சாதனத்தின் மூலம் உரித்து மாற்றப்பட்டிருப்பின் அல்லது கைமாற்றப்பட்டிருப்பின், இறுத்தற்படற்பாலதாகும் முத்திரைத் *தீர்வையைத் தவிர்ப் பதற்குப் பல்வேறு சாதனங்களை வரைதல்.*

தீர்வையைத் தவிர்க்கும் முன்னத்துடனேயே பல்வேறு சாதனங்கள் எழுதி நிறைவேற்றப்பட்டன என வரிமதிப்பீட்டாளரிற்கு தோற்றுமிடத்தும் அவர் அத்தகைய சாதனங்கள் அத்தகைய முன்னத்துடன் எழுதி நிறைவேற்றப்படவில்லை என்பதனை அவர் திருப்திப்படும் வகையில் நிரூபிக்குமாறு அத்தகைய சாதனங்களிற்கான திறத்தவர்களை அழைக்கலாம் என்பதுடன் அத்தகைய நிரூபணம் கொடுத்துதவுப்படாவிடில் அல்லது கொடுத்துதவும் நிரூபணம் போதுமானதாக இல்லாதுவிடின் அத்தகைய சாதனம் ஒவ்வொன்றிற்கும் சாதனம் மூலம் உரித்து மாற்றப்பட்ட ஆதனத்தின் பெறுமதியின் விகிதாசாரப்படி அத்தகைய எல்லாச் சாதனங்கள் மீதும் இறுத்தற்படற்பாலதானதாகும் கூட்டு மொத்த முத்திரைத் தீர்வையை அத்தகைய சாதனங்கள் மூலம் கைமாற்றப்பட்ட மொத்த இடப்பரப்பினை உரித்து மாற்றுவதற்கென அல்லது கைமாற்றுவதற்கென தனியொரு சாதனம் எழுதி நிறைவேற்றப்பட்டிருந்தால் என்ன முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதாக இருந்திருக்கக்கூடுமோ அந்த முத்திரைத் தீர்வையின் ஒன்றரை மடங்கிற்குச் சமமாக ஆக்குகின்றவாறான அத்தகையதொரு தொகை கொண்டு முத்திரைத் தீர்வை இறுத்தற்படுதல் வேண்டும்.

## *அத்தியாயம் XVIII*

### *முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதற்கு ஆளாகும் ஆட்கள்*

*தீர்வை யாரால் செலுத்தற்படற் பாலது என்பது.*

49. முரணாக உடன்படிக்கை ஒன்று இருக்குமிடத்தன்றி,

(அ) உரித்துமாற்றம் ஒன்றின் விடயத்தில், அளிப்புப் பெறுநரால் ;

(ஆ) வேறு ஏதேனும் சாதனத்தின் விடயத்தில் அத்தகைய சாதனத்தை வரைகின்ற, ஆக்குகின்ற அல்லது எழுதி, நிறைவேற்றுகின்ற ஆளினால்.

முத்திரைத் தீர்வை செலுத்தற்படற்பாலதானதாகும்

*முத்திரைத் தீர்வைக்கு வேறு திறத்தவர்கள் ஆளாகுதல்.*

50. (1) மாகாணத்தில் அல்லது மாகாணத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனம் தொடர்பில் முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதான ஏதேனும் சாதனம் எழுதி நிறைவேற்றப்படுமாயின் அத்துடன் உரிய முறையில் முத்திரை இடப்படாது இருப்பின் அப்போது அத்தகைய சாதனத்தை எழுதி நிறைவேற்றும் ஒவ்வொருவரும் அத்தகைய தீர்வைத் தொகையையும் அத்தகைய தீர்வையைச் செலுத்தாமைக்காக விதிக்கப்பட்ட ஏதேனும் குற்றவிறுப்பையும் ஆணையாளரிற்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஏதேனும் சாதனம் தொடர்பில் செலுத்தற்பாலதான முத்திரைத் தீர்வையும், குற்றவிறுப்பும், அவ்வாறு ஏதும் இருப்பின், (1) ஆம் உட்பிரிவின் உடன்படிக்கையின் மூலம் அல்லது வேறு வகையில், அல்லது 49 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய சாதனத்தின் மீது முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதற்கு ஆளாய் இருந்தவரான ஆள் அல்லாத வேறு எவரேனும் ஆளிடமிருந்து, ஆணையாளரால் அறவிடப்பட்டிருக்கும் போது, அவ்வாறு அறவிடப்பட்ட தீர்வையினதும் குற்றவிறுப்பினதும், அவ்வாறு ஏதுமிருப்பின், தொகையை முதல் கூறப்பட்ட ஆள் இரண்டாவதாகக் கூறப்பட்ட ஆளிடம் இருந்து அறவிடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) பிரிவு 49 இல், முரணாக எது எவ்வாறு இருப்பினும் (1) ஆம் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் பயனுறுவனவாதல் வேண்டும்.

(4) இறந்த ஆள் ஒருவரின் மரணச் சொத்தின் தத்துவக்காரர், அத்தகைய இறந்த ஆள் உயிருடன் இருந்திருப்பின் இந்நியதிச் சட்டத்தின் கீழ் எத்தகைய செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கு ஆளாகியிருந்திருக்கக் கூடுமோ அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய இறந்த ஆள் எந்தச் சாதனங்களிற்குத் திறத்தவர் ஒருவராக இருந்தாரோ அந்த எல்லாச் சாதனங்களினதும் தொடர்பில் அவர் உயிருடன் இருந்திருந்தால் அவரிற்கு எந்த முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதானதாக இருந்திருக்கக்கூடுமோ, அந்த முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதாதலும் வேண்டும்.

ஆயினும்,

இறந்த ஆளின் ஏதேனும் செயல் அல்லது தவறுகை தொடர்பில் மரணச் சொத்தின் தத்துவக்காரரிற்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் எதுவும் தொடரப்படலாகாது.

(i) இந்த உட்பிரிவின் கீழ் மரண சாதன தத்துவக்காரர் ஒருவரின் பொறுப்பானது.

(அ) முத்திரைத் தீர்வைக்கான பொறுப்பு அவ் உட்பிரிவின் கீழ் எழுமென அவரிற்கு அறிவித்தல் கொடுக்கப்பட்ட திகதியன்று அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருந்த இறந்த ஆளின் மரணச் சொத்தினதும் ; அத்துடன்

(ஆ) பயன்பெறுநர் ஒருவரிற்குப் போயிருக்கக் கூடியதான மரணச் சொத்தின் ஏதேனும் பாகத்தினதும் ;

பணத்தொகைக்கு வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*கம்பனி ஒடுக்கப் படும் போதான பொறுப்பு.*

51. (1) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் எது எவ்வாறாயிருப்பினும், ஏதேனும் தனியார் கம்பனி ஒடுக்கப்படுமிடத்து, அத்துடன் அக்கம்பனியானது முத்திரைத் தீர்வையாக எந்தத் தொகையை செலுத்துவதற்கு ஆளாகின்றதோ அந்த ஏதேனும் தொகையை அத்தகைய பொறுப்பு அதன் ஒழித்துக்கட்டலுக்கு முன்னர் எழுந்தாயினும்சரி ஒழித்துக் கட்டலின் போது எழுந்தாயினும் சரி ஒழித்துக்கட்டலில் எழுந்தாயினும்சரி, அறவிட முடியாது இருக்குமிடத்து அப்போது அத்தகைய தீர்வையைச் செலுத்துவதற்கான கம்பனியின் பொறுப்பு எக்காலப்பகுதியின் போது எழுந்ததோ அந்த ஏதேனும் காலப்பகுதியின் போது கம்பனியின் பணிப்பாளர் ஒருவராக இருந்த ஒவ்வொருவரும் தொகையின கொடுப்பனவில் ஏற்பட்ட தவறுகையானது கம்பனியின் அலுவல்கள் தொடர்பில் அவர்பாலான ஏதேனும் மிகுந்த அசட்டை, பிறழ் செயல் அல்லது கடமை மீறலிற்கு ஏற்றிக் கூறமுடியாதென அவர் நிரூபித்தாலன்றி அத்தகைய தொகையின் கொடுப்பனவிற்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதல் வேண்டும்.

(2) இப்பிரிவில் ''தனியார் கம்பனி'' எனும் வாசகம் கொண்டிருக்கும் பொருளானது அக்கம்பனி அதனது சரத்துக்களினால் பொதுமக்களுக்கு பங்குகள் வழங்குவதை பற்றி அழைப்பு விடுப்பதை தடை செய்வதோடு, அக்கம்பனியின் பங்குதாரர்களும் கம்பனியின் முன்னைய மற்றும் தற்போதைய ஊழியர்களை உட்படுத்தாத ஐம்பதிற்கும் மேற்படாததாக மட்டுப்படுத்துவதாக அமைவதாகும்.

அத்தியாயம் XIX

***சாதனங்கள் மீது தடை வைத்தல்***

*சாதனங்கள் மீது தடை வைத்தற் கும் சோதனை செய்வதற்கும் குறித்த சில அலுவலர்களுக் குள்ள தத்துவம்.*

52. (1) சட்டத்தின் மூலம் அல்லது திறத்தவர்களின் சம்மதத்தின் மூலம், சான்று பெறுதற்கு அதிகாரம் உடைய ஒவ்வோராளும், அத்துடன் பகிரங்க அலுவலகமொன்றிலுள்ள (பொலிஸ் அலுவலகர் ஒருவர் அல்லாத) ஒவ்வொருவரின் முன்னிலையில் அத்துடன், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் வங்கியின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கு முகவராண்மையின் அலுவலர் ஒவ்வொருவரின் முன்னிலையில், அவரது அபிப்பிராயப்படி முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதான ஏதேனும் சாதனம் முன்வைக்கப்படுகின்றதோ அல்லது அவரது கடமைகளைப் புரிகையில் அவர் முன்வருகின்றதோ அந்த அலுவலர் ஒவ்வொருவரும் அத்தகைய சாதனம் உரிய முறையில் முத்திரையிடப்படவில்லையென அவருக்குத் தோன்றுமாயின், அத்தகைய சாதனம் மீது தடை வைத்தல் வேண்டும்.

ஆயினும், குற்றவியல் நீதிமன்றம் ஒன்றின் நீதிவானின் அல்லது நீதிபதியின் முன்னிலையில், அந்நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு நடவடிக்கையின் போது வருகின்ற ஏதேனும் சாதனம் மீது தடை வைத்தல் அல்லது சோதனை செய்தல் பொருத்தமாகும் என அவர் கருதாவிடின், .இப்பிரிவில் உள்ள எதுவும் அவ்விதம் தடை வைக்குமாறு அல்லது சோதனை செய்யுமாறு அவரைத் தேவைப்படுத்துவதாகக் கருதப்படுதல் ஆகாது.

(2) முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதான ஏதேனும் சாதனம் ஆனது, பகிரங்க அலுவலகம் அல்லது கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கு முகவராண்மை ஒன்றிலுள்ள எந்த அலுவலரின் முன்னிலையில் முன்வைக்கப்படுகின்றதோ அல்லது அவரது பணிகளை நிறைவேற்றுகையில் முன்வருகின்றதோ அந்த எவரேனும் அலுவலரை, ஆணையாளர்–

(அ) அத்தகைய சாதனம் உரியமுறையில் முத்திரையிடப்பட்டுள்ளதா என்பதனை நிச்சயிப்பதற்காக அதனை சோதனை செய்யுமாறும் ;

(ஆ) அத்தகைய சாதனம் மீது தடைவைக்குமாறும் தேவைப்படுத்தலாம் .

(3) ஏதேனும் சாதனத்தை சோதனை செய்யுமாறு அல்லது அதன் மீது தடைவைக்குமாறு (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆளெவரும் தேவைப்படுமிடத்து அத்தகைய சாதனம் மீது விடயத்திற்கேற்றவாறு தடைவைத்தலும் அல்லது அதனை சோதனை செய்வதும் அத்துடன் ஆணையாளரால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய மேலும் நடவடிக்கைகளை எடுத்தலும் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

(4) ஆணையாளர் அல்லது அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், ஒரு பகிரங்க அலுவலகத்திற்கு, கூட்டுத்தாபனத்திற்கு வங்கிக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கு முகவராண்மைக்கு பொறுப்பாய் இருக்கின்ற எவரேனும் ஆளுக்கு உரிய முறையிலான அறிவித்தல் கொடுத்த பின்னர் அத்தகைய சாதனத்திற்கு உரிய முறையில் முத்திரை இடப்பட்டுள்ளதா என்பதனையும் நிச்சயப்படுத்துவதற்கென அத்தகைய

அலுவலகத்தில், கூட்டுத்தாபனத்தில் அல்லது வங்கியில் அல்லது முகவராண்மையில் உள்ள ஏதேனும் சாதனத்தை சோதனையிடலாம் என்பதுடன் அத்தகைய சாதனத்திற்கு அவ்விதம் முத்திரையிடப்படாதிருப்பின் அதன் மீது தடைவைத்தலும் வேண்டும்.

தடை வைக்கப்பட்ட சாதனங்கள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப் படுதல்.

53. (1) சான்று பெறுவதற்குச் சட்டத்தினால் அல்லது திறத்தவர்களின் சம்மதத்தினால் அதிகாரம் பெற்றுள்ள ஆளெவரும் அல்லது பதிவாளர் அதிபதி, 58 ஆம் பிரிவிற்கான காப்பு வாசகத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க சாட்சியத்தில் ஏற்றுக்கொள்ளுமிடத்து அல்லது ஏதேனும் சாதனத்தில் மீது செயலாற்றுமிடத்து, அவர், அதனைச் சமர்ப்பிக்கும் ஆளின் செலவில் வழங்கப்பட்டதான அத்தகைய சாதனத்தின் மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும், அத்துடன் சேர்த்து முத்திரைத் தீர்வையினதும் அதன் தொடர்பில் அறவிடப்பட்ட குற்றவிறுப்பினதும் தொகையைக்கூறும் எழுத்திலான சான்றிதழ் ஒன்றையும், ஆணையாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தொகையை ஆணையாளருக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

(2) ஏனைய விடயம் ஒவ்வொன்றிலும் சாதனமொன்றின் மீது அவ்வாறு தடைவைப்பவரான ஆள் அதனை மூலப்பிரதியில் ஆணையாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

தற்செயலாக உரிய முறையில் முத்திரையிடப்படாத சாதனங்களை தன் னிச்சையாக முன் வைத்தல்.

54. முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதானதும் உரிய முறையில் முத்திரையிடப்படாததும் இருபது (20) ரூபாவை விஞ்சாத முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதான ஒரு சாதனமாக அல்லாததுமான ஏதேனும் சாதனம் எவரேனும் ஆளினால் அவரது சொந்த பிரேரணையின் மீது அது எழுதி நிறைவேற்றப்பட்ட திகதியில் இருந்து ஓராண்டு காலத்திற்குள் வரி மதிப்பீட்டாளர் ஒருவரின் முன்னர் முன்வைக்கப்படுமிடத்தும், அத்துடன் அத்தகைய சாதனத்திற்கு உரிய முறையில் முத்திரையிடப்படவில்லை என்ற நிகழ்வை அத்தகைய ஆள் மதிப்பீட்டாளரின் கவனத்திற்கு கொண்டுவருமிடத்து, தகுந்த தீர்வைத் தொகையை அல்லது அதனை நிறைவுறுத்துவதற்குத் தேவைப்படும் தொகையை வரி மதிப்பீட்டாளருக்குச் செலுத்த முனையுமிடத்தும் , அத்தகைய சாதனத்திற்கு முத்திரையிடாது விடப்பட்டமை தற்செயலாக, தவறுதலாக அல்லது அவசரமான அவசியத்தினால் ஏற்பட்டதென வரிமதிப்பீட்டாளர் திருப்திப்படுமிடத்தும், அவர் சாதனத்தின் மீது தடை வைப்பதற்குப்பதிலாக அத்தகைய தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், அத்தகைய சாதனத்திற்கு இறுத்தற்படற்பாலதான தகுந்த முத்திரைத் தீர்வைத் தொகை செலுத்தப்பட்டுள்ளதென அதன் மீது புறக்குறிப்பிடுவதன் மூலம் குறிப்பிடுதலும் வேண்டும்.

ஆணையாளர் தடை வைக்கப்பட்ட சாதனத்தைக் கையாளுதல்.

55. (1) ஆணையாளர் 52 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் சாதனம் மீது தடைவைக்குமிடத்து, அல்லது 53 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் இருபது ரூபாய் தொகையை விஞ்சாத தீர்வை இறுத்தற்படற்பாலதான சாதனமொன்றாக அல்லாத ஏதேனும் சாதனத்தைப் பெறும் இடத்து, அவர் அதனை வரி மதிப்பீட்டாளர் ஒருவருக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும் என்பதுடன், அதன் தொடர்பில் வரிமதிப்பீட்டாளர் பின்வரும் நடவடிக்கை முறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(அ) அத்தகைய சாதனத்திற்கு உரிய முறையில் முத்திரையிடப்பட்டுள்ளது என அல்லது அது முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதல்ல என அவர் அபிப்பிராயப்படுவாராயின், விடயத்திற்கேற்றவாறு, அதற்கு உரிய முறையில் முத்திரை இடப்பட்டுள்ளது என அல்லது அது அவ்விதம் தீர்வை இறுத்தற்படற்பாலதல்ல என அதன் மீது புறக்குறிப்பிடுவதன் மூலம் சான்றுப்படுத்தல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய சாதனம் முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதானது எனவும் அதற்கு உரிய முறையில் முத்திரை இடப்படவில்லை எனவும் அவர் அபிப்பிராயப்படுவாராயின், தகுந்த தீர்வையையும் அல்லது அதனை ஈடுசெய்வதற்கு தேவைப்படும் தொகையையும் அதனுடன் சேர்த்து தகுந்த தீர்வைத் தொகையின் மூன்று மடங்கிற்கு மேற்படாதவொரு குற்றவிறுப்பொன்றையும் செலுத்துமாறு அவர் எழுத்திலான அறிவித்தலின் மூலம் முத்திரைத் தீர்வை செலுத்துவதற்கான ஆளைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய ஏதேனும் சாதனத்தின் மீது தகுந்த முத்திரைத் தீர்வைத் தொகை செலுத்தப்பட்டு அத்துடன், அதற்குரிய சாதனம் எழுதி நிறைவேற்றப்பட்ட முறையிலுள்ள ஏதேனும் ஒழுங்கீனம் காரணமாக அல்லது சட்டப்படி தேவைப்படுத்தப்பட்ட நேரத்தில் அதற்கு முத்திரை இடப்படவில்லை என்பதனால் அதன் மீது தடை வைக்கப்பட்டும் இருக்குமிடத்து, வரிமதிப்பீட்டாளர் அவ்வொழுங்கீனம் தற்செயலாக, தவறுதலாக அல்லது அவசரமான அவசியத்தினால் ஏற்பட்டதென திருப்திப்படுவாராயின் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றவிறுப்பொன்றை செலுத்துவதன் பேரில் சாதனத்திற்கு உரிய முறையில் முத்திரையிடப்பட்டுள்ளது என அவர் அதன் மீது புறக்குறிப்பிடுவதன் மூலம் சான்றுப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அவ்விதம் புறக்குறிப்பிடப்பட்ட சாதனம் ஒவ்வொன்றும் அதன் எழுதி நிறைவேற்றுகைத் திகதியிலிருந்தே உரிய முறையில் முத்திரையிடப்பட்டுள்ளதாக கருதப்படுதலும் வேண்டும்.

56. (1) ஏதேனும் சாதனம் தொடர்பில் 54 ஆம் பிரிவின் கீழ் அல்லது 55 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழ் அறிவித்தல் ஒன்றினால் அல்லது 58 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்படத் தேவைப்படுத்தப்பட்ட முத்திரைத்தீர்வையையும், குற்றவிறுப்பு எதனையும் செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அல்லது அறவிடப்பட்டுள்ளவிடத்து, வரிமதிப்பீட்டாளர், அல்லது அத்தகைய சாதனத்தை சான்றாக ஏற்றுக்கொள்ளும் ஆள் அல்லது அத்தகைய சாதனத்தின் மீது செயலாற்றும் ஆள் அதன் மீது புறக்குறிப்பிடுவதன் மூலம். *முத்திரைத் தீர்வை செலுத்தப்பட்டுள்ள சாதனத்திற்கு புறக்குறிப்பிடுதல்.*

(i) சாதனத்தின் தொடர்பில் தகுந்த முத்திரைத் தீர்வையையும் குற்றவிறுப்பும் செலுத்தப்பட்டுள்ளது எனவும் ; அத்துடன்,

(ii) அவற்றைச் செலுத்துகின்ற ஆளின் பெயரையும் முகவரியையும் ; அத்துடன்

(iii) செலுத்தப்பட்ட திகதியையும்

சான்றுப்படுத்தல் வேண்டும். அத்தகைய சான்றுதல் இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்கென அதனகத்தே கூறப்பட்ட கருமங்களுக்கு முடிவான சான்றுதல் ஆதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இற்கிணங்க புறக்குறிப்பிடப்பட்ட சாதனம் ஒவ்வொன்றும் உரிய முறையில் முத்திரையிடப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், சான்றாக ஏற்கப்படற்பாலதாதலும் வேண்டும். அத்துடன், அது அவ்வாறு பதிவு, செய்யப்படுதலும் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுதலும் வேண்டும் என்பதுடன், அவ்வாறு முத்திரை இடப்பட்டுள்ளது மெய்யென உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன், அது எந்த ஆளின் உடமையிலிருந்து அதன் மீது தடை வைத்த அலுவலரின் கைக்கு வந்ததோ அந்த ஆளிற்கு அவரது விண்ணப்பத்தின் மீது திருப்பிக் கொடுக்கப்படுதலும் வேண்டும்.

57. (1) ஆணையாளருக்கு 53 ஆம் பிரிவின் கீழ் அனுப்பப்பட்ட ஏதேனும் சாதனம் அனுப்புகையின் போது இழக்கப்படின், அழிக்கப்படின் அல்லது சேதப்படுத்தப்படின் அதனை அனுப்பும் ஆள் அத்தகைய இழப்பிற்கு அழிவுக்கு அல்லது சேதத்திற்கு பொறுப்பாதல் ஆகாது. *அனுப்பப்பட்ட சாதனத்தின் இழப்பிற்கு பொறுப்பாகாமை.*

(2) ஏதேனும் சாதனம் அனுப்பப்படவிருக்கும் போது அது எந்த ஆளின் உடமையிலிருந்து அதன் மீது தடை வைத்த ஆளின் கைக்கு வந்ததோ அந்த முதலாவது ஆளால் தமது செலவில் அதன் பிரதியொன்று ஆக்கப்பட்டும் தடை வைத்த ஆளால் மெய்யென்று உறுதிப்படுத்தப்படுதலும் வேண்டும் எனத் தேவைப்படுத்தலாம்.

*அத்தியாயம் XX*

**சாதனங்களின் ஏல்தகவு**

58. முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதான சாதனம் எதுவும் உரிய முறையில் முத்திரையிடப்பட்டிருந்தால் அன்றி அவை சான்றுகளைப் பெறுவதற்கு சட்டத்தின் மூலம் அல்லது திறத்தவர்களின் சம்மதத்தின் மூலம் அதிகாரம் பெற்றுள்ள எவரேனும் ஆளினால் சான்றாகப் பெற்றுக்கொள்ளப்படுதலோ ஏல்தகவுடையதாதலோ, அல்லது அத்தகைய எவரேனும் ஆளினால் ஒரு பகிரங்க அலுவலகத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது வங்கியில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் முகவராண்மையிலுள்ள எவரேனும் அலுவலரினால் பதிவு செய்யப்படுதலோ மெய்யென்று உறுதிப்படுத்தப்படுதலோ அல்லது அவர் அதன் மீது செயற்படுதலோ ஆகாது.

ஆயின், அத்தகைய ஏதேனும் சாதனம் அதற்கு இறுத்தற்படற்பாலதான தகுந்த தீர்வையும் அல்லது அதனை நிறைவுறுத்துவதற்குத் தேவைப்பட்ட தொகையையும் அத்துடன் தகுந்த தீர்வையின் மும்மடங்கை விஞ்சாதவொரு குற்றவிறுப்பும் செலுத்தப்படுவதன் மீது –

(அ) சான்று பெறுவதற்கு சட்டத்தின் மூலம் அல்லது திறத்தவர்களின் சம்மதத்தின் மூலம் அதிகாரம் பெற்றுள்ள எவரேனும் ஆளினால் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படலாம் ; அல்லது

(ஆ) அத்தகைய சாதனத்தின் மீது விதிக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வை ஐயாயிரம் ரூபாவாக அல்லது அதற்குக் குறைவானதாக இருக்குமாயின், பதிவாளர் அதிபதி அதன் மீது செயற்படலாம் அல்லது எவரேனும் பிரதிப் பதிவாளர் அதிபதி அல்லது பதிவாளர் அதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட உதவிப்பதிவாளர் அதிபதி செயற்படலாம்.

குறித்த சில விடயங்களின் பற்றுச் சீட்டுக்களின் ஏல்தகவு.

59. முத்திரையிடப்பட்ட பற்றுச்சீட்டொன்றை வழங்குமாறு தேவைப்படுத்தப்படும் ஆள் எவரும் முத்திரையிடப்படாத பற்றுச் சீட்டொன்றை வழங்க, அத்துடன், அத்தகைய பற்றுச்சீட்டு முத்திரையிடப்பட்டிருப்பின் அது அவருக்கு எதிரான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாக ஆகும் இடத்து, அத்தகைய பற்றுச்சீட்டானது 58 ஆம் பிரிவிலுள்ள எது எவ்வாறு இருப்பினும் அதனைச் சமர்ப்பிக்கும் ஆளினால் ஐந்நூறு ரூபா குற்றவிறுப்பு ஒன்று செலுத்தப்படுவதன் மூலம் அவருக்கு எதிரான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

அத்தியாயம் XXI

## *முத்திரைத் தீர்வை பற்றிய தீர்த்தளிப்பு*

முறையான முத்திரைத் தீர்விற்கான தீர்த்தளிப்பு.

60. ஏதேனும் சாதனம் அது எழுதி நிறைவேற்றப்பட்ட தாயினும் சரி, அல்லாவிடினும் சரி, அத்துடன் முன்னர் முத்திரையிடப்பட்டதாயினும் சரி அல்லாவிடினும் சரி அதன் பிரதியொன்றுடன் சேர்த்து வரி மதிப்பீட்டாளர் ஒருவரிடம் கொணரப்படுமிடத்தும் அதனைக் கொணரும் ஆள் அதற்கு இறுத்தற்படற்பாலதான ஏதேனும் முத்திரைத் தீர்வை இருப்பின் அத்தீர்வையைப்பற்றி வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தைப் பெறுவதற்கென விண்ணப்பித்து இருநூற்று ஐம்பது ரூபா அல்லது விதித்துரைக்கப்பட்ட வேறேதும் கட்டணம் ஒன்றை செலுத்துமிடத்து வரிமதிப்பீட்டாளரானவர், தனது அபிப்பிராயத்தின்படி அச்சாதனம் இறுத்தற்படற்பாலதான முத்திரைத் தீர்வை ஏதேனும் இருப்பின் அத்தீர்வையைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன் அவர் அந்த ஆளிற்கு தனது முடிவையும் எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

தகுந்த முத்திரைத் தீர்வை.

61. பிரிவு 60 இன் கீழ் வரிமதிப்பீட்டாளர் அவரது அபிப்பிராயத்தை வழங்கும் நோக்கத்திற்கென அச்சாதனத்திற்கு முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதாகும் தன்மை தொடர்பிலான அல்லது அதற்கு இறுத்தற்படற்பாலதான முத்திரைத் தீர்வைத் தொகை தொடர்பிலான நிகழ்வுகளை நிரூபிப்பதற்கு அவசியமானவாறான அத்தகைய ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு சான்றை முன்வைக்குமாறு அச்சாதனத்தைக் கொண்டுவரும் ஆளைத் தேவைப்படுத்தலாம்.

ஆயினும் அத்தகைய ஏதேனும் சான்றினை, கொடுத்துதவும் ஒவ்வொரும் ஆளும் அது தொடர்புறுத்தும் சாதனத்திற்கு இறுத்தற்படற்பாலதான முழு முத்திரைத் தீர்வையையும் செலுத்தப்படுவதன் மீது மேலே சொல்லப்பட்ட எவையேனும் நிகழ்வுகளை அல்லது சூழ்நிலைகளை அத்தகைய சாதனத்தில் அவர் உண்மையிலேயே கூறாது விட்டதன் காரணத்தினாலன்றி, வேறு வகையில் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அவரால் இறுக்கப்பட்டிருக்கக்கூடிய ஏதேனும் குற்றவிறுப்பினின்றும் விடுவிக்கப்பட்டவராதல் வேண்டும்.

வரி மதிப்பீட்டாளரால் புறக்குறிப்பிடுதல்.

62. (1) வரி மதிப்பீட்டாளரானவர் 60 ஆம் பிரிவின் கீழ் அவரிடம் கொணரப்படும் ஏதேனும் சாதனத்தின் மீது புறக்குறிப்பிடப்படுவதன் மூலம் அச்சாதனத்திற்கு இறுத்தற்படற்பாலதான ஏதேனும் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட்டுள்ளதென அல்லது அத்தகைய சாதனம் முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதல்ல என அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் கீழ் எந்தச் சாதனத்தின் மீது புறக்குறிப்பொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் சாதனத்திற்கு, விடயத்திற்கேற்றாற் போன்று, உரிய முறையில் முத்திரையிடப்பட்டுள்ளதென அல்லது அது முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதல்ல எனக்கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதாகுமாயின் சான்றாக அல்லது வேறு வகையாக பெற்றுக்கொள்ளப்படற்பாலதாதலும் வேண்டும். அத்துடன் அது ஆரம்பத்திலேயே உரியமுறையில் முத்திரையிடப்பட்டிருந்தது என்பது போன்று அதன் மீது செயலாற்றப்படலாம் என்பதுடன் அது பதிவு செய்யவும்படலாம்.

ஆயினும், இப்பிரிவிலுள்ள எதுவும்,

(அ) இலங்கையில் எழுதி நிறைவேற்றப்பட்டு அல்லது முதலில் எழுதி நிறைவேற்றப்பட்டு, விடயத்திற்கேற்றாற் போன்று, அதன் எழுதி நிறைவேற்றுகை அல்லது முதல் எழுதி நிறைவேற்றுகைத் திகதியிலிருந்து ஒரு மாதம் கழிந்ததன் பின்னர் அவரிடம் கொண்டு வரப்படும் ஏதேனும் சாதனத்திற்கு ; அல்லது

(ஆ) இலங்கைக்கு வெளியே எழுதி நிறைவேற்றப்பட்டு அல்லது முதலில் எழுதி நிறைவேற்றப்பட்டு அது இலங்கையில் பெறப்பட்ட பின் ஒரு மாதம் கழிந்ததன் பின்னர் அவரிடம் கொண்டுவரப்படும் ஏதேனும் சாதனத்திற்கு,

புறக்குறிப்பிடுவதற்கு வரி மதிப்பீட்டாளருக்கு அதிகாரமளித்தலாகாது.

அத்தியாயம் XXII

**முத்திரைகளுக்கான விடுபாடுகள்**

*பயன்படுத்தப்படாத வையும் பழுதாக் கப்பட்டவையுமான முத்திரைகளுக் கான விடுபாடுகள்.*

63. (1) ஆணையாளர் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அவருக்கு எழுத்தில் செய்யப்படும் விண்ணப்பமொன்றின் மீதும், நிகழ்வுகளைப் பற்றித் திருப்தியுறுவதன் மீதும், பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படாத அல்லது பழுதாக்கப்பட்ட முத்திரைகளுக்கு விடுபாடொன்றை வழங்கலாம்.

(அ) முத்திரையொன்றை எந்த நோக்கத்துக்கு பயன்படுத்தப்படுவதற்கென முன்னப்பட்டதோ அந்நோக்கத்திற்கு உகந்ததல்லாத வகையில் கவனக்குறைவால் அல்லது வேண்டுமென்றன்றி பழுதாக்கப்பட்டுள்ளவிடத்து

அல்லது

(ஆ) பூரணமற்ற அல்லது எழுதி நிறைவேற்றப்பட்டில்லாத அல்லது வறிதாக்கப்பட்ட அல்லது தவறுதல் ஒன்றின் காரணமாக முன்னப்பட்ட நோக்கத்திற்கு உகந்ததல்லாத சாதனமொன்றுக்கு முத்திரை ஒன்று ஒட்டப்பட்டுள்ளவிடத்து,

அல்லது

(இ) சாதனமொன்றிற்கு கவனக்குறைவால் அல்லது வேண்டுமென்றன்றி பிழையான விவரணத்தை அல்லது பெறுமதியைக் கொண்ட முத்திரையொன்று ஒட்டப்பட்டிருந்து, அதனையடுத்து முறைப்படி முத்திரையொட்டப்பட்ட சாதனமொன்றினால் மாற்றீடு செய்யப்பட்டுள்ளவிடத்து,

(2) உட்பிரிவு (1) இன் கீழான விடுபாட்டிற்கான விண்ணப்பம் பயன்படுத்தப்படாத அல்லது பழுதாக்கப்பட்ட முத்திரைகள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டுக்குள் செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஆணையாளர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் விடுபாடொன்றிற்கான விண்ணப்பம் ஒன்றின் மீது, ஒன்றில் விண்ணப்பகாரருக்கு அதே விவரணத்தையும் பெறுமதியையும் கொண்ட வேறு முத்திரைகளை, அன்றேல் முத்திரைகளின் பெறுமதியைப் பணத்தில் கொடுக்கலாம், என்பதுடன் அவர் முத்திரைகளின் பெறுமதியைப் பணத்தில் கொடுக்குமிடத்து, ஒவ்வொரு ரூபாவிற்கும் ஒரு ரூபாவின் பின்னத்திற்கும் ஐந்து சதத்தைக் கழித்தல் வேண்டும்.

(4) இந்தப்பிரிவின் நோக்கத்திற்காக "முத்திரை" என்பது ஒட்டு முத்திரையை, அழுத்திய முத்திரையை அல்லது 38 (2) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட்டமைக்கான சான்றிதழை உள்ளடக்குதல் வேண்டும்.

அத்தியாயம் XXIII

**தவறுகளும் தண்டங்களும்**

64. (1) (அ) தீர்வை இறுத்தற்படற்பாலதான ஏதேனும் சாதனத்தை அதற்குரிய முறையில் முத்திரையிடப்படாமல் சாட்சிக்காரர் ஒருவராக அல்லாத வேறுவகையில் எழுதி நிறைவேற்றுகின்ற ஆள் எவரும் அல்லது

(ஆ) ஒட்டு முத்திரையொன்றை 39 ஆம் பிரிவினால் விதித்துரைக்கப்பட்ட முறையில் பொறித்தழிக்கத் தவறுகின்ற ஆள் எவரும் ;

இச்சட்டத்தின் கீழ் தவறு ஒன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னர் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

(2) சட்டபூர்வமான அதிகாரமின்றி எத்தன்மைத்தான எம்முறையிலேனும் ஏதேனும் முத்திரையை அல்லது வார்ப்பு அச்சு ஒன்றை ஆக்குவதில் அல்லது உற்பத்தி செய்வதில் அல்லது உதவியளிக்கின்ற அல்லது செய்கின்ற அல்லது உற்பத்தி ஆக்குகின்ற அல்லது அவ்வாறு செய்யப்பட்ட ஏதேனும் முத்திரையை அல்லது வார்ப்பு அச்சைத் தமது உடைமையில் வைத்திருக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னர் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுவதன் மேல் ஐயாயிரம் ரூபாயை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, "முத்திரை" எனப்படுவது ஒட்டும் முத்திரை அல்லது அழுத்தும் முத்திரை அல்லது 38 (2) ஆம் பிரிவின் கீழ் குறியீடு செய்யப்பட்ட முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவுச் சான்றிதழை உள்ளடக்குதல் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக் கிணங்க செயலாற் றத் தவறுகின்ற பிரசித்த நொத் தாரிசு.

65. பிரிவு 76 ஆல் தம்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிற்கு மனதறிய இணங்கியொழுகத் தவறுகின்ற பிரசித்த நொத்தாரிசு எவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னர் சுருக்கமுறை விளக்கத்தின் பின் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுவதன் மேல் எந்த சாதனம் தொடர்பில் தவறு புரியப்பட்டுள்ளதோ அந்தச் சாதனத்திற்கு செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையை விஞ்சாதவொரு தொகையையும் ஐயாயிரம் ரூபாயும் அடங்கிய குற்றப் பணத்திற்கும் அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

சபைக்கு எதிராக மோசடி செய்வதற் குரிய தண்டம்.

66. (அ) ஏதேனும் சாதனத்தின் தரப்பட வேண்டுமென 76 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லா நிகழ்வுகளும் சூழ்நிலைகளும் முழுமையாக தரப்படாமல், சபையை மோசடி செய்யும் முன்னத்துடன் அத்தகைய சாதனத்தை வரைகின்ற, அத்தாட்சிப்படுத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற அல்லது ;

(ஆ) தாம் எழுதி நிறைவேற்றிய, மெய் என்று உறுதிப்படுத்திய அல்லது அத்தாட்சிப்படுத்திய ஏதேனும் சாதனத்தின் மீது முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவுக்காக ஏதேனும் பணத்தொகையைப் பெற்றுக் கொண்டு அப்பணத்தை முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவுக்கு பயன்படுத்தாமல் அதனையோ அதன் ஏதேனும் பாகத்தையோ தகாத முறையில் பிடித்து வைத்திருக்கின்ற அல்லது தடுத்து வைத்திருக்கின்ற அல்லது ;

(இ) ஏதேனும் சாதனத்தை எழுதி நிறைவேற்றுகையில் மெய்யென்று உறுதிப்படுத்துகையில் அல்லது அத்தாட்சிப்படுத்துகையில் உண்மையல்லாத அல்லது முன்னர் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் முத்திரை ஒட்டுகின்ற அல்லது பொறித்தழிக்கக் காரணமாகின்ற அல்லது ;

(ஈ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஏதேனும் தீர்வை அல்லது குற்றவிறுப்பு சபைக்கு கிடைக்காமற் செய்வதற்கென கணிக்கப்பட்ட வேறு ஏதேனும் செயலைப்புரிகின்ற, அல்லது ;

(உ) தம்மீது 52 (2) ஆம் பிரிவின் கீழ் ஆணையாளரினால் சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிற்கு இணங்கி ஒழுக தவறுகின்ற ; அல்லது

(ஊ) ஆணையாளருக்கு 52 (4) ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் ஆணையாளரை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற ஆள் எவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுவதன் மேல்–

(i) உட்பிரிவு (ஆ) என்பதன் கீழான தவறொன்றின் விடயத்தின் அத்தகைய ஆளினால் பிடித்துவைக்கப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட முத்திரைத் தீர்வையின் தொகைக்கு சமமான பணத்தொகை ஒன்றும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றும் அடங்கிய குற்றப்பணம் ஒன்றிற்கும் ;

(ii) உட்பிரிவு (இ) என்பதன் கீழான தவறொன்றின் விடயத்தில் அத்தகைய ஆளினால் ஒட்டப்பட்ட அல்லது பொறித்தழிக்கப்பட்ட முத்திரைத் தொகையின் மூன்று மடங்கிற்கு சமமான பணத்தொகையொன்றும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத தொகையும் அடங்கிய குற்றப்பணம் ஒன்றிற்கும் ;

(iii) உட்பிரிவு (அ) அல்லது (ஈ) அல்லது (உ) அல்லது (ஊ) என்பதன் கீழான தவறொன்றின் விடயத்தில் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணம் ஒன்றிற்கும் அல்லது ஒவ்வொரு விடயத்திலும், ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, 'முத்திரை' எனப்படுவது ஒட்டும் முத்திரை அல்லது அழுத்தும் முத்திரை அல்லது 38 (2) ஆம் பிரிவின் கீழ் குறியீடு செய்யப்பட்ட முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவுச் சான்றிதழை உள்ளடக்குதல் வேண்டும்.

67.பிரிவு 71 (8) இன் கீழ் அவரிற்குக் கொடுக்கப்பட்ட அறிவித்தலின் தேவைப்பாடுகளிற்கு இணங்கி ஒழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்கு குற்றவாளியாக வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விசாரணையின் பின்னர் ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

68. இந்நியதிச்சட்டத்தினது இப்பாகத்தின் கீழான தவறொன்றின் தொடர்பில் எவரேனும் ஆளிற்கெதிராக குற்றவழக்கொன்று தொடருதலானது, அல்லது அத்தகைய ஏதேனும் தவறு தொடர்பில் எவரேனும் ஆளின் மீது தண்டமொன்றை குற்றப்பணமொன்றை அல்லது மறியல் தண்டனையை விதித்தலானது இச்சட்டத்திற்கு அத்தகைய ஆளினால் இறுக்கப்பட்டுள்ள அல்லது இறுக்கப்படக்கூடிய ஏதேனும் முத்திரைத் தீர்வையை அல்லது குற்றவிறுப்பைச் செலுத்தவேண்டிய ஏதேனும் பொறுப்பிலிருந்து அவரை விடுவித்தல் ஆகாது. குற்றவிறுப்புக்கள் முதலியவற்றிற்கான ஏதேனும் நட வடிக்கை எவ்வா றிருப்பினும் முத் திரைத் தீர்வையின் அல்லது குற்ற விறுப்பின் தொகை செலுத்தப்படற்பால தாகும் என்பது.

69. இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு தொடர்பில் குற்ற வழக்கெதுவும் ஆணையாளரின் வலுவளிப்பின்றித் தொடரப்படுதல் ஆகாது. குற்ற வழக்கு களைத் தொடுத் தல்.

70. ஆணையாளர், தவறு புரியப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு இச்சட்டத்தின் கீழான தவறு எதனையும் இணக்கித் தீர்க்கலாம் என்பதுடன் தீர்ப்பிற்கு முன்னர் அதன்கீழான எவையேனும் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கலாம். அல்லது இணக்கித் தீர்க்கலாம். தவறுகளை இணக் கித் தீர்ப்பதற்கு ஆணையாளரிற்கு உள்ள தத்துவம்.

## அத்தியாயம் XXIV

71. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆணையாளர் அல்லது வரி மதிப்பீட்டாளர் ஒருவரினால் வழங்கப்படவேண்டிய அறிவித்தல் ஒவ்வொன்றும் விடயத்திற்கேற்றவாறு ஆணையாளர் அல்லது வரி மதிப்பீட்டாளரின் பெயரைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் மீது ஆணையாளர் அல்லது வரி மதிப்பீட்டாளரின் பெயர் உரிய முறையில் அச்சிடப்பட்டிருப்பின் அல்லது ஒப்பமிடப்பட்டிருப்பின் அத்தகைய அறிவித்தல் ஒவ்வொன்றும் செல்லுபடி உடையனவாதலும் வேண்டும். அறிவித்தலில் உள்ள கையெப்பம் அதனைச் சேர்ப்பித்தல், அதன் செல்லுபடி யாகும் தன்மை என்பன.

(2) இந்நியதிச் சட்டத்தின் வலுவைக் கொண்டு வழங்கப்படும் அறிவித்தல் ஒவ்வொன்றும் ஆளொவருக்கு நேரடியாக அல்லது கடைசியாக அறியப்பட்ட அவரது வதிவிடத்திற்கு அல்லது அவர் வணிகத்தை கொண்டு நடாத்துகின்ற அல்லது கொண்டு நடாத்திய ஏதேனும் இடத்திற்கு ஒப்படைப்பதன் மூலம் அல்லது அஞ்சலில் அனுப்புவதன் மூலம் சேர்க்கப்படலாம்.

(3) அஞ்சலில் அனுப்பப்பட்ட அறிவித்தல் எதுவும் சாதாரண நெறியில் அஞ்சல் மூலம் அது எந்த நாளில் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்குமோ அந்த நாளை அடுத்துவரும் நாளன்று சேர்ப்பிக்கப்பட்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(4) அஞ்சல் மூலம் சேர்ப்பிக்கப்பட்டதை நிரூபிக்கையில் அறிவித்தலை உள்ளடக்கிய கடிதம் உரிய முறையில் முகவரியிடப்பட்டு அஞ்சல் இடப்பட்டது என்பதனை காண்பிப்பது போதுமானதாதல் வேண்டும்.

(5) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்கென கொடுக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலின் மீது அச்சிடப்பட்டு இருப்பதும் அல்லது ஒப்பமிடப்பட்டு இருப்பதும் அல்லது ஏதேனும் சான்றிதழின் மீது ஒப்பமிடப்பட்டு இருப்பதும் அதனை கொடுப்பதற்கு அல்லது வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஆளின் பெயராக கொள்ளப்பட்டதுமான பெயர் ஒவ்வொன்றும் நீதிமுறை கவனத்திற்கு உட்படுத்தப்பட்டதாதல் வேண்டும்.

(6) இந்நியதிச் சட்டத்திற்கு ஏற்பாடுகளுக்கு இணங்கி இருப்பதாக கொள்ளப்பட்ட அறிவித்தல், சான்றிதழ் அல்லது வேறு நடவடிக்கை எதுவும், பொருளிலும், பயனிலும், அது இச்சட்டத்திற்கு அமைவானதாக அல்லது இச்சட்டத்தின் முன்னத்துக்கும் கருத்துக்கும் இணங்கியதாக இருப்பின் அத்துடன் அத்தகைய அறிவித்தல் சான்றிதழ் எந்த ஆளுக்கு கொடுக்கப்படுகின்றதோ அல்லது கொடுக்கப்படவேண்டும் என முன்னப்பட்டதோ அந்த ஆள் அல்லது அதனால் பாதிக்கப்பட்ட ஆள் பொது முன்னத்திற்கு உய்த்துணர்தலுக்கும் இணங்க அதில் பதவிப்பெயர் குறிப்பிட்டிருப்பின் படிவம் இல்லை என்ற காரணத்திற்காக நீக்கப்படுதல் அல்லது வறிதாதல் அல்லது வறிதாக்கப்படற்பாலது என கருதப்படுதல் ஆகாது. அல்லது அதனகத்துள்ள தவறொன்றின் குறைபாடு ஒன்றின் அல்லது ஏதேனும் விடுகையின் காரணமாக பாதிக்கப்படுதல் ஆகாது.

(7) உட்பிரிவு (6) இன் பொதுமைக்கு பங்கமின்றி ஓர் அறிவித்தல் ஆனது இறுத்தற்படுதலுக்கு முன்னப்பட்ட ஆளிடம் உரிய முறையில் சேர்க்கப்பட்டிருப்பின் அத்தொகை இறுத்தப்படற்பாலதான ஆளின் பெயர் அல்லது குடும்பபெயர் தொடர்பாக அதனகத்துள்ள தவறொன்றின் காரணத்தினால் அவ்வறிவித்தலில் குறை காணப்படுதலோ அல்லது பாதிக்கப்படுதலோ ஆகாது.

(8) (அ) ஆணையாளர் பிரதி ஆணையாளர் அல்லது ஒரு வரிமதிப்பீட்டாளர் இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக–

(i) அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அத்தகைய ஆவணத்தை அல்லது சாதனத்தை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு உள்ளாக பரிசோதனைக்கு என அவருக்கு காண்பிக்குமாறு அல்லது அனுப்பி வைக்குமாறு ;

(ii) அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அத்தகைய தகவலை கொடுத்துதவுமாறு ;

(iii) அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் கருமம் பற்றி அவரை விசாரிக்கக்கூடிய விதமாக அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய இடத்திலும் அத்தகைய திகதியிலும் அத்தகைய நேரத்திலும் நேரிலோ அல்லது ஒரு பிரதிநிதியை அதிகாரம் அளிப்பதன் மூலமோ சமுகமளிக்குமாறும்.

எவரேனும் ஆளை தேவைப்படுத்தும் எழுத்திலான அறிவித்தலை கொடுக்கலாம்.

(ஆ) ஏதேனும் தகவலை கொடுக்குமாறு எவரேனும் ஆளைத்தேவைப்படுத்தி (8) (அ) ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய தகவலை கொடுத்து உதவுதலைத் தடை செய்யும் வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக உள்ளது. எது எப்படி இருப்பினும், அத்தகைய தேவைப்பாட்டிற்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

(இ) உட்பிரிவு (8) (அ) இன்கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு இணக்கமாக சமுகமளிக்கின்ற எவரேனும் ஆள் அவ்வாறு சமுகமளிப்பதில் நியாயமானதாக இறுக்கப்படக்கூடியவாறான அத்தகைய செலவு தொகைகள் ஆணையாளரினால் அனுமதிக்கப்படலாம்.

இப்பிரிவின் "ஆள்" என்பது ஒரு வங்கியாளரையும் உள்ளடக்கும்.

(9) மேற்குறிப்பிட்ட உப பிரிவுகளின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்கத்தவறும் ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாக வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமான விசாரணையின் பின்னர் ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

குற்றவிறுப்புக்கள் தொடர்பில் தற்துணிபுகளைப் பிரயோகித்தல்.

72. இந்நியதிச் சட்டத்தின் கீழ் எவரேனும் ஆளின் மீதும் சுமத்தப்படவுள்ள குற்றவிறுப்புத் தொகை தொடர்பில் ஆணையாளருக்கு அல்லது பிரதி ஆணையாளருக்கு அல்லது வரி மதிப்பீட்டாளர் ஒருவருக்கு ஏதேனும் தற்றுணிவு அளிக்கப்பட்டுள்ளவிடத்து அக்குற்றவிறுப்பு இறுக்கப்பட்ட எல்லாச் சூழ்நிலைகளையும் எடுத்ததன் பின்னர் விடயத்திற்கு ஏற்றவாறு ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளரால் அல்லது வரி மதிப்பீட்டாளரால் அத்தகைய தற்றுணிவு பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

தீர்வையை அல்லது குற்றவிறுப்பை செலுத்தும் ஆட்கள் குறித்த சில சந்தர்ப்பங்களில் அதனை மீட்டுப் பெறுதல்.

73. (1) சாதனம் ஒன்றின் தொடர்பில் எவரேனும் அளினால் ஏதேனும் முத்திரைத் தீர்வை அல்லது குற்றவிறுப்பு செலுத்தப்பட்டிருந்து அத்துடன் உடன்படிக்கையின் மூலம் அல்லது இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழ் வேறோர் ஆள் அத்தகைய சாதனம் தொடர்பில் முத்திரைத் தீர்வை செலுத்துவதற்காளாய் இருந்திருப்பாராயின் குறிப்பிட்ட ஆள் அவ்விதம் செலுத்தப்பட்ட தீர்வை தொகையை அல்லது குற்றப்பணத்தை அத்தகைய வேறு ஆளிடம் இருந்து மீட்டுப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) அத்தகைய மீட்டுப் பெறுதலின் நோக்கங்களுக்கு என அச்சானதம் தொடர்பான முத்திரை தீர்வை சான்றுதலில் குறித்துரைக்கப்பட்ட ஆளினால் செலுத்தப்பட்டுள்ளது என ஆணையாளரின் கைப்பட வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்று அதன்கண் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் பற்றிய முடிவான சான்றாதல் வேண்டும்.

கட்டளைகள்

74. அமைச்சரானவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைகள் மூலம் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட விவரணத்திலான முத்திரைகள் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட சாதனங்களை முத்திரையிடுவதற்கென பயன்படுத்தல் வேண்டும் என தேவைப்படுத்தலாம் என்பதுடன் அத்தகைய சாதனங்களின் மீது முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவுக்கென அந்த விவரணத்திலான முத்திரைகள் அல்லாத வேறு முத்திரைகளை பயன்படுத்துவது ஆள் ஒருவருக்கு சட்டமுறையானதாதல் ஆகாது.

75. (1) அமைச்சரானவர் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றினதும் தொடர்பில் அல்லது அவற்றுள் எவையேனும் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(அ) விதிக்கப்பட வேண்டும் என இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம் ;

(ஆ) எந்தச் சாதனங்கள் தொடர்பில் முத்திரைத் தீர்வையானது அமுத்திய முத்திரைகளின் வழியாகச் செலுத்தப்படற்பாலதாகலாமோ அந்தச் சாதனங்கள்.

(2) இப்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்திற்கென சபையின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஒழுங்குவிதியொன்று ஒழிக்கப்பட்டு விட்டதாக கருதப்படும் திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

76. (1) முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதான ஏதேனும் சாதனத்தை வரைகின்ற, ஆக்குகின்ற, எழுதி நிறைவேற்றுகின்ற அல்லது அத்தாட்சிப்படுத்தப்படுகின்ற ஆள் ஒவ்வொருவரும் அத்தகைய சாதனத்திற்கான திறத்தவர்களாக உள்ளவர்களின் முழுப்பெயர்களையும் முகவரிகளையும் பிரதிப்பயனையும் கொடுப்பனவுத் திகதியையும் கொடுப்பனவு செய்யப்படவேண்டிய முறையையும் அத்துடன் அத்தகைய சாதனத்திற்கு முத்திரைத் தீர்வை இறுத்தற்படற்பாலதாகும் தன்மையைப் பாதிக்கின்ற மற்றெல்லா நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் அத்துடன் எத்தகைய முத்திரைத்தீர்வை அச்சாதனத்திற்கு இறுத்தற்படற்பாலதோ அத்தகைய முத்திரைத் தீர்வைத் தொகையையும் அதனகத்து தருதல் வேண்டும். உரித்துமாற்றல் சாதனங்கள் சம்பந்தமான நிபந்தனைகள்.

(2) உரித்துமாற்ற சாதனமொன்றினை அத்தாட்சிப்படுத்தும் ஒவ்வொரு பிரசித்த நொத்தாரிசும் அவ்வாறு அத்தாட்சிப்படுத்துவதற்கு முன்னர் எந்தப் பெறுமதியின் மீது முத்திரைத் தீர்வை செலுத்தப்படுகின்றதோ அந்தப் பெறுமதி உரித்து மாற்றப்படும் ஆதனத்தின் பெறுமதியைக் குறித்துக் காட்டுகிறது எனத் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்வதற்கு நியாயமான எல்லா நடவடிக்கையையும் எடுத்தல் வேண்டும்.

(3) எந்தச் சானத்திற்கு ஒட்டுமுத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றனவோ அந்த ஏதேனும் சாதனத்தை அத்தாட்சிப்படுத்தும் பிரசித்த நொத்தாரிசு ஒவ்வொருவரும் அத்தகைய சாதனத்திற்கு சரியான விபரணத்தையும் பெறுமதியையும் கொண்ட முத்திரைகளை ஒட்டுதல் வேண்டும். என்பதுடன் அவற்றை இச்சட்டத்தில் பணிக்கப்பட்ட முறையில் பொறித்தழித்தலும் அத்துடன் அவரது அத்தாட்சிப்படுத்தலில் அத்தகைய சாதனத்திற்கு ஒட்டப்பட்ட முத்திரைகளின் எண்ணிக்கையையும் பெறுமதியையும் குறிப்பிடுதலும் வேண்டும்.

(4) பிரிவு 38 இன் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளில் காட்டப்பட்ட முறையில் ஒரு சாதனத்தின் மீது முத்திரைத் தீர்வை செலுத்தப்படும் போது உரித்துமாற்றச் சாதனத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற பிரசித்த நொத்தாரிசு பிரிவு 38 (2) இன் கீழான வங்கியினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுச்சான்றிதழ் அத்தகைய சாதனத்தின் இணைப்பிரதியுடன் முறையாக இணைக்கப்பட்டுள்ளதென அல்லது பிரிவு 38 (3) இல் கூறப்பட்டுள்ளவாறு ஆணையாளரால் அத்தகைய சாதனம் புறக்குறிப்பிடப்பட்டுள்ளது எனச் சான்றுப்படுத்துதல் வேண்டும்.

**பாகம் ஈ**

அத்தியாயம் XXV

**மேன்முறையீடுகள்**

77. (1) ஆள் எவரும் இந்நியதிச் சட்டத்தின் ஆ பாகத்தின் கீழ் அவர் தொடர்பில் வரி மதிப்பீட்டாளர் ஒருரினால் செய்யப்பட்ட ஏதேனும் வரி மதிப்பீட்டுடன் அல்லது மேலதிக வரிமதிப்பீட்டுடன் அல்லது இந்நியதிச் சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் விதிக்கப்பட்ட தண்டம் ஒன்றினால், அல்லது 58 ஆம் பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட அபிப்பிராயம் ஒன்றினால், அல்லது 55 (1) (ஆ) பிரிவீன் கீழ் வழங்கப்பட்ட தேவைப்பாடு ஒன்றினால் இன்னலுறுபவராயின் அத்தகைய வரிமதிப்பீடு, மேலதிக வரிமதிப்பீடு அல்லது தண்டம் அல்லது அபிப்பிராயம் அல்லது தேவைப்பாட்டிற்கு எதிராக, விடயத்திற்கேற்ப, அத்தகைய மதிப்பீடு, அல்லது மேலதிக மதிப்பீடு, தண்ட விதிப்பு, அபிப்பிராயம் அல்லது தேவைப்பாடு அடங்கிய அறிவித்தல் சேர்க்கப்பட்டு முப்பது நாட்களுள் ஆணையாளரிடம் மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய ஆள் மேன்முறையீடு செய்துள்ளார் என்பது எப்படி இருப்பினும், அத்தகைய வரிமதிப்பீட்டினால், மேலதிக வரிமதிப்பீட்டினால், அபிப்பிராயத்தினால், ஆணையாளருக்குச் செய்யப்படும் மேன்முறையீடுகள்.

தேவைப்பாட்டினால் இறுக்கப்பட்ட அல்லது அறவிடப்பட்ட மொத்த விற்பனை வரவு வரியை அல்லது முத்திரைத் தீர்வையை இந்நியதிச் சட்டத்தினால் அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தண்டத்துடன் சேர்த்து, ஆனால் மொத்த விற்பனை வரவு வரிக் கொடுப்பனவு அல்லது முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவு அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் கொடுப்பனவு மேன்முறையீடு தீர்மானிக்கப்படும் வரை செலுத்தப்பட வேண்டியதில்லை என ஆணையாளர் கட்டளையிட்டால் ஒழிய, செலுத்துதல் வேண்டும். அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன் மேல் அவ்வாறு பிடித்து வைக்கப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி அல்லது முத்திரைத் தீர்வைத் தொகை அல்லது அதன் பாகம் தவணை தவறியதாகக் கருதப்படமாட்டாது.

ஆயின், இலங்கையில் இல்லாமை காரணமாக, நோய் காரணமாக அல்லது நியாயமான வேறு காரணத்தால் மேன்முறையீட்டாளர் அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக மேன்முறையீடு செய்வதிலிருந்து தடுக்கப்பட்டாரென ஆணையாளர் திருப்தி அடைவதன் மேல், மேன்முறையீடு செய்வதற்கென காலநீடிப்பு ஒன்றினை ஆணையாளர் வழங்குதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு மேன்முறையீடும் ஆணையாளருக்கு முகவரியிடப்பட்ட எழுத்தினாலான மனு ஒன்றின் மூலம் முன்வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டுக்கான ஏதுக்களை தெளிவாகத் தருதலும் வேண்டும்.

(3) எந்த வரிமதிப்பீட்டுக்கு அல்லது மேலதிக வரிமதிப்பீட்டுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ, அந்த வரிமதிப்பீடு அல்லது மேலதிக வரிமதிப்பீடு விபரத்திரட்டு இல்லாத போது செய்யப்பட்டவிடத்து, மேன்முறையீட்டு மனு முறையாகச் செய்யப்பட்ட விபரத்திரட்டுடன் சேர்த்து அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(4) உட்பிரிவுகள் (1), (2), (3) இன் ஏற்பாடுகளுக்கு இணங்கி அமையாதிருக்கும் மேன்முறையீட்டு மனு ஒவ்வொன்றும் செல்லுபடியற்றதாதல் வேண்டும்.

(5) செல்லுபடியான மேன்முறையீட்டு மனு ஒன்றினைப் பெற்றுக்கொண்டதன் மேல், ஆணையாளர் வரிமதிப்பீட்டாளர் ஒருவரினால் மேலும் விசாரணை நடாத்தப்படச் செய்யலாம் என்பதுடன், அத்தகைய விசாரணையின் போது மேன்முறையீட்டு மனுவின் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் பற்றிய உடன்படிக்கையொன்று ஏற்படுமாயின், அதற்கிணங்க மதிப்பீட்டில் தேவைப்படும் சமன்பாடு செய்யப்பட வேண்டும் அல்லது அபிப்பிராயத்தில் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொகை திருத்தப்படுதலும் வேண்டும்.

(6) உட்பிரிவு (5) இல் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் மேன்முறையீட்டாளருக்கும் வரிமதிப்பீட்டாளருக்குமிடையில் உடன்படிக்கை எதுவும் ஏற்படாதவிடத்து, மேன்முறையீட்டினைக் கேட்பதற்கென ஆணையாளர் நேர்த்தினையும் இடத்தினையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(7) மேன்முறையீட்டாளர் ஒவ்வொருவரும், மேன் முறையீட்டைக் கேட்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும், இடத்திலும் ஆணையாளரின் முன்னர் வருகை தருதல் வேண்டும். மேன்முறையீட்டாளர் மேன்முறையீட்டுக் கேட்பின் போது நேரிலோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் மூலமோ வருகை தரலாம். ஆணையாளர் காலத்திற்குக் காலம் அந்நோக்கத்திற்கென அவர் நிருணயிக்கக் கூடியவாறான அத்தகைய நேரத்திற்கும் இடத்திற்குமம் மேன்முறையீட்டுக் கேட்பை ஒத்தி வைக்கலாம்.

அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் மேன்முறையீட்டாளர் சார்பில் வருகை தரும் ஏதேனும் விடயத்தில், ஆணையாளர் மேன்முறையீட்டுக் கேட்பை ஒத்திவைக்கலாம் என்பதுடன் மேன்முறையீட்டினைத் தீர்மானிப்பதற்கு மேன்முறையீட்டாளர் நேரில் வருகை தருவது அவசியமானது என அவர் கருதினால், மேன்முறையீட்டின் ஒத்திவைக்கப்பட்ட கேட்புக்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் மேன் முறையீட்டாளர் நேரில் வருகை தர வேண்டும் எனத் தேவைப்படுத்தலாம். மேன்முறையீட்டாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி மேன்முறையீட்டின் கேட்புக்கென அல்லது மேன்முறையீட்டின் ஒத்திவைக்கப்பட்ட கேட்புக்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் வருகைதரத் தவறினால் அல்லது மேன்முறையீட்டாளர் ஆணையாளரினால் வருகை தருதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்ட போது வருகை தரத் தவறினால், ஆணையாளர் மேன்முறையீட்டைத் தள்ளுப்படி செய்யலாம்.

ஆயின், மேன்முறையீட்டாளர், மேன்முறையீடு ஒன்று தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் நியாயமான காலத்திற்குள்ளாக அவர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி இலங்கையில் இல்லாமை காரணமாக, நோய் காரணமாக அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணத்தினால் அத்தகைய மேன்முறையீட்டின் கேட்புக்கு அல்லது ஒத்திவைக்கப்பட்ட கேட்புக்கு உரிய முறையில் வருகைதர முடியாமல் தடுக்கப்பட்டார் என ஆணையாளரைத் திருப்திப்படுத்தினால் ஆணையாளர் தள்ளுபடிக் கட்டளையை வறிதாக்கலாம் என்பதுடன் மேன்முறையீட்டுக் கேட்புக்கென நேரத்தினையும் இடத்தினையும் நிர்ணயிக்கலாம்.

*(8) ஆணையாளர் மேன்முறையீடு சம்பந்தமாக சான்றளிக்க இயலுமானவர் எனத் தான் கருதும் ஆள் எவரையும் தம்முன்னர் வருகை தருமாறு கட்டளையிட்டு அழைப்பதற்கு தத்துவம் உடையவராதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆளை சத்தியத்தின் மேல் அல்லது வேறு வகையாக விசாரணையும் செய்யலாம். அவ்வாறு வருகை தரும் எவரேனும் ஆளினால் அவ்வாறு வருகை தருவதில் அவசியமாக இறுக்கப்பட்ட எவையேனும் நியாயமான செலவுகள் அத்தகைய ஆளுக்கு ஆணையாளரினால் அனுமதிக்கப்படலாம்.*

*(9) ஏதேனும் மேன்முறையீட்டின் மீது தமது தீர்மானத்தை செய்வதற்கு முன்னர், ஆணையாளர் அவசியமானது எனக் கருதினால், எவரேனும் ஆளிற்கு கொடுக்கப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட கூடியவருமான அவரது உடமையிலுள்ள அத்தகைய எவையேனும் உறுதிகளை, வரைபடங்களை, சாதனங்களை, புத்தகங்களை, கணக்குகளை, பட்டியல்களை, கையிருப்புப் பட்டியல்களை, இடாப்புகளை, காசோலைகளை பணம் செலுத்திய சீட்டுக்களை கணக்காய்வாளரின் அறிக்கைகளை அல்லது விலைமதிப்பாளரின் அறிக்கைகளை அல்லது வேறு ஆவணங்களை பரிசோதனைக்கென முன்வைக்குமாறு அல்லது ஆணையாளருக்கு அனுப்பிவைக்குமாறு தேவைப்படுத்தலாம்.*

*(10) ஆணையாளரின் மேன்முறையீடு சம்பந்தமாக மேன்முறையீட்டாளரின் அல்லது வேறு எவரேனும் ஆளின் சான்றினை கேட்குமிடத்து, அவர் அத்தகைய சான்று பற்றிய பதிவேடு ஒன்றினைப் பேணிவருதல் அல்லது பேணிவரச் செய்வித்தல் வேண்டும்.*

*(11) இப்பிரிவின் கீழான மேன்முறையீடு ஒன்றினைத் தீர்மானிப்பதில் ஆணையாளர் எந்த அபிப்பிராயத்திற்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த அபிப்பிராயத்தை உறுதிப்படுத்தலாம் அல்லது திருத்தலாம் அல்லது எந்த மதிப்பீட்டிற்கு அல்லது அறிவித்தலுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அத்தொகையை உறுதிப்படுத்தலாம், குறைக்கலாம், அதிகரிக்கலாம் அல்லது நீக்கலாம் என்பதுடன் அவர் மேன்முறையீட்டின் மேலான தனது தீர்மானம் பற்றிய எழுத்தினாலான அறிவித்தலை மேன்முறையீட்டாளருக்குக் கொடுத்தலும் வேண்டும். அத்தகைய தனது தீர்மானத்திற்கான காரணங்களை எழுத்துமூலமாக ஒப்புவித்தலும் வேண்டும்.*

*(12) மேன்முறையீடு இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டவிடத்து அல்லது ஆணையாளரினால் கட்டளையொன்று ஆக்கப்படுவதன் மீது (1) ஆம் உட்பிரிவின் கீழ் பிடித்து வைக்கப்பட்ட ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி அல்லது முத்திரைத் தீர்வை செலுத்தற்படற்பாலதாகுமிடத்து, அல்லது மூலமதிப்பீட்டினால் அறவிடப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி அல்லது முத்திரைத் தீர்வை அதிகரிக்கப்பட்டவிடத்து, ஆணையாளர் அத்தகைய ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி அல்லது முத்திரைத் தீர்வை அல்லது அதன் மீதி எத்தேதியன்று அல்லது எத்திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும் என மேன்முறையீட்டாளருக்கு ஆணையாளர் எழுத்துமூல அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். செலுத்தப்படாத மொத்த விற்பனை வரவு வரி அல்லது முத்திரைத் தீர்வை தவணை தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*(13) ஒரு வரிமதிப்பீடு அல்லது அபிப்பிராயம் அல்லது தேவைப்பாட்டிற்கு எதிராக மேன்முறையீடொன்று இருக்கின்றவிடத்தும் வரிமதிப்பீட்டு அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி அல்லது முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவு உட்பிரிவு (1) இன் கீழ் செலுத்தாது வைக்கப்பட்டிருக்குமிடத்தும், ஆணையாளர், அம்மேன்முறையீட்டை விசாரணை செய்யும் போது அல்லது விசாரிக்கும் போது அவ்வரிமதிப்பீடு அல்லது தேவைப்பாடு தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரியாக அல்லது முத்திரைத் தீர்வையாக குறித்தவொரு பணத்தொகை செலுத்துமதியானதென அல்லது செலுத்துமதியாக இருக்கக்கூடும் என மேன்முறையீட்டாளர் உடன்பட்டால், மேன்முறையீட்டாளருக்கு கொடுக்கப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம் அறிவீத்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது திகதிக்கு முன்னர் அப்பணத்தொகையைச் செலுத்துமாறு பணிக்கலாம். அவ்வாறு செலுத்தப்படாத ஏதேனும் பணத்தொகை தவணை தவறிய வரியாகக் கருதப்படுதல் வேண்டும்.*

## *அத்தியாயம்* XXVI

### ***மீளாய்வு வாரியத்திற்குச் செய்யப்படும் மேன்முறையீடு***

*78. (1) இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் மேன்முறையீடுகளை விசாரிக்கும் நோக்கத்திற்காக அமைச்சரால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட மீளாய்வு வாரியம் (இதனத்துப் பின்னர் ''வாரியம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒன்று இருத்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட வாரியத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் மூன்று வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் எனினும், மீளநியமிக்கப்படுவதற்குத் தகுதி உடையவர்களாகவும் வேண்டும். உறுப்பினர் ஒருவர் தவிசாளராகவும் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.*

*மீளாய்வு வாரியத்தை அமைத்தல்.*

(2) வாரியத்திற்குச் செயலாளர் ஒருவர் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) தவிசாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் வாரியத்தின் எவரேனும் மூன்று உறுப்பினர்கள் ஏதேனும் மேன்முறையீட்டை விசாரிக்கலாம்.

(4) மாகாண ஆணையாளரின் வேண்டுகோளின் பேரில் வாரியத்தின் செயலாளர் வாரியத்தின் கூட்டமொன்றைக் கூட்டலாம்.

(5) வாரிய உறுப்பினர்களினதும் செயலாளரினதும் ஊதியம் அமைச்சரினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

மீளாய்வு வாரியத்திற்கான மேன்முறையீடுகள்.

79. (1) ஆணையாளருக்கு 77 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின் மீது ஆணையாளரின் தீர்மானத்தினால் இன்னலுற்ற எவரேனும் ஆள் அத்தீர்மானம் பற்றிய அவரது அதிருப்தியை ஆணையாளருக்கு எழுதித் தெரிவிக்கலாம். அத்தகைய தெரிவிப்பு ஒவ்வொன்றும் தீர்மானிப்புத் திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாகச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய மனு ஒவ்வொன்றும்,

(அ) ஆணையாளரின் எந்தத் தீர்மானத்துக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்தத் தீர்மானத்தின் பிரதி ஒன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும் ;

(ஆ) அதற்கெதிராக மேன்முறையீடு செய்வதற்கான காரணங்களைத் துல்லியமாகத் தருதல் வேண்டும் ; அத்துடன்

(இ) வாரியத்தின் செயலாளரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

ஆணையாளர் மேன்முறையீடுகளை மீளாய்வு வாரியத்திற்கு ஆற்றுப்படுத்தலாம்.

80. ஆணையாளர் தமக்குச் செய்யப்பட்ட செல்லுபடியான மேன்முறையீடு எதனையும் மீளாய்வு வாரியத்திற்கு ஆற்றுப்படுத்தலாம் என்பதுடன், மீளாய்வு வாரியம் அத்தகைய மேன்முறையீட்டை கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க 81 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின் கேட்புக்கும் தீர்ப்பளித்தலுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

81. (1) மேன்முறையீட்டு மனுவொன்றைப் பெற்றதன் பின்னர் எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக வாரியத்தின் செயலாளர் மேன்முறையீட்டைக் கேட்பதற்கான திகதியையும் நேரத்தையும் இடத்தையும் நிர்ணயித்தல் வேண்டும் என்பதுடன், மேன்முறையீட்டாளருக்கும் ஆணையாளருக்கும் அதுபற்றி பதினான்கு நாள் அறிவித்தல் கொடுத்தலும் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழாக அறிவித்தல் ஒன்றைப் பெற்றதன் மேல் ஆணையாளர், பிரிவு 77 (10) இன் கீழ் பேணப்பட்ட சான்றுப்பதிவேட்டின் பிரதியொன்றை வாரியத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டாளர் ஒவ்வொருவரும் மேன்முறையீடு ஒன்றின் கேட்பில் நேரில், அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி மூலம் சமுகம் தரவேண்டும். வாரியமானது, மேன்முறையீட்டாளர் நேரில் வருகை தருவதினை இயலச் செய்வதற்கு அவசியமென அது கருதும் அத்தகைய காலத்திற்கு விசாரணையைத் தள்ளிப்போடலாம்.

(4) மேன்முறையீடு செய்யப்பட்ட வரிமதிப்பீட்டை அல்லது அபிப்பிராயத்தைத் தெரிவித்த அல்லது தேவைப்பாட்டை சுமத்திய வரி மதிப்பீட்டாளர் அல்லது ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறாக வரிமதிப்பீட்டுக்கு ஆதரவாக அத்தகைய மேன்முறையீடு கேட்கப்படும் வாரியத்தின் கூட்டத்திற்குச் சமுகம் தருதல் வேண்டும்.

(5) மேன்முறையீட்டில் ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டவாறான அல்லது பிரிவு 80 இன் கீழ் ஆற்றுப்படுத்தப்பட்டவாறான வரிமதிப்பீடு, அபிப்பிராயம் அல்லது தேவைப்பாடு விடயத்திற்கேற்றாற் போல, மிகையானது அல்லது பிழையானது என நிரூபிக்கும் பொறுப்பு மேன்முறையீட்டாளர் மேல் ஆதல் வேண்டும்.

(6) சகல மேன்முறையீடுகளும் மறைவில் கேட்கப்படுதல் வேண்டும்.

(7) வாரியதுமானது மேன்முறையீடு தொடர்பாக சான்றளிக்கக்கூடியவரென அது கருதக்கூடிய எவரேனும் ஆளை கேட்புக்குச் சமுகமளிக்குமாறு ஆணையிட்டழைப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் என்பதுடன் சத்தியத்தின் மீது அல்லது வேறு வகையாக, சாட்சிக்காரர் ஒருவராக அவரை விசாரிக்கலாம் ; அத்துடன், அவ்வாறு சமுகமளிக்கும் எவரேனும் ஆள் அவ்வாறு சமுகமளிப்பதில் அவரால் அவசியமாக இறுக்கப்படக்கூடிய எவையேனும் நியாயமான செலவுகள் வாரியத்தினால் அனுமதிக்கப்படலாம்.

(8) வாரியத்தின் சம்மதத்துடன் தவிரவும் வாரியம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகளின் மீது தவிரவும், மேன்முறையீட்டாளர் வாரியத்தின் கேட்பில் ஆணையாளர் முன்னிலையில் காண்பிக்கப்படாத ஏதேனும் ஆவணத்தைக் காண்பிப்பதற்கு அல்லது ஆணையாளர் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படாத எவரேனும் ஆளின் சான்றைச் சமர்ப்பிப்பதற்கு அல்லது எவருடைய சான்று ஆணையாளர் முன்னரான கேட்பில் ஏற்கனவே பதியப்பட்டதோ அவருடைய சான்றைச் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

(9) மேன்முறையீட்டின் கேட்பில் வாரியமானது (8) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் வாய்மூல அல்லது ஆவணச் சான்றை அனுமதிக்கலாம் அல்லது மறுக்கலாம் அத்துடன் சான்றின் ஏல்தகவு தொடர்பிலான சான்றுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது.

(10) மேன்முறையீடுகளை விசாரித்த பின்னர் வாரியமானது, விடயத்திற்கேற்றாற் போல் மேன்முறையீட்டின் மீது ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறான அல்லது 80 ஆம் பிரிவின் கீழ் அவருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவாறான வரி மதிப்பீட்டை உறுதிப்படுத்தல், குறைத்தல், அதிகரித்தல் அல்லது நீக்குதல் வேண்டும். அல்லது அவ்விடயத்தை அதன் மீதான வாரியத்தின் அபிப்பிராயத்தோடு சேர்த்து ஆணையாளருக்கு அனுப்பி வைக்கலாம். ஒரு வழக்கு அவ்வாறு வாரியத்தினால் அனுப்பப்பட்டவிடத்து, ஆணையாளர் வாரியத்தினால் அபிப்பிராயம் தேவைப்படுத்தக்கூடியவாறாக வரி மதிப்பீட்டை மீளாய்வு செய்தல் வேண்டும். வாரியத்தின் முடிவு மேன்முறையீட்டாளருக்கும் ஆணையாளருக்கும் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(11) உட்பிரிவு (10) இன் கீழ் வாரியம் அத்தகைய வரி மதிப்பீட்டைக் குறைக்காது விட்டால் அல்லது நீக்காது விட்டால், வாரியத்தின் செலவுகளை செலுத்துமாறு மேன்முறையீட்டாளரை வாரியமானது கட்டளையிடலாம் என்பதுடன் ஐநூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு பணத்தொகையை வரி மதிப்பீட்டின் மூலம் இறுத்தற்பட்ட வரியோடு கூட்டப்பட்டு அதனோடு சேர்த்து அறவிடப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XXVII

### *மாகாணத்தின் மேல் நீதிமன்றத்திற்கான மேன்முறையீடுகள்*

82. (1) வாரியத்தின் முடிவானது முற்றானதாதல் வேண்டும்.

சட்டப்பிரச்சினை பற்றி மேல் நீதிமன் றத்திற்கு மேன் முறையீடு செய் தல்.

ஆயின், மேன்முறையீட்டாளர் அல்லது ஆணையாளர் வடக்கு மாகாணத்தின் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்துக்கென சட்டப் பிரச்சினை பற்றிய விளக்கமொன்றை எடுத்துரைக்கும்படி வாரியத்தைத் தேவைப்படுத்தி விண்ணப்பம் ஒன்றினைச் செய்யலாம். அத்தகைய விண்ணப்பமானது வாரியத்தின் தீர்மானம் விடயத்திற்கேற்ப ஆணையாளருக்கு அல்லது மேன்முறையீட்டாளருக்கு எழுத்தில் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக எழுத்திலிடப்பட்டு மேன்முறையீட்டாளரைப் பொறுத்தமட்டில் இருநூற்று ஐம்பது ரூபா அல்லது அமைச்சரினால் குறித்துரைக்கப்படும் அத்தகைய வேறு தொகை கட்டணத்துடன் சேர்த்து வாரியத்தின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டாலன்றி ஏற்றுக் கவனிக்கப்படுதலாகாது.

(2) வாரியத்தினால் எடுத்துரைக்கப்பட்ட வழக்கானது, நிகழ்வுகளையும் வாரியத்தின் முடிவையும், பிணக்கிலுள்ள வரித்தொகை ஐயாயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து, அவ்வரித்தொகையையும் அத்தகைய வழக்கினை எடுத்துரைக்குமாறு வாரியத்தினைத் தேவைப்படுத்தும் திறத்தவர் அவ்வழக்கு எடுத்துரைக்கப்பட்டு கையொப்பம் இடப்படுமிடத்து அதனைப் பெற்றுக்கொண்ட பின்னர் பதினான்கு நாட்களுக்குள் மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(3) 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பிரயோகிக்கும் நோக்கங்களுக்காக :-

(அ) இப்பிரிவின் கீழ் எடுத்துரைக்கப்பட்ட ஏதேனும் வழக்கின் மீது அல்லது அத்தகைய ஏதேனும் வழக்கின் கேட்பின், தீர்மானத்தின் அல்லது கையாளுதலின் இடைநேர்விளைவாக, மேல் நீதிமன்றத்தின் முன்னர் இடம்பெறும் எல்லா நடவடிக்கைகளும் ஐயாயிரம் ரூபா பெறுமதியுள்ள அல்லது பிணக்கிலுள்ள வரித்தொகையென எடுத்துரைக்கப்பட்ட வழக்கில் வாரியத்தினால் எடுத்துக் காண்பிக்கப்பட்டவாறான அத்தகைய தொகை பெறுமதியாகவுள்ள மேல் நீதிமன்றத்தின் முன்னரான குடியியல் நடவடிக்கையாகக் கருதப்படல் வேண்டும் ;

(ஆ) அவ்வாறு எடுத்துரைக்கப்பட்ட ஒவ்வொரு வழக்கும், வாரியத்தினால் அதனோடு இணைக்கப்பட்ட புத்தகங்கள், ஆவணங்கள், பத்திரங்கள் எல்லாவற்றுடனும், மேல் நீதிமன்றத்தின் முன்னரான குடியியல் நடவடிக்கைகளிலான தனித்தவொரு காண்பிப் பொருளாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) ஆணையாளர், அவர் மேன்முறையீட்டாளராக இருப்பின், பதவியின் பயனானதுடர்ச்சி ஒன்றில் வழக்குத் தொடரும் அரசாங்க அலுவலர் ஒருவராக அல்லது மேன்முறையீட்டில் அவர் எதிர்வாதியாக இருப்பின், பதவியின் பயனான துடர்ச்சி ஒன்றில் தமக்கெதிராக வழக்குத் தொடரப்பெற்ற அரசாங்க அலுவலர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எடுத்துரைக்கப்பட்ட வழக்கை மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பும் போது அல்லது அதற்கு முன்னர், அதனைத் தேவைப்படுத்துபவரான திறத்தவர், மற்றத் திறந்தவருக்கு தனது விண்ணப்பத்தின் பேரில் வழக்கொன்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது என அவருக்கு அறிவிக்கும் எழுத்திலான அறிவித்தலை அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன் எடுத்துரைக்கப்பட்ட வழக்கின் பிரதியொன்றை அவருக்கு வழங்குதல் வேண்டும்.

(5) எடுத்துரைக்கப்பட்ட வழக்கொன்றினை மேல் நீதிமன்ற நீதிபதிகளில் எவரேனும் திருத்தம் செய்வதற்கென வாரியத்திற்குத் திருப்பி அனுப்பச் செய்யலாம் என்பதுடன், அவ்வழக்கானது வாரியத்தினால் அதற்கிணங்கத் திருத்தப்படுதலும் வேண்டும்.

(6) மேல் நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்ட எவரும் எடுத்துரைக்கப்பட்ட வழக்கில் எழுகின்ற ஏதேனும் சட்டப் பிரச்சினையைக் கேட்டுத் தீர்மானிக்கலாம் என்பதுடன், அத்தகைய பிரச்சினையின் மீதான நீதிமன்றத்தின் முடிவுக்கு இணங்க, எதிர் மேன்முறையீட்டுக்கு உட்பட்ட அபிப்பிராயத்தை உறுதிப்படுத்தலாம் அல்லது திருத்தலாம் அல்லது வாரியத்தினால் தீர்மானிக்கப்பட்ட வரி மதிப்பீட்டை அல்லது அறிவித்தலை உறுதிப்படுத்தலாம், குறைக்கலாம், அதிகரிக்கலாம் அல்லது நீக்கலாம் அல்லது அதன் மீதான நீதிமன்றத்தின் அபிப்பிராயத்துடன் வழக்கை வாரியத்திற்கு திருப்பியனுப்பலாம். வழக்கொன்று நீதிமன்றத்தினால் அவ்வாறு திருப்பியனுப்பப்படுமிடத்து, நீதிமன்றத்தின் அபிப்பிராயத்திற்கிணங்க வாரியமானது தனது வரி மதிப்பீட்டை திருத்துதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் கீழ் மேல் நீதிமன்றத்தின் முன்னருள்ள நடவடிக்கைகள் எவற்றிலும் நீதிமன்றமானது, மேல் நீதிமன்ற வழக்குச் செலவுத் தொகை சம்பந்தமாகவும், (1) ஆம் உட்பிரிவின் கீழ் செலுத்தப்பட்ட பணத்தொகை சம்பந்தமாகவும் நீதிமன்றம் பொருத்தமானது என கருதுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(8) உட்பிரிவு (6) இன் கீழான மேல் நீதிமன்றத்தின் கட்டளை எதற்கும் எதிராக ஆணையாளர் அல்லது வேறு எவரேனும் திறத்தவர் உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதை இயலச் செய்யும் நோக்கங்களுக்காகவும் மேல் நீதிமன்றத்தின் தீர்ப்புக்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தல் தொடர்பில் உள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காகவும் –

(அ) மேல் நீதிமன்றத்தில் (6) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதான கட்டளையொன்று அந் நீதிமன்றத்தினால் (7) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை ஒன்றுடன் சேர்த்து, ஆணையாளருக்கும் அத்தகைய வேறு திறத்தவருக்கும் இடையே உள்ள குடியியல் வழக்கொன்றில் மேல் நீதிமன்றத்தின் முற்றான தீர்ப்பாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய குடியியல் வழக்கில் பிணக்கில் உள்ள விடயத்தின் பெறுமதியானது ஐயாயிரம் ரூபாவாகக் கருதப்படுதல் வேண்டும் ;

ஆயின், குறித்துரைக்கப்பட்ட வழக்கில், பிணக்கிலுள்ள முத்திரைத் தீர்வையின் தொகையென ஐயாயிரம் ரூபாவுக்கு மேலான ஒரு தொகையை வாரியமானது எடுத்துக் காட்டியிருக்குமிடத்து, அத்தகைய குடியியல் வழக்கில் பிணக்கில் உள்ள விடயத்தின் பெறுமதியானது, எடுத்துக் காண்பிக்கப்பட்ட அவ்வாறான மேலான தொகையாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) ஆணையாளருக்கு அத்தகைய ஏதேனும் மேன்முறையீடு தொடர்பாக அத்தகைய எழுத்திலான சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டதான வைப்புத் தொகையை கட்டுமாறு அல்லது கட்டணம் அல்லது பிணைப்பொறுப்பு எதனையும் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுதலாகாது.

அத்தியாயம் XXVIII

***வரியை அறவிடல்***

*83. (1)* இவ்வத்தியாயத்தில் "வரி" என்பது, "மொத்த விற்பனை வரவு வரி", "முத்திரைத் தீர்வை" என்பவற்றையும் அத்தகைய மொத்த விற்பனை வரவு வரியுடனும் முத்திரைத் தீர்வையுடனும் சேர்க்கப்பட்ட ஏதேனும் பணத்தொகையையும் அத்துடன், வேறெவையேனும் வரிகள், குற்றப்பணங்கள், தண்டங்கள், கட்டணம் அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் இறுக்கப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட எத்தன்மைத்தானதுமான செலவுகள் என்பவற்றையும் உள்ளடக்கும்.

*(2)* பிரிவு *(12)* இன் கீழ் அல்லது *55 (1)* (ஆ) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலினால் செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வரியானது, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

*(3)* பிரிவு *12* இன் கீழ் *13* ஆம் பிரிவின் கீழ் *55 (1)* (ஆ) என்னும் பிரிவின் கீழும் ஒவ்வொரு காலாண்டும் செலுத்தப்படற்பாலதான வரியானது, அதன்கண் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன் செலுத்தப்படாதிருக்குமிடத்து அத்தகைய வரியானது வரியின் *10* சதவீதமும் வரி செலுத்தத் தவறிய ஒவ்வொரு மாதத்திற்கும் தவறிய வரியின் *2* சதவீதப்படியுமான ஒவ்வொரு மாதத்திற்கும் குற்றவிறுப்பொன்றுடன் சேர்த்துத் தவணை தவறிய வரியாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், வரியைச் செலுத்துவதற்காளான ஆள் தவணை தவறுபவரொருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

ஆயினும், தண்டமாகக் செலுத்தப்படற்பாலதான மொத்தத்தொகை, செலுத்த தவறப்பட்டுள்ள வரியின் *50* சதவீதத்தை விஞ்சுதலாகாது.

*(4)* மேன்முறையீடு எதுவும் எவ்வாறு இருப்பினும் அத்தகைய மேன்முறையீட்டின் மீதான தீர்மானம் முடிவுறாதிருக்கையில் வரியின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் கொடுப்பனவு நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டுமென ஆணையாளர் கட்டளையிட்டாலன்றி வரி செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கட்டளையின் மீது நிறுத்தி வைக்கப்பட்ட தொகை செலுத்தத் தவறியதாகக் கருதப்படுதலாகாது.

*(5)* உட்பிரிவு *(4)* இன் கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட வரி அல்லது அதன் ஏதேனும் பாகம் அறவிடப்படமுடியாததாக வரும் சாத்தியம் உள்ளதென அல்லது மேன்முறையீட்டாளர், அவரது மேன்முறையீட்டைத் தொடருவதை நியாயமற்ற முறையில் தாமதப்படுத்துகின்றார் என ஆணையாளர் அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அவர் அவ் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை ஒழிக்கலாம் என்பதுடன் வழக்குத் தேவைப்படுவதாக அவருக்குத் தோன்றுகின்றவாறான அத்தகைய புதிய கட்டளையையும் ஆக்கலாம் என்பதுடன் அப்புதிய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படாதிருக்கின்ற ஏதேனும் வரியின் தொகை தவணை தவறியதாக கருதப்படுதல் வேண்டும்.

*(6)* இப்பாகத்தின் கீழான மேன்முறையீடொன்று இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டதன் மீது அல்லது ஆணையாளரினால் ஏதேனும் கட்டளை ஆக்கப்பட்டதன் மீது, *(4)* ஆம் உட்பிரிவின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதேனும் வரியானது, செலுத்தப்படற்பாலதாக வருமிடத்து அல்லது அறிவித்தல் ஒன்றின் கீழ் செலுத்தப்படற்பாலதான வரி அதிகரிக்கப்படுமிடத்து ஆணையாளர் ஏதேனும் வரி அல்லது மிகுதி வரி எந்த திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டுமோ அந்தத் திகதியை நிர்ணயித்து மேன் முறையீட்டாளருக்கு எழுத்தில் அறிவித்தல் ஒன்றை கொடுத்தல் வேண்டும். அத்தகைய திகதி முடிவடைவதற்கு முன்னர் செலுத்தப்படாத ஏதேனும் வரி தவணை தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*84.* செலுத்தத் தவறியதான ஏதேனும் வரி, தவணை தவறுபவரின் எல்லாச் சொத்துக்களின் மீதும் ஒரு முதல் இறுப்பாதல் வேண்டும். *தீர்வை முதல் இறுப்பாதல் என்பது.*

ஆயின்,

(i) பிரிவு *86* இன் ஏற்பாடுகளுக்கு இணங்க, சொத்தினைக் கைப்பற்றுவதற்கு முன்னரான பெறுமதி கொடுத்த, தன்நோக்கு கொள்வனைக்காரருக்கு வரி செலுத்தத் தவறியவரினால் விற்கப்பட்ட சொத்துக்களுக்கு அத்தகைய பொறுப்பானது வரிவுபடுத்தப்படுதலோ அல்லது அவற்றைப் பாவிப்பதாதலோ ஆகாது ; அத்துடன்

(ii) அசைவற்ற ஆதனம் தொடர்பில் செலுத்தத் தவறியிருக்கும் தொகையானது, பெறுமதி கொடுத்து தன்நோக்குடன் உருவாக்கப்பட்டதும் அத்தகைய கைப்பற்றுகைத் திகதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட்டதுமான குத்தகை அல்லது பாரபந்தம் எதற்கும் முந்துரிமை பெற்றிருத்தல் ஆகாது.

*தவறுபவருக்கு எதிரான அறிவித்தல்.*

85. (1) ஏதேனும் வரி செலுத்தத்தவறியதாகவுள்ளவிடத்து, ஆணையாளர் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் முறையில் அத்தகைய வரியை அறவிட முற்படும் முன்னர் –

(அ) அத்தகைய வரியின் விபரங்களையும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய வரியை அறவிடுவதற்கென நடவடிக்கை எடுக்கும் எண்ணம் உள்ளதென்றும்

குறிப்பிட்டு, தவறுபவருக்கு எழுத்தில் அறிவித்தல் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) அத்தகைய தவணை தவறுபவர், 55 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழான ஏதேனும் மதிப்பீடு அல்லது அறிவித்தலுக்கெதிராக தகுந்த காலப்பகுதிக்குள் மேன்முறையீடு செய்யாது விட்டிருந்தால் இப்பிரிவினது உட்பிரிவு (1) இன் கீழ் வழங்கப்பட்ட அறிவித்த திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் அவ்வாறு இறுத்தப்பட்ட வரிக்கு எதிராக ஆட்சேபனை எதனையும் செய்யலாம் என்பதுடன், இந்நியதிச் சட்டத்தில் எதுவும் முரணானதாய் இருப்பினும், ஆணையாளர் அத்தகைய ஆட்சேபனைகளைச் சீர்தூக்கிப் பார்த்தலும் அதன் மீதான அவரது முடிவை கொடுத்தலும் வேண்டும் என்பதோடு அம்முடிவே முற்றானதாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவில் உள்ள எது எவ்வாறு இருப்பினும் 55 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல் ஒன்றுக்கு எதிராக மேன்முறையீடு ஒன்று செய்யப்பட்டு, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வரிக்கொடுப்பனவு ஆணையாளரின் கட்டளை மீது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளவிடத்து, அந்த மேன்முறையீட்டுக் கேட்பின்போது மேன்முறையீட்டாளர் அந்த அறிக்கை தொடர்பில் குறித்த ஒரு பணத்தொகை வரியாக செலுத்துமதியாக உள்ளதென அல்லது செலுத்துமதியாகும் சாத்தியம் உள்ளதென உடன்படுபவராயின் ஆணையாளர் மேன்முறையீட்டாளருக்கு எழுத்தில் வழங்கும் அறிவித்தலின் மூலம் அத்தகைய பணத்தொகையை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துமாறு மேன்முறையீட்டாளரை பணிக்கலாம்.

அத்தகைய திகதி முடிவடைவதற்கு முன்னர் செலுத்தப்படாத ஏதேனும் பணத்தவணை செலுத்தத்தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இப்பாகத்தின் கீழான மேன்முறையீட்டு இறுதித் தீர்மானத்தின் மீது செலுத்தத் தவறிய ஏதேனும் வரி குறைக்கப்படும் இடத்து அத்தகைய வரி தொடர்பில் செலுத்தப்படற்பாலதானது குற்றவிறுப்பு விகிதாசாரப்படி குறைக்கப்படல் வேண்டும்.

*வரி சேகரிப்பாளர்களை நியமித்தல்.*

86. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென வரிசேகரிப்பாளர்களை ஆணையாளர் நியமிக்கலாம்.

(2) (அ) ஏதேனும் வரி செலுத்தத் தவறியதாக இருக்கும் இடத்து ஆணையாளர் அத்தகைய வரி பற்றிய விபரங்களும் தவறுபவரின் பெயரும் அடங்கிய சான்றிதழ் ஒன்றை வரிசேகரிப்பாளர் ஒருவருக்கு வழங்கலாம். அத்துடன், அத்தகைய சான்றிதழ் எந்த அலுவலருக்கு வழங்கப்பட்டதோ அந்த அலுவலர் அச்சான்றிதழில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தவணை தவறுபவரிடமிருந்து அவருடைய அசைவுள்ள ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதன் மூலம் அவ்வரியை அறவிடச் செய்வதற்கு இத்தால் தத்துவம் பெறுகின்றார் என்பதுடன் தேவைப்படுத்தவும்படுகின்றார்;

(ஆ) அசைவுள்ள ஆதனத்தின் கைப்பற்றுகையானது, அத்தகைய அலுவலர் அது தொடர்பாக மிக உகந்ததெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் பயனுறுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அசைவுள்ள ஆதனம் எதுவும் அத்தகைய அலுவலரினால் கைப்பற்றப்பட்டதும் உடனடியாக அத்தகைய ஆதனத்தின் நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டு, அவரால் கையொப்பம் இடப்பட்டு தவறுபவருக்குக் கொடுக்கப்படல் வேண்டும் என்பதுடன், அதன் பிரதி ஒன்று ஆணையாளருக்கு கொடுத்துதவுதலும் வேண்டும் ;

(இ) அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆதனம் –

i இலங்கை நாணயத்திலான காசாக இருக்கும் இடத்து அத்தகைய காசு செலுத்தத் தவறியுள்ள வரியை கொடுத்துத் தீர்ப்பதற்கு பயன்படுத்தப்படல் வேண்டும் ;

ii வெளிநாட்டு நாணயத்திலான காசாக இருக்கும் இடத்து அத்தகைய காசு மத்திய வங்கியில் வைப்பிலிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அதிலிருந்து பெறப்படும் வருவாய் செலுத்தத்தவறியுள்ள வரியை கொடுத்துத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படல் வேண்டும் ;

(iii) காசு தவிர்ந்த ஆதனமாக இருக்கும் இடத்து அத்தகைய ஆதனம் தவறுபவரது செலவுகளிலும் கட்டணங்களிலும் 5 நாட்களுக்கு வைத்திருக்கப்படல் வேண்டும். தவறுபவர் 5 நாட்களுக்குள்ளாகச் செலுத்தத் தவறிய வரியைச் செலவுகளுடனும் கட்டணங்களுடனும் சேர்த்து செலுத்தாவிடில் வரி சேகரிப்பாளர் அத்தகைய ஆதனத்தைப் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும் அல்லது அத்தகைய ஆதனம் கைமாற்றத்தகு சாதனம் ஒன்றாகவோ அல்லது ஏதேனும் கூட்டுத்தாபனத்திலுள்ள அல்லது பகிரங்க கம்பனியில் உள்ள ஒரு பங்காகவோ இருக்கும் இடத்து, அதனை அந்நாளன்றுள்ள சந்தை வீதப்படி தரகர் ஒருவர் மூலமாகவோ விற்கச் செய்வித்தல் வேண்டும்.

(ஈ) பந்தி (இ) இன் உட்பந்தி (iii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட விற்பனையின் மூலம் தேறிப் பெறப்பட்ட பணத்தொகை –

(i) முதலாவதாக அவ்வாதனத்தைக் கைப்பற்றுவதற்கான, வைத்திருப்பதற்கான, விற்பனை செய்வதற்கான செலவுகளையும் கட்டணங்களையும் செலுத்துவதற்கும்; அத்துடன்

(ii) இரண்டாவதாக, செலுத்தத் தவறிய வரியைக் கொடுத்துத் தீரப்பதற்கும், பயன்படுத்தல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் மீதி கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரர்களுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(3) கைப்பற்றுகை பயன்படுத்தப்படவில்லை என்பது எப்படியாயிருப்பினும், இப்பிரிவின் கீழ் தவறியவருக்கெதிராக, நடவடிக்கை எடுப்பதில் வரி சேகரிப்பாளரால் இறுக்கப்பட்ட நியாயமான செலவுகளை தவணை தவறிய எவரிடமேனும் இருந்து அறவிடுதல் வரிசேரிகப்பாளருக்குச் சட்டபூர்வமானதாகுதல் வேண்டும். காசு கைப்பற்றப்பட்டவிடத்து, அவ்வாறு கைப்பற்றப்பட்ட காசிலிருந்து அத்தகைய நியாயமான செலவுகள் எதிரீடு செய்யப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் வரிசெலுத்தத் தவறியிருக்குமிடத்தும், அத்துடன் (2) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட வழிமுறையில் அதனை அறவிடுதல் செயற்படுத்தப்படற்பாலதல்ல அல்லது உகந்ததல்ல என ஆணையாளர் அபிப்பிராயப்படுமிடத்தும் அவர் அத்தகைய வரி பற்றிய விபரங்களுக்கும் அவ்வரி எந்த ஆளினால் அல்லது ஆட்களினால் செலுத்தப்படற்பாலதோ அந்த ஆளின் பெயரும் அல்லது ஆட்களின் பெயர்களும் அடங்கிய சான்றிதழ் ஒன்றை தவறுபவர் வதிகின்ற அல்லது தவறுபவருக்குச் சொந்தமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஓர் ஆதனம் அமைந்திருக்கின்ற ஏதேனும் மாவட்டத்தில் நியாயாதிக்கம் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றம் ஒன்றிற்கு வழங்கலாம் என்பதுடன், அதன்மேல் அந்நீதிமன்றமானது, தவணைதவறுபவரின் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எல்லாவற்றையும் அல்லது எதனையும் வரியை அறவிடுவதற்கு அவசியமானதெனக் கருதக்கூடிய அதன் அத்தகைய பாகத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதற்கு அதிகாரம் அளித்தும், தேவைப்படுத்தியும் நிறைவேற்று எழுத்தாணை ஒன்றை பிசுக்காலுக்கு வழங்குவதற்கு பணித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கைப்பற்றுகைக்கும் விற்பனைக்கும் குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 226 முதல் 297 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக அசைவுள்ள ஆதனம் என்பது பொறித்தொகுதியையும் எந்திர சாதனத்தையும் உள்ளடக்கும்.

(5) ஆணையாளர், அப்பிரிவின் கீழ் சான்றிதழ் ஒன்றை வழங்கும் போதெல்லாம் அதுபற்றிய அறிவிப்பு ஒன்றினை நேரில் சேர்ப்பதன் மூலம் அல்லது அஞ்சலில் அனுப்பப்படும் பதிவுக் கடிதத்தின் மூலம் அல்லது தந்தி மூலம் தவணை தவறுபவருக்கு வழங்குதல் வேண்டும். ஆயினும் அத்தகைய அறிவிப்பு தவறுபவருக்கு கிடைக்கவில்லை என்பதற்காக இப்பிரிவின் கீழான நடவடிக்கை செல்லுபடியற்றதாதல் ஆகாது.

நீதிவான் முன் னிலையில் அற விடுவதற்கான நட வடிக்கைகள்.

87. (1) ஏதேனும் விடயத்தில் செலுத்தத்தவறிய வரியை கைப்பற்றுகையின் மூலமும் விற்பனையின் மூலமும் அறவிடுவது செயற்படுத்தப்படற்பாலதல்ல அல்லது உகந்ததல்ல என ஆணையாளர் அபிப்பிராயப்படுமிடத்து அல்லது கைப்பற்றுகை மூலமும் விற்பனை மூலமும் முழுவரியும் அறவிடப்பட்டிராதவிடத்து, அவர் அத்தகைய வரி பற்றிய விபரங்களும் தவறுபவரின் பெயர் அவர் கடைசியாக வசித்து வந்ததாக அறியப்படும் இடம் என்பன பற்றிய விபரங்களும் அடங்கிய சான்றிதழ் ஒன்றை அத்தகைய இடம் அமைந்துள்ள பிரிவில் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் ஒருவருக்கு வழங்கலாம்.

அதன் மேல் அந்நீதிவான் அத்தவறுபவரை தம்முன் கட்டளை விட்டழைத்தல் வேண்டும் என்பதுடன் வரியை அறவிடுவதற்கென தவறுபவருக்கெதிராக ஏன் மேலும் நடவடிக்கைகள் எடுபடக்கூடாதென்பதற்கு காரணம் காண்பிக்குமாறு கோரி, அவர் போதிய காரணம் காட்டத்தவறும் பட்சத்தில் செலுத்தத் தவறிய வரியானது

குற்றப்பணத்தினால் மட்டும் தண்டிக்கப்படற்பாலதான அல்லது மறியல் தண்டனையால் தண்டிக்கப்படற்பாலதல்லாத தவறு ஒன்றுக்கு அத்தகைய தவறுபவரின் மீது நீதிவானின் தண்டனைத் தீர்ப்பினால் விதிக்கப்பபட்ட ஒரு குற்றப்பணமாக கருதப்படுதல் வேண்டும் என்பதோடு அத்தகைய தவறுக்காக விதிக்கப்பட்ட குற்றப்பணமாக ஒன்றினைச் செலுத்தத் தவறுதலின் தொடர்பில், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அதன் (அ), (ஆ), (ஐ) என்னும் பந்திகள் தவிர்ந்த) ஏற்பாடுகள் அதன் மீது ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் அத்தகைய தண்டனைத் தீர்ப்பை விதிக்கும் நேரத்தில் அவ்வுட்பிரிவினது ஏற்பாடுகளின் மூலம் அவர் விடுத்திருக்கக்கூடிய பணிப்பு எதனையும் விடுக்கலாம்.

(2) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (2) முதல் (5) வரையிலான உட்பிரிவுகளில் உள்ள எதுவும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் விடயத்தில் ஏற்புடையதாதல் ஆகாது.

(3) உட்பிரிவு (1) இன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வழக்கில் தவணை தவறுபவர் குற்றப்பணத்தைச் செலுத்தாமைக்காக மறியல் தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டவராக அவ்வுட்பிரிவினால் கருதப்படுமிடத்து நீதிவான் அக்குற்றப்பணத்தொகையைச் செலுத்துவதற்கான கால அவகாசத்தினை அனுமதிக்கலாம் அல்லது அத்தொகையை தவணை அடிப்படையில் கொடுப்பனவு செய்ய வேண்டும் எனப் பணிக்கலாம்.

(4) உட்பிரிவு (1) இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அதன் கீழ் காரணம் காட்டுவதற்கு அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ் குற்றப்பணக்கொடுப்பனவிற்கு கால அவகாசம் அளிப்பதற்கான முன்நிபந்தனையாக பிணை கொடுக்கப்பட வேண்டும் என நீதிமன்றம் தேவைப்படுத்தலாம் ; அத்துடன் தவணை தவறுபவர் அவ்வாறு பிணை கொடுக்க வேண்டுமென தேவைப்படுத்தப்படுமிடத்து 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XXXIV என்பதன் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) குற்றப்பணக்கொடுப்பனவு ஒன்று தவணை அடிப்படையில் செலுத்தப்படலாமென (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதிவான் ஒருவர் பணிக்குமிடத்தும் அத்துடன் ஏதேனும் தவணைப் பணக்கொடுப்பனவு தவணை தவறுமிடத்தும், அப்போது செலுத்தப்படாமல் எஞ்சியிருக்கும் எல்லாத் தவணைப் பணங்களினதும் கொடுப்பனவு தவணை தவறப்பட்டுள்ளது என்றாற்போன்று நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

(6) உட்பிரிவு (1) இன் கீழான எவையேனும் நடவடிக்கைகளில் வரி செலுத்தப்படவேண்மென உரிய முறையில் தேவைப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கும் அது தவணை தவறியுள்ளது என்பதற்கும் ஆணையாளரின் சான்றிதழ் போதிய சான்றாதல் வேண்டும் என்பதுடன் தொகை மிகையானது செம்மையற்றது அல்லது மேன்முறையீட்டின் கீழ் உள்ளது என்னும் வழக்குரை எதுவும் ஏற்றுக் கவனிக்கப்படுதலும் ஆகாது.

88. (1) எவரேனும் ஆளினால் செலுத்தப்படற்பாலதான வரி செலுத்தத் தவறியிருக்கும் இடத்தும் அத்துடன் எவரேனும் ஆள் –

(அ) தவணை தவறுபவருக்கு அல்லது அவரது முகவருக்கு பணம் செலுத்த வேண்டியுள்ளார் என அல்லது செலுத்த உள்ளார் என ; அல்லது

(ஆ) தவறுபவருக்காக, அல்லது அவரது முகவருக்காக அல்லது தவறுபவரின் அல்லது அவரது முகவரின் நிமித்தம் பணம் வைத்திருக்கின்றார் என ; அல்லது

(இ) தவறுபவருக்கு அல்லது அவரது முகவருக்கு கொடுப்பனவு செய்வதற்காக வேறு ஒருவரேனும் ஆளின் நிமித்தம் பணம் வைத்திருக்கின்றார் என ; அல்லது

(ஈ) தவறுபவருக்கு அல்லது அவரது முகவருக்கு பணம் செலுத்துவதற்காக வேறு எவரேனும் ஆளிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ளார் என

நம்புவதற்கு இடம் உண்டு என ஆணையாளருக்குத் தோன்றுமிடத்தும், அறிவித்தலில் செலுத்தத் தவறிய வரியின் தொகையை விஞ்சாத அத்தகைய எவையேனும் பணங்களைப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகருக்குச் செலுத்துமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தும் எழுத்திலான அறிவித்தல் ஒன்றை (அதன் பிரதி ஒன்று தவறுபவருக்கு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும்) ஆணையாளர் அவ்வாளுக்கு வழங்கலாம். அவ்வறிவித்தலானது, அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெறும் திகதியில் அவரிடமுள்ள அல்லது அவரிடமிருந்து வருமதியாக உள்ள அல்லது அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற திகதியின் பின்னர் மூன்று மாத காலப்பகுதிக்குள்ளாக எக்காலத்திலேனும் அவருக்கு கிடைத்துள்ள அல்லது அவரிடமிருந்து வருமதியாகவுள்ள அல்லது அவரால் செலுத்தப்படவுள்ள அத்தகைய எல்லாப் பணங்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இப்பிரிவைப் பின்பற்றி ஏதேனும் கொடுப்பனவைச் செய்துள்ள எவரேனும் ஆள், தவறுபவரினதும் சம்பந்தப்பட்ட வேறு எல்லா ஆட்களினதும் அதிகாரத்தின் கீழ் செயலாற்றியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், எழுத்திலான ஏதேனும் சட்டத்தின், ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் அத்தகைய கொடுப்பனவு தொடர்பாக எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கெதிராகவும் இத்தால் நட்ட உத்தரவாதம் அளிக்கப்படுகின்றார்.

(3) உட்பிரிவு (1) இன் கீழ் அறிவித்தல் கொடுக்கப்பட்டு அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பணங்கள் அவருக்கு கிடைக்காத காரணத்தினால் அல்லது அத்தகைய பணங்கள் எதுவும் அவ்வுட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட அக்காலப்பகுதிக்குள்ளாக அவரிடமிருந்து வருமதியாகாத காரணத்தினால் அவ்வறிவித்தலுக்கு இணங்கி ஒழுக இயலாதிருக்கும் எவரேனும் ஆள் அக்காலப்பகுதி முடிவடைந்த பின்னர், பதினான்கு நாட்களுக்குள்ளாக அந்நிகழ்வுகள் பற்றி ஆணையாளருக்குத் தெரிவித்து எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(4) உட்பிரிவு (1) இன் கீழ் எந்த ஆளுக்கு அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்டதோ அந்த ஆள் அதற்கிணங்கி ஒழுக இயலாதவராக இருப்பதுடன் (3) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஆணையாளருக்கு அறிவித்தல் கொடுக்கவும் தவறியுள்ளவிடத்து அல்லது அத்தகைய ஆள் அவ்வறிவித்தல் தொடர்புறுத்தும் வரியை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை செலுத்தக்கூடியவராய் இருந்தும் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் பதினான்கு நாட்களுக்குள் ஆணையாளரினால் கொடுக்கப்பட்ட அறிவித்தலினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தகைய வரியை அல்லது ஏதேனும் பாகத்தை செலுத்தியில்லாத விடத்தும், அத்தகைய ஆள் தனியாள் ஒருவராக இருப்பின் அத்தகைய தனி ஆள் அல்லது அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட அல்லது ஆள் கூட்டிணைக்கப்படாத கம்பனி ஒன்றாக அல்லது ஆட்கள் யாக்கம் ஒன்றாக இருப்பின், அத்தகைய கம்பனியின் அல்லது யாக்கத்தின் செயலளார், முகாமையாளர் அல்லது வேறு பிரதான அலுவலர், அவ்வாளினால் செலுத்தப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட வரி முழுவதற்கும் தாமே பொறுப்புடையவராதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரி விடயத்திற்கு ஏற்றவாறு அத்தகைய தனியாளிடமிருந்து, செயலாளரிடமிருந்து, முகாமையாளரிடமிருந்து அல்லது வேறு பிரதான அலுவலரிடமிருந்து இந்நியதிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எல்லா வழிமுறைகளாலும் அறவிடவும்படலாம்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தவறுபவர்" என்னும் சொல்லமைப்பு செலுத்தத்தவறிய ஆள் ஒருவரின் முகவரையும் உள்ளடக்குவதாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இப்பிரிவின் ஏற்பாடுகள் எவரேனும் ஆள் உயிருடன் இருந்திருப்பின் அவரால் செலுத்தப்படற்பாலதாக இருந்திருக்கக்கூடியதும் செலுத்தத் தவறியதுமான வரியின் ஏதேனும் விடயத்தில் ஏற்புடையதாதல் வேண்டும். அவ்வேற்பாடுகளின் ஏற்புடைமையின் நோக்கங்களுக்கென ஏதேனும் அத்தகைய விடயத்தில் (1) ஆம் உட்பிரிவில் தவறுபவர் என்னும் சொல்லமைப்பு –

(அ) இறந்த ஆள் ஒருவரின் மரண சாதன நிறைவேற்றுநர் அல்லது மரணச் சொத்து நிர்வாகி; அல்லது

(ஆ) இறந்த ஆள் ஒருவரின் ஆதனத்தை உடமையில் எடுக்கின்ற அல்லது அவ்வாதனத்தில் தலையிடுகின்ற எவரேனும் ஆள் ; அல்லது

(இ) இறந்த ஆளொருவரது மரணச்சொத்து தொடர்பாக மரண சாதனத் தத்துவப்பத்திரம் அல்லது மரணச் சொத்து நிர்வாகத் தத்துவப் பத்திரம் வழங்குவதற்காக அல்லது மீள இலச்சினையிடப் பெறுவதற்காக ஒரு மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்திருக்கின்ற அல்லது விண்ணப்பிப்பதற்கு உரித்துடைய எவரேனும் ஆள் எனப் பொருளாகும்.

இலங்கையை விட்டு வெளியேறும் ஆட்களிடமிருந்து வரி அறவீடு.

89. (1) எவரேனும் ஆள், அவரால் செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வரியின் தொகையைச் செலுத்தாமல் இலங்கையை விட்டுச் செல்ல இருக்கின்றார் அல்லது செல்லக்கூடிய சாத்தியம் உள்ளது என ஆணையாளர் அபிப்பிராயப்படுகின்ற இடத்து அவர், அத்தகைய தொகையும் அத்தகைய ஆளின் பெயரும் பற்றிய விபரங்கள் அடங்கிய சான்றிதழ் ஒன்றை நீதிவான் ஒருவருக்கு வழங்கலாம். நீதிவான் அதனைப் பெற்றுக்கொண்டதன் பேரில் அத்தகைய ஆள் அத்தொகையை செலுத்தாமல் அல்லது அதன் கொடுப்பனவுக்கு ஆணையாளர் திருப்தியுறும் வகையில் பிணைப்பொறுப்பு வழங்காமல் இலங்கையை விட்டுச் செல்வதைத் தடைசெய்யுமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு பணிப்பாளர் நாயகத்தை பணித்தல் வேண்டும்.

(2) ஆணையாளர் அவரது சான்றிதழை நீதிவானுக்கு வழங்கும் நேரத்தில் அதனைப்பற்றிய அறிவிப்பு ஒன்றை நேரடியாகச் சேர்ப்பிப்பதன் மூலம் அல்லது அஞ்சலில் அனுப்பப்படும் பதிவுத் தபால் மூலம் அல்லது தந்தி மூலம் அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும். ஆனால், அத்தகைய அறிவிப்பு எதுவும் அத்தகைய ஆளுக்கு கிடைக்கப்பெறாமையானது இந்நியதிச் சட்டத்தின் கீழான நடவடிக்கைகளைச் செல்லுபடியற்றனவாக்குதல் ஆகாது.

(3) தொகை செலுத்தப்பட்டுள்ளதென அல்லது பிணைப்பொறுப்பு கொடுத்துதவப்பட்டுள்ளதென அல்லது அத்தொகை பொலிஸ் நிலையமொன்றிற்குப் பொறுப்பாயுள்ள பொலிஸ் அலுவலர் ஒருவருக்குச் செலுத்தப்பட்டுள்ளதெனக் கூறுகின்றதும் ஆணையாளரால் கையொப்பமிடப்பட்டதுமான சான்றிதழொன்றை முன்வைத்தலானது, அத்தகைய ஆளை இலங்கையை விட்டுச் செல்ல அனுமதிப்பதற்குப் போதுமான அதிகாரமாதல் வேண்டும். தீர்வைத் தொகை எந்தப் பொலிஸ் அலுவலருக்கு செலுத்தப்பட்டதோ அந்த பொலிஸ் அலுவலர் எவரும் அத்தகைய தொகையை உடனடியாக ஆணையாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

*வரி அறவீட்டுக்கான ஒன்றுக்கு மேற்பட்ட வழிகள்.*

90. இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுள் எவற்றினதும் பிரயோகமானது இந்நியதிச் சட்டத்தின் கீழ் எவரேனும் ஆளிடமிருந்து வருமதியான வரி முழுவதினதும் அல்லது அதன் ஏதேனும் பகுதியினதும் கொடுப்பவை உறுதிப்படுத்துவதற்கு தவறிவிட்டது அல்லது தவறும் சாத்தியம் கொண்டுள்ளதென ஆணையாளர் அபிப்பிராயப்படுமிடத்து, செலுத்தப்படாது எஞ்சியிருக்கும் ஏதேனும் பணத்தொகையை இவ்வத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேறு ஏதேனும் அறவீட்டு வழிமுறைகளில் அறவிட முற்படும் ஆணையாளருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

*ஏதேனும் ஆளிடமிருந்து வரி அறவிடுவதற்கான தத்துவம்.*

91. ஆணையாளரானவர், எவரேனும் ஆளுக்கு எழுத்தில் வழங்கப்படும் அறிவித்தலின் மூலம் அத்தகைய அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாக அத்தகைய ஆளிடமிருந்து அல்லது வேறு எவரேனும் ஆளிடமிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் வரியை அறவிடும் நோக்கங்களுக்கு ஆணையாளர் தேவைப்படுத்தக் கூடியதான அத்தகைய தகவலை கொடுத்துதவுமாறு அவ்வாளைத் தேவைப்படுத்தலாம்.

## பாகம் - உ

## அத்தியாயம் XXIX

### மதுவரி வருவாய்

*மது வரி அனுமதிப் பத்திர கட்டணங்களும் வாடகைகளும்.*

92. மாகாணத்தில் செலுத்தப்படும் அல்லது சேகரிக்கப்படும் திருத்தப்பட்டவாறான 1912 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மதுவரிக்கட்டளைச் சட்டத்தின் கீழ் அறவிடப்படும் அல்லது விதிக்கப்படும் வாடகைகள், சீவல் உரிமக் கட்டணங்கள் மற்றும் போதை ஊட்டும் மதுபானங்களின் உடைமை - எடுத்துச் செல்லுதல், கொள்வனவு மற்றும் விற்பனை மீதான மதுபான உரிமக் கட்டணங்கள் உட்பட சகல கட்டணங்களும் திருத்தப்பட்டவாறான மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்திற்கிணங்க சேகரிக்கப்பட்டு மாகாண நிதியத்தின் வரவுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

93. மாகாண ஆணையாளர் அல்லது வரி மதிப்பீட்டாளர் பதவி வரிசைக்குக் குறையாதவரும் ஆணையாளரினால் அதன் நிமித்தம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவருமான அலுவலர் ஒருவர் உரிமக் கட்டணங்கள் அல்லது வாடகைகள் அறவிடுதல் தொடர்பிலான ஏதேனும் விடயத்தை சரிபிழை பார்க்கும் நோக்கத்திற்காக எழுத்திலான கட்டளை மூலம் மதுபானத்தை எடுத்துச் செல்லுதல், உடமையில் வைத்திருத்தல், கொள்வனவு செய்தல் அல்லது சில்லறை விற்பனை செய்தல் என்பவற்றில் ஈடுபட்டுள்ள எவரேனும் தவறணை வாடகைக்காரர் அல்லது மதுபான உரிமம் பெற்றவரை அத்தகைய அலுவலரால் சோதனை செய்வதற்கென கணக்குப் புத்தகங்கள், இடாப்புக்கள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் முதலியவற்றைத் தேவைப்படுத்தலாம்.

## பாகம் - ஊ

## அத்தியாயம் XXX

### லொத்தர்கள்

*லொத்தர் வரி.*

94. (1) ஒரு தேசிய லொத்தர் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு லொத்தர் தவிர்ந்த, வடக்கு மாகாணத்தில் லொத்தர்கள் கட்டளைச் சட்டத்திற்கிணங்க நடாத்தப்படும் ஒவ்வொரு லொத்தர்கள் தொடர்பிலும், அத்தகைய லொத்தரின் மொத்த விற்பனை வரும்படிகள் மீது வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் சட்டத்தினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விகிதத்தால் கணிக்கப்பட்ட வரியொன்று இறுத்தப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழாக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்பட்டதிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக மாகாண சபை முன்னர் கொணரப்படுதல் வேண்டும் அல்லது சபையின் கூட்டம் எதுவும் அத்தகைய காலப்பகுதிக்குள் நடாத்தப்படவில்லையாயின் அத்தகைய காலப்பகுதியின் முடிவில் நடாத்தப்படும் முதலாவது கூட்டத்தில் சபையினால் அங்கீகரிக்கப்படுவதற்கென கொணரப்படுதல் வேண்டும்.

(3) சபை அங்கீகரிக்க மறுக்கின்ற கட்டளை எதுவும் அவ்வாறு மறுக்கப்பட்ட திகதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடிக்குப் பங்கமின்றி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படல் வேண்டும். அத்தகைய கட்டளை நீக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டிய திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் லொத்தர் என்பது, லொத்தர் தன்மைத்தான ஏதேனும் பொறுப்பு முயற்சியையும் உள்ளடக்கும்.

*95.* (1) பிரிவு 94 இன் கீழ் விதிக்கப்படும் ஏதேனும் வரி லொத்தர் ஊக்குநரால் அல்லது ஊக்குநர்களால் அரசிறை ஆணையாளருக்குச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும். அத்தகைய வரி செலுத்தப்படவில்லையாயின் அது மாகாண சபைக்குச் செலுத்துமதியான ஒரு கடனாக ஊக்குநரிடமிருந்து அல்லது ஊக்குநர்களிடமிருந்து அறவிடப்படலாம். வரி செலுத்துதல்.

(2) ஊக்குநர் அல்லது ஊக்குநர்கள் வரியை செலுத்தாவிடத்து, அவர் அல்லது அவர்கள் நியதிச் சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இந்நியதிச் சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் தவறொன்றை புரிகின்ற ஒவ்வொரு ஆளும் நீதிவான் முன்னரான சுருக்க விளக்க விசாரணையின் பின்னர் குற்றத் தீப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப் பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான இரு வகையில் ஒரு வகையான மறியல் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவில் ஒரு லொத்தர் தொடர்பில் ''ஊக்குநர்''' என்பது, லொத்தர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு லொத்தரை ஊக்குவிப்பதற்காக அல்லது நடத்துவதற்காக உரிமம்பெற்ற ஆள் ஒருவரென பொருள்படும்.

**பாகம் - எ**

அத்தியாயம் XXXI

**பரிசுப்போட்டிகள்**

*96.* (1) பரிசுப் போட்டிகள் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் உரிமம் ஒன்றின் அதிகாரத்தின் கீழாக வடக்கு மாகாணத்தில் நடாத்தப்படும் ஒவ்வொரு பரிசுப் போட்டியினதும் வருவாய் மீதும் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கும் கட்டளை மூலம் விதித்துரைக்கப்படும் அத்தகைய வீதங்களில் வரியொன்றை இறுத்தல் வேண்டும். வெவ்வேறு பரிசுப் போட்டிகள் தொடர்பில் வெவ்வேறு வீதங்கள் விதித்துரைக்கப்படலாம். பரிசுப் போட்டிகளுக்கு வரி விதித்தல்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் பரிசுப் போட்டி ஒன்றின் வருவாய் மீது விதிக்கப்படும் வரியை அந்தப் பரிசுப் போட்டியின் ஊக்குநர் அத்தகைய போட்டியின் உட்புகுதல் முடிவுற்ற முப்பது நாட்களுள் ஆணையாளரிடம் செலுத்துதல் வேண்டும். வரி செலுத்தப்பட வேண்டிய திகதி.

(3) உட்பிரிவு (1) இற்கு இணங்கியொழுகத்தவறும் பரிசுப் போட்டியொன்றின் ஊக்குநர் இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமொன்று புரிந்தவர் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விசாரணை ஒன்றின் பின்னர் குற்றவாளியாகக் காணப்பட்டு ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம், ஒன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

(4) பரிசுப் போட்டியொன்றின் ஊக்குநர் அத்தகைய பரிசுப் போட்டியின் வருவாய் மீது விதிக்கப்பட்ட வரியை உட்பிரிவு (2) இல் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செலுத்தாவிடத்து, அவ்வரி தவணை தவறியதாகக் கருதப்படுவதுடன் அத்தகைய வரியுடன் தண்டப்பணமான அத்தொகையின் பத்து சத விகிதத்துடன் கூட்டி வந்த தொகையை ஆணையாளர் மாகாண சபைக்கு உரிய கடனாக ஊக்குநரிடமிருந்து அறவிடலாம். வரிக் கொடுப்பனவு தவணை தவறுதல் பொருட்டான தண்டனை.

(5) இந்தப்பிரிவில், பரிசுப் போட்டியொன்றைப் பொறுத்தமட்டில் ''வருவாய்'' என்பது, அத்தகைய போட்டிகளில் உட்புகுதலுக்காகச் செலுத்தப்பட்ட முழுத்தொகை எனப் பொருள்படும். ''ஊக்குநர்'' என்பது, பரிசுப் போட்டியொன்றின் சட்டத்தின் பிரிவு 14 இன் கீழ் அத்தகைய போட்டி ஒன்றின் ஊக்குநராகக் கருதப்படும் ஆள் என பொருள்படும். பொருள் கோடல்.

**பாகம் - ஏ**

அத்தியாயம் XXXII

**நீதிமன்றக் குற்றப்பணங்களும் கட்டணங்களும்**

*97.* (1) வடக்கு மாகாணத்திற்குள் நியாயாதிக்கத்தை பிரயோகிக்கும் ஒரு நீதிமன்றத்தினால் குற்றங்கள் சம்பந்தமாக குற்றப்பணம் விதிக்கப்பட்டு நீதிமன்றத்திற்கு செலுத்தப்பட்டதும் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் ஒரு வரியை, விதிப்பணத்தை அல்லது வேறு அறவீட்டை இறுத்தற்காக விதிக்கப்படும் குற்றப்பணங்களை தவிர்ந்ததுமான எல்லாக் குற்றப்பணங்களும், எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய குற்றப்பணத்தில் இருந்து செய்யப்படவேண்டிய கொடுப்பனவு தொடர்பில் நீதிமன்றம் ஆகக்கூடிய ஏதேனும் பணிப்புக்கு அமைவாக மாகாணத்தின் மாகாண நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். நீதிமன்ற குற்றப்பணம்.

(2) வடக்கு மாகாணத்திற்குள் நியாயாதிக்கம் பிரயோகிக்கும் ஒரு நீதிமன்றத்தினால் சேகரிக்கப்படும் எல்லா நீதிமன்றக் கட்டணங்களும் அம்மாகாணத்தின் மாகாண நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

***பாகம் - I***

*அத்தியாயம்* XXXIII

***நானாவிதம்***

*அறிவித்தலில் உள்ள கையொப்பமும் அதனை சேர்ப்பித்தலும்.*

*98. (1)* இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆணையாளர், பிரதி ஆணையாளர் அல்லது வரி மதிப்பீட்டாளர் ஒருவரினால் வழங்கப்படும் அறிவித்தல் ஒவ்வொன்றும் விடயத்திற்கேற்றாற்போல ஆணையாளரின் அல்லது பிரதி ஆணையாளரின் அல்லது வரி மதிப்பீட்டாளரின் பெயரைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அதன் மீது ஆணையாளரின், பிரதி ஆணையாளரின் அல்லது வரி மதிப்பீட்டாளரின் பெயர் உரிய முறையில் அச்சிடப்பட்டிருப்பின் அல்லது ஒப்பமிடப்பட்டிருப்பின் அத்தகைய அறிவித்தல் ஒவ்வொன்றும் செல்லுபடி உடையனவாதலும் வேண்டும்

*(2)* இந்நியதிச் சட்டத்தின் வலுவைக் கொண்டு வழங்கப்படும் அறிவித்தல் ஒவ்வொன்றும் ஆள் ஒருவருக்கு நேரடியாக அல்லது கடைசியாக அறியப்பட்ட அவரது விதிவிடத்திற்கு அல்லது அவர் வணிகம் கொண்டு நடாத்துகின்ற அல்லது அறிவித்தல் எந்த காலப்பகுதியுடன் சம்பந்தப்பட்டதோ அக்காலப் பகுதியில் அவர் வணிகம் கொண்டு நடாத்திய ஏதேனும் இடத்திற்கு ஒப்படைப்பதன் மூலம் அல்லது அஞ்சலில் அனுப்புவதன் மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

ஆயின், 11ஆம், 13ஆம் அல்லது 14ஆம் பிரிவின் கீழான வரி மதிப்பீட்டு அறிவித்தல் மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் இடத்திற்கு நேரடியாக சேர்ப்பிப்பதன் மூலம் அல்லது பதிவஞ்சல் தபாலில் அனுப்பி வைக்கப்படுவதன் மூலம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

*(3)* அஞ்சலில் அனுப்பப்பட்ட அறிவித்தல் எதுவும் சாதாரண நெறியில் அஞ்சல் மூலம் அது எந்த நாளில் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்குமோ அந்த நாளை அடுத்து வரும் நாளன்று சேர்ப்பிக்கப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

*(4)* அஞ்சல் மூலம் சேர்ப்பிக்கப்பட்டவை நிரூபிக்கையில் அறிவித்தலை உள்ளடக்கிய கடிதம் உரிய முறையில் முகவரியிடப்பட்டு அஞ்சலிலிடப்பட்டது என்பதனை நிரூபிப்பது போதுமானதாதல் வேண்டும்.

*(5)* இந் நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்கென கொடுக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலின் மீது அச்சிடப்பட்டிருப்பதான அல்லது ஒப்பமிடப்பட்டிருப்பதான பெயர் ஒவ்வொன்றும் அல்லது ஏதேனும் சான்றிதழின் மீது ஒப்பமிடப்பட்டிருப்பதும் அதனைக் கொடுப்பதற்கு அல்லது வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயராக கொள்ளப்பட்டதுமான பெயர் ஒவ்வொன்றும் நீதிமுறை கவனத்திற்குட்பட்டதாதல் வேண்டும்.

*தவறுதலாக செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை அல்லது குற்ற விறுப்பு.*

*99.(1)* ஆளெவரும் அவரால் தக்கவாறு செலுத்தப்படற்பாலதான தொகையை விட மிகையாக, ஒத்திணக்கம் மூலமோ வேறு வகையிலோ செய்யப்பட்டதான ஏதேனும் முத்திரைத் தீர்வையை அல்லது குற்றவிறுப்பை செலுத்தி உள்ளாரென, ஏதேனும் முத்திரைத் தீர்வையின் அல்லது குற்றவிறுப்பின் கொடுப்பனவுத் திகதியில் இருந்து மூன்று ஆண்டுகளுக்குள் எழுத்தில் முறைப்படி செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கையினால் ஆணையாளர் திருப்தியுறும் வகையில் நிரூபிக்கப்படுமாயின், அத்தகைய ஆள் அவ்வாறு மிகையாக செலுத்தப்பட்ட தொகையை மீளப்பெறுவதற்கு உரித்துடையராதல் வேண்டும்.

*(2)* ஆளெவரும் அவரால் ஒரு காலாண்டுக்காக இறுத்தப்படற்பாலதான தொகையைவிட மிகையாக ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரியை செலுத்தியுள்ளாரென அக்காலாண்டு முடிவிலிருந்து மூன்று ஆண்டுகளிற்குள் எழுத்தில் முறைப்படி செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கையினால் ஆணையாளர் திருப்தியுறும் வகையில் நிரூபிக்கப்பட்டால் அத்தகைய ஆள் அவ்வாறு மிகையாக செலுத்தப்பட்ட தொகையை மீளப்பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

*(3)* இப்பிரிவிலுள்ள எதுவும் வேறேதேனும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டிற்கான அல்லது மீள் கொடுப்பனவிற்கான ஏதேனும் கால வரையறையை நீடிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு அல்லது வேறு வகையில் செல்லுபடியற்றதாக உள்ள ஏதேனும் ஆட்சேபனையை அல்லது மேன்முறையீட்டை செல்லுபடி உள்ளதாக்குவதற்கு அல்லது இறுதியானதும் முடிவானதுமான ஏதேனும் விடயத்தை மீளாய்வு செய்வதற்கான அதிகாரம் அளிப்பதற்கு செயற்படுத்தப்படுதல் ஆகாது.

*(4)* ஏதேனும் பணத்தொகை 13ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க கணக்கிடப்பட்டிருந்தால் எவரேனும் ஆள் செலுத்தியிருக்க வேண்டியதான அத்தகைய பணத்தொகையிலும் கூடுதலாக

13ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகையை செலுத்தியுள்ளார் என எழுத்தில் முறையாகச் செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கையினால் ஆணையாளர் திருப்தியுறும் வகையில் நிரூபிக்கப்பட்டால் அவ்வாறு செலுத்தப்பட்டதிலிருந்து மூன்று ஆண்டிற்குள் அவ்வாறு மேலதிகமாக உட்பிரிவு (1) இன் ஏற்பாடுகளுக்கிணங்க செலுத்தப்பட்ட தொகையை மீளளிக்கப்பெறுவதற்கு அத்தகைய ஆள் உரித்துடையவராதல் வேண்டும்.

உத்தியோகபூர்வ இரகசியம்

100.(1) இந்நியதிச் சட்டத்தின் கீழான தனது கடமைகளைப் புரியும்போது தவிர, இந் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்காக அல்லது கொண்டு நடாத்துவதில் உதவி புரிவதற்காக பணிக்கமர்த்தப்படும் ஆள் ஒவ்வொருவரும் இந்நியதிச்சட்டத்தின் கீழ் அவரது கடமைகளைப் புரிகையில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய எவரேனும் ஆளின் விவகாரங்கள் தொடர்பிலான எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் இரகசியத்தைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், பேணுவதில் உதவிபுரிதலும் வேண்டும் என்பதோடு அத்தகைய கருமம் எந்த ஆள் தொடர்பானதோ அந்த ஆள் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது அமைச்சர் அல்லது அமைச்சரின் அமைச்சின் செயலாளர் தவிர்ந்த வேறு ஆள் எவருக்கும் அத்தகைய கருமத்தை தெரிவித்தல் ஆகாது. அல்லது ஆணையாளரின் உடமையில் கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள எவையேனும் பதிவேடுகளை எவரேனும் ஆள் பார்வையிடுதல் அல்லது அனுமதித்தல் ஆகாது.

(2) இந் நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஆள் ஒவ்வொருவரும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் செயலாற்ற முன்னர் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இரகசியம் பேணுவதற்கான சத்தியத்தைச் சமாதான நீதிவான் ஒருவர் முன்னிலையில் எடுத்து கீழ் ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அமைச்சரும் அமைச்சரின் அமைச்சின் செயலாளரும் இந்நியதிச்சட்டத்தின் கீழ் செயலாற்ற முன்னர் அத்தகைய முறையில் இரகசியம் பேணுவதற்கான சத்தியத்தை எடுக்கலாம்.

(3) இந் நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஆள் எவரும் ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் விவரத்திரட்டை, ஆவணத்தை அல்லது வரி மதிப்பீட்டை காண்பிக்குமாறு அல்லது இந்நியதிச் சட்டத்தின் அல்லது ஆணையாளரினால் நிருவகிக்கப்படும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன் கொடுக்கும் நோக்கத்திற்கு அவசியமாகக் கூடியவற்றைத் தவிர இந்நியதிச் சட்டத்தின் கீழ் அவரது கடமைகளை புரிகையில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய ஏதேனும் கருமத்தை அல்லது விடயத்தை நீதிமன்றத்தில் வெளியிடுமாறு அல்லது நீதிமன்றத்திற்கு தெரிவிக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் ஆகாது.

(4) இப் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறாயிருப்பினும் மாகாண அரசிறை திணைக்களத்தின் எவரேனும் அலுவலர் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது ஆணையாளரினால் நிர்வகிக்கப்படும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் தமது கடமைகளை புரிகையில் அவரது அறிவுக்கு வரக்கூடிய ஏதேனும் விடயத்தை அத்திணைக்களத்தின் வேறு எவரேனும் அலுவலரிற்கு இந்நியதிச் சட்டத்தின் அல்லது அத்தகைய எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் தமது கடமையை புரிவதற்கு அவசியமாயின் அவ் விடயத்தை, ஆவணங்களை நிரூபித்தல் தொடர்பாக சான்றுக் கட்டளை சட்டத்தில் உள்ளது. எது எவ்வாறாயிருப்பினும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது ஆணையாளரால் நிருவகிக்கப்படும் எழுத்திலான வேறு சட்டத்தின் கீழ் அவரால் பெறப்பட்ட அல்லது அவரால் அல்லது அவரது உடமையில் உள்ள விபரத்திரட்டு அல்லது ஆவணத்திலுள்ள விபரங்களின் பிரதியொன்றை அவரால் அல்லது அவரது சார்பில் அத்தாட்சி பண்ணி ஆணையாளர் ஆனவர் இந்நியதிச் சட்டத்தின் கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கையில் காண்பிக்கலாம் அல்லது காண்பிக்கச் செய்யலாம்.

ஆயின், அத்தகைய விபரத்திரட்டின் அல்லது ஆவணத்தின் மூலத்தை எழுதிய, ஆக்கிய, கையொப்பமிட்ட அல்லது கொடுத்துதவிய ஆளின் கையெழுத்தை அல்லது கையொப்பத்தை ஏதேனும் வழக்கில் நிரூபிப்பது அவசியமாகுமிடத்து அந்நோக்கத்திற்காக மாத்திரம் ஆணையாளர் காண்பிக்கலாம் அல்லது காண்பிக்கச் செய்யலாம்.

ஆயின், மேலும் ஆணையாளர் எவ்வழக்கிலும், ஏதேனும் நீதிமன்றத்தில் அத்தகைய ஆவணத்தின் அல்லது விபரத்திரட்டின் மூலப்பிரதியை அல்லது அத்தகைய ஆவணத்தில் அல்லது விபரத்திரட்டில் அடங்கியுள்ள விபரங்களின் பிரதியொன்றை காண்பிக்குமாறு கட்டாயப்படுத்தலாகாது.

(5) இப் பிரிவில் அடங்கியுள்ளது எது எப்படியிருப்பினும் ஆணையாளர் கணக்காய்வாளர் அதிபதியை அல்லது கணக்காய்வாளர் அதிபதியினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அத்திணைக்களத்தின் எவரேனும் அலுவலரை அவரது உத்தியோகபூர்வ கடமைகளை புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான எவையேனும் பதிவேடுகளை அல்லது ஆவணங்களை அணுகிப் பார்வையிட அனுமதித்தல் வேண்டும். கணக்காய்வாளர் அதிபதி அல்லது இவ்வுட்பிரிவின் கீழ் அவரால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலர் (2) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக இந் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்ற பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஆள் ஒருவராக கருதப்படல் வேண்டும்.

(6) இப் பிரிவில் எது எவ்வாறிருப்பினும் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது ஆணையாளர் நிர்வகிக்கும் வேறேதேனும் நியதிச் சட்டத்தின் கீழ் தனது கடமையை புரிவதில் திணைக்களத்து அலுவலர் ஒருவர் தனது அறிவுக்கு எட்டிய கருமம் எதையும் –

(அ) இந் நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதும் நியதி சட்டத்தின் கீழ் எவரேனும் அலுவலர் ஏதேனும் கடமையை புரிவதற்கு அத்தகைய கருமம் அவசியமாயின் அதனை அவருக்கு தெரிவிக்கலாம்.

(ஆ) ஆள் எவரேனும் வருமானம் தொடர்பானதான எதனையும் இலங்கையின் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதியானவர் அத்தகைய வருமானம் பற்றி அறிவதற்காக ஆணையாளர் கருதக்கூடிய அளவுக்கு மாத்திரம் அவருக்குத் தெரிவிக்கலாம்.

படிவங்களும், கொடுக்கல் வாங்கல் இடாப்பும்.

*101.* ஆணையாளர் காலத்திற்குக் காலம் இந்நியதிச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்காகவும் அல்லது அந்நோக்கங்களுள் எதற்காகவும் பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்களையும் கொடுக்கல் வாங்கல் இடாப்புக்களையும் விதித்துரைக்கலாம் அல்லது அவ்வாறு விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் படிவம் அல்லது கொடுக்கல் வாங்கல் இடாப்பு காலத்துக்குக் காலம் ஆணையாளரினால் திருத்தப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம் அல்லது அவ்வாறு விதித்துரைக்கப்பட்ட எவையேனும் படிவங்களுக்கு அல்லது கொடுக்கல் வாங்கல் இடாப்புகளுக்கு பதிலாக ஆணையாளரினால் வேறு சில படிவங்கள் அல்லது கொடுக்கல் வாங்கல் இடாப்புகள் இடப்படலாம்.

## அத்தியாயம் XXXIV

பொருள் கோடல்.

*102.* இந்நியதிச் சட்டத்தின் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

"ஒட்டு முத்திரை" என்பது, ஒட்டக்கூடியதும் அது தொடர்பில் 74(1) ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்று வலுவிலிருக்கின்றதுமான முத்திரை என்று பொருள்படும்.

"முகவர்" என்பது, வேறு எவரேனும் ஆளின் சார்பில் ஏதேனும் வணிகத்தின் பணிப்பை, கட்டுப்பாட்டை அல்லது முகாமையைக் கொண்டுள்ள எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்.

"வரி மதிப்பீட்டாளர்" என்பது, இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்கென நியமிக்கப்பட்ட மாகாண வரிமதிப்பீட்டாளர் ஒருவர் என்று பொருள்படும் என்பதுடன், சிரேட்ட வரி மதிப்பீட்டாளர் ஒருவரையும் உள்ளடக்கும்.

"பொருள்" என்பது சாமான், பண்டம் அல்லது விவசாய அல்லது தீங்கனியியல் உற்பத்தி எனப் பொருள்படும்.

"அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி" என்பது,
இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆளொருவரின் சார்பில் செயலாற்றவென அவ்வாளினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரும்

(1) (அ) ஏதேனும் விடயத்தில் –

(i) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்றவர்; அல்லது

(ii) ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் ஒருவராக இருக்கின்றவர் ; அல்லது

(iii) சட்டத்தரணி ஒருவராக இருக்கின்றவர் ; அல்லது

(iv) அவ்வாளினால் கிரமமாகத் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊழியர் ஒருவராக இருக்கின்றவர்.

(ஆ) தனியாள் ஒருவரின் விடயத்தில் உறவினர் ஒருவராக இருக்கின்றவர்

(இ) கம்பனியொன்றின் விடயத்தில் அக்கம்பனியின் பணிப்பாளரொருவராக அல்லது செயலாளராக இருக்கின்றவர்.

(ஈ) பங்காண்மையொன்றின் விடயத்தில் அப்பங்காண்மையின் பங்காளர் ஒருவராக இருக்கின்றவர்.

(உ) ஆட்கள் யாக்கம் ஒன்றின் விடயத்தில் அவ்யாக்கத்தின் உறுப்பினரொருவராக இருக்கின்றவர் ஆன எவரேனும் தனியாள் எனவும்

அல்லது

(2) "கம்பனிகள்" (கணக்காய்வாளர்கள்) ஒழுங்கு விதிகளின் கீழ் கணக்காய்வாளராக பதிவு செய்யப்பட்ட தனியாள் ஒருவராகவும் அதிகாரமளிக்கும் பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய கருமங்கள் தொடர்பில் இந் நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆளொருவர் சார்பில் செயலாற்றவென அவ்வாளினால் காலத்திற்குக் காலம் அதிகாரமளிக்கப்பட்டவராகவும் இருக்கின்ற ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட எவரேனும் தனியாள் அல்லது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு அரசிறைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய உள்நாட்டு அரசிறை ஆணையாளர் அதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட தனியாள் என்று பொருள்படும்.

"வங்கி" என்பது, வங்கித் தொழிலைப் புரியும் ஒரு நிறுவனத்தையும் உள்ளடக்கும்.

"வங்கித் தொழில் நிறுவனம்" என்பது, பணச்சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்.

"ஆட்கள் யாக்கம்" என்பது, ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத யாக்கம், கூட்டிணைக்கப்பட்ட, கூட்டிணைக்கப்படாத ஏதேனும் சகோதரத்துவ இணையுரிமை ஆட்கள் கழகம் அல்லது சங்கம் அல்லது ஏதேனும் பங்காண்மை என்று பொருளாகும்.

"வணிகம்" என்பது, ஏதேனும் வணிகப் பொருளை மொத்த விற்பனை மூலமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்றல் என்று பொருளாகும். ஆயினும் உற்பத்தியாளர் ஒருவரிலான விற்பனையை உள்ளடக்காது.

"விதிக்கப்படற்பாலது" என்பது, இந்நியதிச்சட்டம் தொடங்கிய திகதிக்குப் பின்னர் எழுதி நிறைவேற்றப்பட்ட அல்லது முதன்முதலாக எழுதி நிறைவேற்றப்பட்ட சாதனமொன்றின் தொடர்பில் இந்நியதிச்சட்டத்தின் கீழ் முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலது என்று பொருள்படும்.

"ஆணையாளர்" என்பது, மாகாண அரசிறை ஆணையாளர் என்று பொருள்படும் என்பதுடன் இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்கென நியமிக்கப்பட்டவரும் பொதுவாகவாயினுஞ்சரி ஏதாவது விசேட நோக்கத்திற்காகவாயினுஞ்சரி ஆணையாளரினால் அவர் சார்பில் செயலாற்றவென அதிகாரமளிக்கப்பட்டவருமான மாகாண பிரதி அரசிறை ஆணையாளர் ஒருவரை உள்ளடக்கும்.

"கம்பனி" என்பது, இலங்கையில் அல்லது வேறிடத்தில் வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கம்பனி என்று பொருள்படும் என்பதுடன் பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றையும் உள்ளடக்கும்.

"உரித்துமாற்றம்" என்பது, ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை அல்லது மோட்டார் வாகனத்தை அல்லது அவற்றின்கண் உள்ள அக்கறை எதையும் கைமாற்றுவதற்கான சாதனம் ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்.

"சபை" என்பது, அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வடக்கு மாகாண சபையினைக் குறிக்கும்.

"பிரதி ஆணையாளர்" என்பது, இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட பிரதி மாகாண அரசிறை ஆணையாளர் என்று பொருள்படும்.

"புரிவெட்டி" என்பது, சாதனம் ஒன்றின் தொடர்பில் ஏதேனும் முத்திரைத்தீர்வை அல்லது குற்றவிறுப்புச் செலுத்தப்பட்டுள்ளது என்ற நிகழ்வை அல்லது சாதனம் உரிய முறையில் முத்திரையிடப்பட்டுள்ளது என்ற நிகழ்வை அல்லது முத்திரைத் தீர்வை எதுவும் விதிக்கப்படற்பாலதான என்னும் நிகழ்வை எடுத்தியம்புவதற்கு என அல்லது குறித்துக்

காட்டுவதற்கென ஆணையாளரின் பணிப்பின் கீழ் பயன்படுத்தப்படும் ஏதேனும் தகட்டினத்தை, ஆயுதத்தை, கருவியை அல்லது அதன் ஒரு பாகத்தை உள்ளடக்கும்.

''ஆவணம்'' என்பது, ஏதேனும் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஒரு சட்டத்தரணியின் நியமனத்தை, பிராதை, மறுமொழியை பதிலுரையை அல்லது வேறு வழக்குரையை மனுவை, விண்ணப்பத்தை, சத்தியக்கடதாசியை, நியமனத்தை, அழைப்புக்கட்டளையை, தீர்ப்பை, தீர்வையை, ஏதேனும் விபரணத்திலான கட்டளையை, நடுத்தீர்ப்பை, ஆணையை, எழுத்தாணையை, பொருட்பதிவேட்டை, கணக்கை, பொறுப்பாணையை, பிணைமுறியை, விதிப்பாணையை, பிரேரணையல்லாத விண்ணப்பத்தை, வினாக்கொத்தை, வினாக்கொத்துக்கான மறுமொழியை, மேன்முறையீட்டு அறிவித்தலை, செலவுப்பட்டியலை அல்லது ஆணையத்தடைக் கட்டளை அல்லது அறிவித்தலை உள்ளடக்கும்.

''உரிய முறையில் முத்திரையிடப்பட்டது'' என்பது, சாதனம் ஒன்றின் தொடர்பில் அச்சாதனம் தகுந்த தொகைக்குக் குறையாத ஒட்டுமுத்திரை ஒன்றை அல்லது பொறித்திட்ட முத்திரை ஒன்றை அல்லது புறக்குறிப்பீட்டுச் சான்றிதழ் ஒன்றைக் கொண்டுள்ளது எனவும் செலுத்தப்பட்டதற்கான சான்றிதழ் ஒன்று அங்கு இணைக்கப்பட்டுள்ளது எனவும், அத்தகைய முத்திரை ஒட்டு முத்திரை ஒன்றாக இருக்குமிடத்து இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய முத்திரை ஒட்டப்பட்டுப் பொறித்தழிக்கப்பட்டுள்ளது எனவும் பொருள்படும்.

''நிறைவேற்றப்பட்டது'' என்பதும் ''நிறைவேற்றல்'' என்பதும் சாதனமொன்றின் தொடர்பில் பயன்படுத்தப்படும் இடத்து முறையே ''ஒப்பமிடப்பட்டது'' என்றும் ''ஒப்பம்'' என்றும் பொருள்படும்.

''நிறைவேற்றுனர்'' என்பது, இறந்த ஆள் ஒருவரின் நிறைவேற்றுனர் அல்லது நிர்வாகி என்று பொருள்படும் என்பதுடன்

அ. இறந்த ஆள் ஒருவரின் ஆதனத்தை உடமையில் எடுக்கின்ற, அல்லது அதில் தலையிடுகின்ற எவரேனும் ஆளையும் ; அல்லது

ஆ. இறந்த ஆள் ஒருவரின் மரணச்சொத்துத் தொடர்பில் மரண சாதன அதிகாரப்பத்திரம் அல்லது நிர்வாகத் தத்துவப் பத்திரம் வழங்கப்படுவதற்காக அல்லது மீள இலச்சினையிடப்படுவதற்காக மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்துள்ள அல்லது விண்ணப்பம் செய்ய உரித்துடைய எவரேனும் ஆளையும் ; அல்லது

இ. நம்பிக்கைப் பொறுப்பொன்றை ஆக்குநரின் மரண சாதனம் மூலம் உருவாக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் கீழ் செயலாற்றுகின்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரையும் உள்ளடக்கும்.

''நன்கொடை'' என்பது, அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனம் பணமாகவோ பணத்தின் பெறுமதியாகவோ பிரதிபயன் எதுவும் இன்றித் தன்னிச்சையாக ஓராளிடமிருந்து இன்னுமொருவருக்குக் கைமாற்றப்படுதல் என்று பொருள்படும்.

''இயலாதவரான ஆள்'' என்பது, எவரேனும் பராயமடையாதவர், பைத்தியம் பிடித்தவர், மூடன் அல்லது சித்தசுவாதீனமற்ற ஆள் என்று பொருள்படும்.

''பொறித்திட்ட முத்திரை'' என்பது, புரிவெட்டியொன்றின் வழியாகப் பொறித்திட்ட முத்திரை என்று பொருள்படும் என்பதுடன் பத்து ரூபாயை விஞ்சாத முத்திரைத் தீர்வையொன்று விதிக்கப்படற்பாலதான ஏதேனும் சாதனத்தின் தொடர்பில் சபையினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றின் கீழ் பயன்படுத்தப்படும் பெயரச்சுப் பொறியொன்றின் வழியாகப் பொறித்திட்ட முத்திரைகளையும் உள்ளடக்கும்.

''சாதனம்'' என்பது, வடக்கு மாகாணத்தில் அசையாச் சொத்தொன்றின் தொடர்பான அல்லது வடக்கு மாகாணத்தில் வலுவுடையதாக்கப்படும் மோட்டார் வாகனமொன்றின் கைமாற்றம் தொடர்பான ஆவணம் ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்.

''அமைச்சர்'' என்பது, மாகாணத்தின் அமைச்சர்கள் வாரியத்தில் நிதி என்னும் என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சர் என்று பொருள்படும்.

''பணம்'' என்பது, இலங்கை நாணயத்திலாயினுஞ்சரி அன்னிய நாணயத்திலாயினுஞ்சரி எடுத்தியம்பப்பட்ட எல்லாப் பணத்தொகைகளையும் உள்ளடக்கும்.

''மோட்டார் வாகனம்'' என்பது, மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

''அற்றோணித் தத்துவம்'' என்பது, ஏதேனும் சாதனத்தை எழுதி நிறைவேற்றும் ஆளுக்குப் பதிலாகவும் அவ்வாளின் பெயரிலும் செயலாற்றுவதற்கென குறித்துரைக்கப்பட்ட ஆளொருவருக்குத் தத்துவமளிக்கும் ஏதேனும் சாதனத்தை உள்ளடக்கும்.

''ஆள்'' என்பது, ஒரு கம்பனியை அல்லது ஆட்கள் யாக்கத்தை அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தை உள்ளடக்கும்.

''விதித்துரைத்தல்'' என்பது, இந்நியதிச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்.

''மாகாணம்'' என்பது, இலங்கையின் வடக்கு மாகாணம் என்று பொருளாகும்.

''மாகாண சபை அல்லது சபை'' என்பது, வடக்கு மாகாணத்தின் மாகாண சபை என்று பொருளாகும்.

''முந்து பங்காளர்'' என்பது, இலங்கையில் வதிவுள்ள முனைப்பான பங்காளர்களுள் –

அ. பங்காண்மை உடன்படிக்கையில் முதலிற் பெயர் குறிப்பிடப்பட்ட ; அல்லது

ஆ. உடன்படிக்கை இல்லையாயின், பங்குடமையின் வழமையான பெயரில் தனியாக அல்லது ஏனைய பங்காளர்களுக்கு முதலாவது பெயர் மூலம் அல்லது முதலெழுத்துக்கள் மூலம் குறிப்பிடப்பட்ட ; அல்லது

இ. வணிகப் பெயர்கள் கட்டளைச்சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூற்றில் முதலில் பெயர் குறிப்பிடப்பட்ட பங்காளர் என்று பொருளாகும்.

''பகிரங்க அலுவலர்'' என்பது, அரசியல் அமைப்பு உறுப்புரை 170 இல் உள்ள பொருளைக் கொண்டிருப்பதோடு மாகாண பகிரங்க அலுவலரையும் குறிக்கும்.

''காலாண்டு'' என்பது, ஒவ்வோராண்டும் சனவரி முதலாம் திகதி , ஏப்பிறல் முதலாம் திகதி, யூலை முதலாம் திகதி, ஒற்றோபர் முதலாம் திகதி, ஆகிய திகதிகளில் ஆரம்பமாகும் மூன்று மாதங்கள் கொண்ட காலப்பகுதி என்று பொருளாகும்.

''பதிவாளர் நாயகம்'' ''பிரதிப் பதிவாளர் நாயகம்'', ''உதவிப் பதிவாளர் நாயகம்'' என்பது, திருத்தப்பட்ட 1951 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, பிறப்புக்கள் இறப்புக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நியமிக்கப்பட்ட பதிவாளர் நாயகம், பிரதிப் பதிவாளர் நாயகம் மற்றும் உதவிப்பதிவாளர் நாயகம் ஆகியோரைக் குறிக்கும்.

''மாற்றுதல்'' என்பது, ஒரு விற்பனை என்பதுடன், பிரதிபயன் இல்லாத நன்கொடை அல்லது பரிவர்த்தனை அல்லது இறந்த ஆள் ஒருவரின் மரணச் சொத்தின் நிறைவேற்றுநர் அல்லது நிர்வாகியினால் அத்தகைய ஆதனத்தினை பயன்பெறும் உரித்துடைய ஆள் ஒருவருக்கு அல்லது இறந்தவரின் மரண சாதனத்தின் கீழ் நியமிக்கப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவருக்கு அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவரினால் பயன்பெறுநர் ஒருவருக்கு உரித்து மாற்றம் செய்வதை அல்லது பிரதிபயன் இல்லாது இறந்த நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரின் நம்பிக்கைப்

பொறுப்பாளர் அல்லது நிறைவேற்றுநர் அல்லது நிர்வாகி ஒருவரினால் பின்வாழும் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவருக்கு அல்லது புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவருக்கு உரித்து மாற்றம் செய்வதை உள்ளடக்குதல் வேண்டும். ஆயினும் பொதுவில் உள்ள ஏதேனும் காணியைப் பிரிவிடும் உறுதியையோ அல்லது மாற்றுவதற்கான உடன்படிக்கையையோ உள்ளடக்காது.

"நம்பிக்கைப்பொறுப்பாளர்" என்பது, எவரேனும் ஆளின் சார்பில் ஏதேனும் ஆதனத்தின் பணிப்பை, கட்டுப்பாட்டை அல்லது முகாமையைக் கொண்டுள்ள எவரேனும் நம்பிக்கைப்பொறுப்பாளர், பாதுகாவலர், காப்பாட்சியாளர், முகாமையாளர், முகவர் அல்லது வேறு ஆள் என்பவற்றையும் உள்ளடக்கும். ஆயினும் நிறைவேற்றுநரை உள்ளடக்காது.

"பெறுமதி" என்பது,

அ. ஏதேனும் (நன்கொடையாக அளிக்கப்படும் அசையாத ஆதனத்தைத் தவிர்ந்த) ஆதனத்தைப் பொறுத்தமட்டில் ஏதேனும் திகதியில், வரி மதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தின்படி அவ்வாதனம் பகிரங்க சந்தையில் பெற்றுக்கொண்டிருக்க கூடிய விலை எனப் பொருள்படும்.

ஆ. கொடை தருநர் 1977 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31ஆந் திகதிக்கு முன்னர் தேடிப்பெற்ற ஏதேனும் அசையா ஆதனம் நன்கொடையாக அளிக்கப் படுகையில் –

(i) வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி 1977 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31ஆந் திகதியன்று அவ்வாதனம் பகிரங்க சந்தையில் என்ன விலையைப் பெற்றுக் கொண்டிருந்திருக்குமோ, அவ்விலையுடன், அத்திகதிக்குப் பின்னரும், ஆதனத்தை நன்கொடையாக அளிக்கும் சாதனத்தின் திகதிக்கு முன்னரும், ஆதனத்தின் ஏதேனும் திருத்தங்களுக்கும், மாற்றங்களுக்கும், சேர்க்கைகளுக்குமான செலவிற்குச் சமனான தொகையினைக் கூட்டிவரும் தொகை அல்லது

(ii) அத்தகைய ஆதனத்தை நன்கொடையாக அளிக்கும் சாதனத்தின் திகதியன்று அவ்வாதனம் பகிரங்க சந்தையில் விற்கப்படுமாயின் அதன் மூலம் பெற்றுக்கொண்டிருக்கக் கூடிய விலை ஆகிய இரண்டிலும் குறைந்தது எதுவோ, அவ்விலை எனப் பொருள்படும்.

இ. கொடை தருநர் 1977 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31ஆந் திகதிக்குப் பின்னர் தேடிப்பெற்ற ஏதேனும் அசையா ஆதனம் நன்கொடையாக அளிக்கப் படுகையில் –

(i) வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி ஆதனத்தைத் தேடிப்பெற்ற திகதியன்று அத்தகைய ஆதனம் பகிரங்க சந்தையில் விற்கப்பட்டிருந்தால் என்ன விலையைக் கொண்டிருக்குமோ அவ்விலையுடன் அத்திகதிக்குப் பின்னரும் ஆதனத்தை நன்கொடையாக அளிக்கும் சாதனத்தின் திகதிக்கு முன்னரும், ஆதனத்தின் ஏதேனும் திருத்தங்களுக்கும், மாற்றங்களுக்கும், சேர்க்கைகளுக்குமான செலவிற்குச் சமமான தொகையினைக் கூட்டிவரும் தொகை அல்லது

(ii) அத்தகைய ஆதனத்தை நன்கொடையாக அளிக்கும் சாதனத்தின் திகதியன்று அவ்வாதனம் பகிரங்க சந்தையில் விற்கப்படுமானால் அதன் மூலம் பெற்றுக்கொண்டிருக்கக் கூடிய விலை ஆகிய இரண்டிலும் குறைந்தது எதுவோ அவ்விலை எனப் பொருள்படும்.

ஒவ்வாமையின் போது தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.

103. இந்நியதிச் சட்டத்தில் தமிழ் உரைக்கும் சிங்கள உரைக்கும் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

12-433

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.